32°c
கூடிய வெப்பநிலை 41°c
குறைந்த வெப்பநிலை 25°c
தெளிவான. வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 132 வள்ளுவர் ஆண்டு: 2045

பங்குனி 24, திங்கள் 07.04.2014


07 APR 2014

இந்தியா



பக்கம் 25, 26

எந்த ஒரு விசாரணைக்கும் இடம் தரப் போவதில்லை



பக்கம் 14

# டக்ளஸ் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸ் தயக்கம்

## தன்னால் முடியாது என பகிரங்கமாக கைவிரித்தார் சிரேஷ்ட அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று பகிரங்கமாகத்தெரிவித்திருக்கிறது பொலிஸ். தேசிய பொலிஸ் சேவை ஆணைக் குழுவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான ஈ.பி.டி.பி. குழுவினர் தனது வீட்டை விட்டு வெளியேறமறுக்கின்றனர் என்று அதன் உரிமையாளர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

மானிப்பாயில் உள்ளது அவரது வீடு. அதனை ஈபிடிபியினர் வலுக் கட்டாயமாகத் தன்னிடம் இருந்து பறித்தெடுத்தார்கள் என்றும் அதற்கு வாடகை கூட அவர்களால்தரப்படவில்லை என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாததன் காரணத்தாலேயே அவர் தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவை நாடி இருந்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்த முறைப்பாடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முன்கொண்டு வரப்பட்டது. அது குறித்து ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேனவுக்கு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் அதற்கான பதில் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் அமைச்சர் டக்ளஸ்'க்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று விமலசேன தெரிவித்திருக்கிறார். இந்த விடயம் தொடர்பில்

23ஆம் பக்கம் பார்க்க

## வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு

வலி.வடக்கு, ஏப்.7
மாவை கலட்டிப் பகுதியில் உள்ள வீட்டு வளவில் இருந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஆட்லெறி ஷெல் ஒன்று இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டது.

மாவை கலட்டிப் பகுதியில் இடம் பெயர்ந்து மீண்டும் மீளக்குடியேறும் முகமாக வீட்டு வளவைத் துப்புரவு செய்தபோதே குறித்த ஆட்லெறி ஷெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து வீட்டு உரிமையாளர் காங்கேசன்துறை பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அங்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த ஷெல்லை நேற்று மதியம் எடுத்துச் சென்றனர். (ற-86)

# நான்கு வாரங்களுக்குள் விசாரணைப் பொறிமுறை

## துரித கதியில் இயங்குகின்றது நவிப்பிள்ளையின் அலுவலகம்

ஜெனிவா, ஏப்.7
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான சர்வதேசப் பொறிமுறை எதிர்வரும் நான்கு வாரங்களுக்குள் செயற்பட ஆரம்பிக்கும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று கடந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் நிறைவேற்

23ஆம் பக்கம் பார்க்க

## கொடுமைகளைச் செய்துவிட்டு தட்டிக் கழித்துவிட முடியாது

### பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் என்கின்றார் பான்- கீ மூன்

லண்டன், ஏப்.07
"பாதுகாப்பதற்கான பொறுப்பு, என்ற செயற்பாட் டுக்கோட்பாட்டைக் கொள்கையாகக் கொண்டு சர்வதேச சமூகம் இயங்குகின்றது.



இவ்வாறானதொரு நிலையில் அரசுகளினால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள் உள்ளிட்ட கொடுமைகளை வெறும் உள்நாட்டு விவகாரம் என்று சொல்லி தட்டிக்கழித்து விட முடியாது. அத்தகைய கொடுமைகள் உலக சமூகத்தின் அக்கறை வரம்புக்கு அப்பாற்பட்டவை அல்ல என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் - கி மூன்.

ருவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் 20

23ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச. பஸ் - சைக்கிள் மோதியதில் ஒருவர் சாவு

### யாழ். ஐந்து சந்திப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.7
இ.போ.சவுக்குச் சொந்தமான பஸ்ஸும், சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் நடந்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளையின் நாய் கூட எம்மை விசாரிக்க முடியாது

### திட்டவட்டமாகக் கூறுகின்றார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஏப்.7
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் உள்ளகச் செயற்பாடுகளில் தலையீடு செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை. நவிப்பிள்ளை அம்மையார் மட்டு மல்ல, அவரது நாய் கூட இலங் கைக்கு வந்து விசாரணை செய்ய அனுமதிக்க மாட்டோம் - இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

பதுளையில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

"தற்போது ஜெனிவா பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏன் நாம் அதனை எதிர்க்கின்றோம்?. எமக்கென்று மகத்துவம் உள்ளது. நாட்டில் உள்ள உள்ளக விவகாரங்களில் வெளித் தரப்பினர் தலையீடு செய்வதை நாம் விரும்ப

23ஆம் பக்கம் பார்க்க

## துன்புறுத்தல்கள் தொடர்பாக பத்திரிகையாளர் முறையிடலாம்

கொழும்பு, ஏப்.7
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் மற்றும் ஒரு பகுதியாக பத்திரிகையாளர் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக இணையத்தளம் வழியாக இலங்கைப் பத்திரிகைச் சபையிடம் முறையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நடவடிக்கைகள் திட்டத்தில் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பல ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் அதன் முக்கிய பரிந்துரைகளில் ஒன்றாக ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை, எடுக்கபட்டது என அரசு அறிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் தாம் எதிர்நோக்குகின்ற ஆபத்து,

23ஆம் பக்கம் பார்க்க

## கிண்ணம் வென்றது இலங்கையணி ரசிகர்கள் வெடிகொளுத்தி மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.7
நேற்று நடைபெற்ற '20/20' உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியை வீழ்த்தி இலங்கை அணி தனது முதலாவது '20/20' உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டி யாழ்.நகரின் பொது இடங்கள் பலவற்றிலும்

23ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கு மீள்குடியமர்வு என்பது எந்தக் காலத்திலும் சாத்தியமற்றது

### யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மீள்குடியமர்வுக்கு அனுமதிப்பதென்பது சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.

மீள்குடியேற்றம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவுக்கும் இடையே சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக்

23ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக முன்னிலையாக மறுத்த சட்டத்தரணிகள்

யாழ்ப்பாணம், ஏப்.07
வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முதலமைச்சர் சார்பில் முன்னிலையாகுவதற்கு சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர், தனது பதவி நீக்கத்திற்கு எதிராகக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூவரை உள்ளடக்கிய குழுவினர் வழக்

23ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வதேச விசாரணைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கோம்

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

கொழும்பு, ஏப்.7

சர்வதேச ரீதியான விசாரணைகளுக்கு இடமளிக்கப்பட முடியாது என்று தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் உதய கம்மன்பில, எந்தவொரு நாடும் தனது இறைமையை பணயம் வைக்க விரும்புவதில்லை. எனவே, குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக ரீதியான விசாரணைகளே பொருத்தமானதாக அமையும் என்றும் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினருக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெறுமனே நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையிலான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

கிருசாந்தி குமாரசுவாமி பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு இராணுவ வீரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

40, 000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எவ்வித ஆதாரங்களும் கிடையாது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# குடும்பநல உத்தியோகத்தர் புறக்கணிப்பு தொடர்கிறது

குடும்ப நல உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர்களுக்கான பிரசவம் தொடர்பானபயிற்சிகளை உடன் நிறுத்துமாறு கோரி குடும்பநல உத்தியோகத்தர்கள்கடந்த 2ஆம் திகதி முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கு உறுதியான முடிவுகள் எவையும் இதுவரை கிடைக்காத காரணத்தால் பணிப்புறக் கணிப்பு போராட்டம் தொடர்ந்து நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச குடும்ப நல சுகாதார சேவைகள் சங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் வட மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த குடும்ப நல உத்தியோகத்தர்களை பணிப்புறக்கணிப்பில் தொடர்ந்து ஈடுபடுமாறும் - வைத்திய சாலைகளில் கடமையாற்றும் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் பிரசவ அறைகளில் மட்டும் தமது பணிகளைமேற்கொள்ளுமாறும் வட மாகாண சங்கத் தலைவி திருமதி சசிகலா பவளலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-400)

# புலிகளுடைய ஆவணங்களை கொண்டே தடைசெய்யப்பட்டோர் பட்டியல் தயாரானது

## மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.7

முல்லைத்தீவு போர் முனையில் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே வெளிநாடுகளில் செயற்படும் 16 புலம்பெயர் அமைப்புக்களையும், 424 தனிநபர்களையும், தடை செய்யும் பட்டியல் தயாரிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்த 16 அமைப்புக்கள் மற்றும் 424 தனிநபர்களும், பயங்கரவாதத்துக்கு நிதியளிக்கும் சந்தேக நபர்களாகவே பட்டியலிடப்பட்டுள்ளனர். இவர்கள் மீது இப்போது தடை விதிக்கப்பட்டிருப்பதாக அர்த்தம் இல்லை. அவர்களைத் தடை செய்வதற்கு அல்லது விலக்கி வைப்பதற்கு நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் வெளிநாடுகளில் அதன் வலைப்பின்னல் இன்னும் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றது. அதனை எம்மால் நிரூபிக்க முடியும்.

நாம் முல்லைத்தீவில் பெருந்தொகையான ஆவணங்களை கைப்பற்றினோம். அவர்கள் நிதியை எப்படித் திரட்டினார்கள், புலிகளுக்கு இங்கு எப்படி அனுப்பினார்கள் என்ற விவரங்கள் அவற்றில் உள்ளன. அவற்றில் புலிகளின் மூத்த தலைவர்களின் குறிப்புகளும் அடங்கும். அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள எவரேனும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினால் இலங்கை நீதிமன்றங்களில் அந்த உத்தரவுக்கு எதிரான சவால்விட முடியும். அவர்கள் இங்கு வந்து தம்மை நிரூபிக்க முடியும்.

எதிர்காலத்தில் இன்னும் பல அமைப்புகள், தனிநபர்களின் பெயர்களும் வர்த்தமானியில் வெளியிடப்படக் கூடும்.

இலங்கையினது அனைத்துலக இராஜதந்திரத் தூதரகங்களின் மூலம் இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் தொடர்பாக, ஐ.நா தீர்மானத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட நாடுகளிடம் கோருவோம்."- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# சிங்கள மொழியை கற்கவே அதிகளவானோர் ஆர்வம்

## மும்மொழி கற்கை நெறியின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

சிங்களமொழியைக்கற்பதற்கே, அதிகளவானோர் ஆர்வம் கொண்டு விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவித்த மும்மொழிக் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் விண்ணப்பித்தவர்களில்ஒருதொகுதியினருக்கு மாத்திரமே தற்போது கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

மும்மொழி கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வுகள், கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அதன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள லிலானி சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்கை நெறி ஒரு வருடத்தைக் கொண்டதாக அமையும். சிங்கள மொழியைக் கற்பதற்கு ஆயிரத்து 65 பேரும், ஆங்கில மொழியைக் கற்பதற்கு 250 பேரும்தமிழ்மொழியைக் கற்பதற்கு 12 பேரும், சிங்களம் - ஆங்கிலம் இரு மொழிகளையும் கற்பதற்கு ஆயிரத்து 858 பேருமாக 3 ஆயிரத்து 188 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் ஆயிரத்து 470 பேருக்கேமுதற்கட்டமாகபயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிலுனர்கள் மூன்று நாள்கள் வகுப்புக்கு தொடர்ச்சியாக சமூக மளிக்காவிட்டால், நீக்கப்படுவார்கள்"- என்று தெரிவித்தார்.

(தொடர்புபட்ட செய்தி 5 ஆம பக்கத்தில்) (ற-5-86)

# வெளிநாட்டு ஆட்சியினாலேயே மொழிப் பிரச்சினை ஏற்பட்டது

## மும்மொழித் திட்டத்துக்கான ஒருங்கிணைப்பாளர் சுனிமல் பெரேராவின் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.07

வெளிநாட்டவர்கள் இலங்கையை ஆட்சிசெய்ய முன்னர் இங்கு ஒற்றுமை நிலவியது. கல்வி என்பது பௌத்த மன்னர்களிடமும் அவர்களது பிரிவேனாக்களில் மாத்திரமே இருந்தது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதியின் மும்மொழித் திட்டத்துக்கான ஒருங்கிணைப்பாளர்சுனிமல்பெரேரா.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மும்மொழிக் கற்கை நெறியின்அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையைப் போர்த்துக்கீசர்கள் கைப்பற்றுவதற்கு முன்னர் இங்கு எந்த மொழிப் பிரச்சினையும்இருக்கவில்லை. அவர்கள் தமது ஆட்சியை இலகுபடுத்துவதற்காக இங்குள்ள மொழிப் பிரிவுகளைப் பயன்படுத்திக் கொண்டனர். கல்வி என்பது பௌத்த மன்னர்களிடமே கட்டமைப்பு சார்ந்ததாக இருந்தது. இலங்கையைப் போர்த்துக்கீசர்கள் கைப்பற்ற முன்னர் 5 பிரிவேனாக்கள் இங்கு இருந்தன. ஐந்து பிரிவேனாக்களிலும் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. இங்கு தமிழ் மொழி இரண்டாவது மொழியாக கட்டாயமாக்கப்பட்டு கற்பிக்கப்பட்டது.

### வெளிநாட்டவரே குழப்பத்துக்கு காரணம்

இந்தப் பிரிவேனாக்கள் பௌத்த மத குருமார்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. இங்கு தமிழ் தெரியாதவர்களை புறக்கணிக்கப்பட்ட மனிதர்களாகவே நோக்கினார்கள். அந்தளவு தூரம் அந்தக் காலத்தில் அவர்கள் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.

அதேபோல் வடக்கிலிருந்த தமிழ் மன்னர்கள் பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும், சிங்கள மன்னர்கள் தமிழுக்கும்இந்து சமயத்துக்கும் உதவி செய்தார்கள். இருதரப்பினரும் பரஸ்பர ஒத்துழைப்புடனேயே செயற்பட்டனர். பௌத்த மதத்தில், இந்துக் கடவுள்களையே முதன்மையாக வணங்குகின்றனர். அந்தளவு தூரம் ஒருங்கிணைப்பாகவே இருந்தனர். இலங்கையை வெளிநாட்டவர் கைப்பற்றும் வரையிலேயே இவ்வாறு இருந்தது.

### இலங்கையை ஒருங்கிணைக்கின்றது

பன்முகத் தன்மை கொண்ட எமது நாடு, இன்றும் அதே போன்றதொரு பன்முகத் தன்மைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றது.

தென்னிலங்கையில் பாடசாலை மாணவர்கள் தமிழ மொழியைக் கற்க விரும்புகின்றனர். அந்தளவு தூரம் தென்னிலங்கையில் தமிழ் மொழி முக்கியத்துவமாகியிருக்கின்றது" - என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், இலங்கையை ஒருங்கிணைக்கும் திட்டமாகவே மும்மொழிக் கற்கை நெறி நடைமுறைப்படுத்தப்படுவதை இந்திய அரசு ஊக்குவிப்பதாக தெரிவித்தார். (ற-5)

# இந்தியாவுக்கான தூதர் சுதர்சன் செனிவிரத்ன?

கொழும்பு, ஏப்.7

இந்தியாவுக்கான புதிய தூதுவராக சுதர்சன் செனிவிரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

வெளிநாடுகள் சிலவற்றுக்கான இலங்கையின் புதிய தூதுவர்களை நியமிப்பது தொடர்பாக உயர்பதவிகளுக்கான நாடாளுமன்றத்தின் குழு இந்த மாதம் பரிசீலனை மேற்கொள்ளவுள்ளது. மூத்த இராஜதந்திரிகளான, பிரசாத் காரியவசம், அமெரிக்காவுக்கும், கருணாதிலக அமுனுகம, ஜேர்மனிக்கும், சரத் கோன்ககே, தென்னாபிரிக்காவுக்கும், சுதர்சன் செனிவிரத்ன இந்தியாவுக்குமான தூதுவர்களாக பெயர் முன்மொழியப்பட்டுள்ளனர்.

2009ம் ஆண்டு டிசெம்பரில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்ட, பிரசாத் காரிய வசம் தமது பணிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார். பல்வேறு நாடுகளில் இராஜதந்திரியாகப் பணியாற்றிய இவரை அமெரிக்காவுக்கான புதிய தூதுவராக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதுவர் சரத் கோன்ககேயின் பணிக்காலம் வரும் ஜூன் மாதம் நிறைவடையவுள்ளது. இவரை தென்னாபிரிக்காவுக்கான தூதுவராக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ள சுதர்சன் செனிவிரத்ன, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல்துறை பேராசிரியராகப் பணியாற்றி வரும் ஒரு கல்வியாளர் ஆவார். இவர் முன்னர் இராஜதந்திரியாகப் பணியாற்றியவரல்ல.

அதேவேளை அவர் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பரும், நலன்விரும்பியும் என்று கூறப்படுகின்றது.

தொல்லியல் ஆய்வுகள் தொடர்பாக இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருப்பவர் என்ற ரீதியில் புதுடில்லியில், இலங்கைக்கு சாதகமான நிலையை உருவாக்கிக் கொள்வதற்காகவே, இவரை இலங்கைத் தூதுவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ற)


## மேலும் ஒரு மறுக்கப்பட்ட விசா வென்றோம் (Refusal)

வட்டு வடக்கு, கலைநகர் சித்தன்கேணியைச் சேர்ந்த

பண்ணாகம் மெய்கண்டான் ஆசிரியர் திருமதி கமலாதேவி அருட்பிரகாசம்

இங்கிலாந்தில் 05.04.2014 நடைபெற்ற தமது மகனின் திருமணத்தில் பங்கு பெறுவதற்காக கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றில் ஆலோசனை பெற்று விசா விண்ணப்பித்தார்.

அது நிராகரிக்கப்பட்ட நிலையில் எமது வலுவான சட்ட வழிகாட்டலில் மேற்படி விசா வென்று மகனின் திருமணத்தில் மகிழ்வோடு பங்கேற்றார்.

எனவே எந்த வகை விசா ஆலோசனைக்கும்

கொழும்பும் வேண்டாம் கொழும்பிலிருந்து வந்தோரும் வேண்டாம். திசைகாட்டியே உறுதுணையுண்டு.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

021 2219016, 021 4993501

www. thisaivisa.com



# வீதிகளில் நடமாடும் மக்களைத் திணறடிக்கும் கழிவுகளை ஏற்றிச் செல்லும் டிராக்டர்கள்

## மாமிசக் கழிவுகளை திறந்த நிலையில் ஏற்றிச் செல்வதால் சகிக்க முடியாத துர்நாற்றம்



கழிவுகளை ஏற்றிய நிலையில் நிற்கும் டிராக்டர்

கொழும்புத்துறை, ஏப்.7
யாழ். மாநகர சபைப் பகுதிகளில் சேரும் கழிவுகளை அகற்றும் டிராக்டர்கள் செல்லும் போது வீசும் துர்நாற்றம் சில வேளைகளில் வீதியால் பயணிப்பவர்களைத் திணறடித்து விடுகிறது.

திறந்த நிலையில் உள்ள டிராக்டர் பெட்டிகளில் கோழி இறைச்சிக் கடைகள், மாட்டிறைச்சிக் கடைகளில் சேரும் மாமிசக் கழிவுகளை ஏற்றிச் செல்லும் போதே சகிக்க முடியாத துர்நாற்றம்வீதியெங்கும்பரவுகிறது. டிராக்டர் செல்லும் பாதைகளில் குடியிருப்போரும், வீதிகளில் பயணிப்போரும் மூக்கைப் பொத்திய படி செயற்பட வேண்டியுள்ளது.

மாமிசக் கழிவுகள் நாள்பட்ட நிலையில் ஏற்றி வரப்படுவதாலேயே அனைவரையும் குமட்டும் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். இவ்வாறான கழிவுகளை மூடி எடுத்துச் செல்லக் கூடிய வாகனங்களில் ஏற்றி அகற்றலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ-135)

# கலாசார அபிவிருத்திகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு


அச்சுவேலி, ஏப். 7
பிரதேச செயலர் பிரிவு வாரியாக கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்தி ருப்பதோடு 2014 ஆம் ஆண்டில் முன்னெடுக்கக் கூடிய கலாசார அபிவிருத்தி வேலைத் திட்டமாதிரி அட்டவணை ஒன்றையும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.**

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருப்பதோடு 2014 ஆம் ஆண்டில் முன்னெடுக்கக் கூடிய கலாசார அபிவிருத்தி வேலைத்திட்டமாதிரி அட்டவணை ஒன்றையும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கலாசார நிகழ்ச்சித்திட்டம் ஆறு வகைகளாக ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதோடு ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்தப்படும் தொகையின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

கலைமன்றங்களின் அபிவிருத்தி, பாரம்பரிய கலைசார் பயிற்சி வழங்கல், பிரதேசம் சார்ந்த வெளியீடுகளுக்கான உதவி, பிரதேச கலாசாரவிழா, பிரதேச கலாசார விழிப்புணர்வு, அருகி வரும் பிரதேச கலை வடிவங்களை ஒழுங்கமைத்து ஆவணப்படுத்தல் என்ற வகையில் நிதியைக் கையாளுவதற்கு வகைமாதிரி குறிப்பிட்டு திட்ட நடவடிக்கை அட்டவணையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-11)




# இந்த அதிசயத்தைப் பார்த்தீர்களா...?

யாழ்ப்பாணம், ஏப்.7
பனம் பாளையில் நுங்குக்குப் பதிலாக பனம் வடலி வித்தியாசமாக முளைத்துள்ளமை வீதியால் செல்வோரை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

அரியாலை கிழக்கு வீதி பூம்புகார் கட்டடப்பகுதியில் வீதியோரமாக உள்ள பனை மரத்தில் பனம் பாளைக்குப் பதிலாக பனைவடலிகள் இவ்வாறு வித்திதிரமாக முளைத்துள்ளன. வழமையாக நுங்கு காய்க்கும் இடத்தில் இவ்வாறு பனம் வடலி முளைத் துள்ளதால் வீதியால் செல்வோர் அங்கு நின்று பார்வையிட்டுச் செல்கின்றனர். (ஒ-14-20)

# திருக்கேதீஸ்வரம் பிரதான வீதியிலுள்ள விநாயகர் சிலை விஷமிகளால் சேதம்



மன்னார், ஏப்.07
மன்னார் தள்ளாடி- திருக்கேதீஸ்வரம் (ஏ-32) பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக இந்துமத பிரதம குரு ஐங்கர சர்மா தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தள்ளாடி-திருக்கேதீஸ்வரம் (ஏ-32) பிரதான வீதியில் பல வருடங்களுக்கு மேலாக உள்ள குறித்த விநாயகர் சிலையை திருக்கேதீஸ்வர கிராம மக்கள் பாதுகாத்து வந்தனர். குறித்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் விநாயகர் சிலையை வழிபட்டு வந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த சிலை நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாத விஷமிகளால் உடைக் கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை அந்தப் பகுதியூடாகச் சென்ற மக்கள் அதனைக்கண்டு உரிய தரப்பினருக்குத் தெரியப் படுத்திய நிலையிலேயே குறித்த சிலை உடைக்கப்பட்ட சம்பவம் தெரிய வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (வ-56)

# மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.7
மலேரியா தடுப்புப் பிரிவினரால் அல்லைப்பிட்டி றோ.க. பாடசாலையைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கும் மண்கும்பான் அ.த.க.பாடசாலை மாணவர்கள் ஐம்பது பேருக்கும் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரன் மேற்படி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (வ-7)

# குடும்பஸ்தர் வீழ்ந்து பாதிப்பு

தென்மராட்சி, ஏப்.07
உயரமான இடத்திலிருந்து வீழ்ந்து பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மீசாலையில் இடம் பெற்றது. மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா சண்முகதாஸ் (வயது-62) என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். (வ-9)

# ஊர்காவற்றுறை மக்களுடனான சந்திப்பு இன்று முதல் ஆரம்பம்

## அபிவிருத்தித் திட்டம் தொடர்பில்

ஊர்காவற்றுறை, ஏப்.7
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள் ளார்.

இதற்கமைய மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட கலந்துரையாடல் கரம்பன் மேற்கு ஜே/54 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மெலிஞ்சிமுனை இருதயராசா சனசமூக நிலையத்திலும், ஊர்காவற்றுறை ஜே/49 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும்-

நாளை செவ்வாய்க்கிழமை நாரந்தனை தெற்கு ஜே/58 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முற்பகல் 10 மணிக்கு சூரியாவத்தை பொது மண்டபத்திலும், பருத்தியடைப்பு ஜே/50 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு பருத்தியடைப்பு கதிரேசன் கோயில்பொது மண்டபத்திலும்-

நாளை மறுதினம் புதன் கிழமை நாரந்தனை ஜே/57 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முற்பகல் 10 மணிக்கு நாரந்தனை றோ.க.த.க.பாடசாலையிலும், கரம்பன் ஜே/51 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும்-

வியாழக்கிழமை சுருவில் ஜே/59 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு ஐயனார் சனசமூக நிலையத்திலும், புளியங்கூடல் ஜே/60 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மாலை 5 மணிக்கு மகாமாரி சனசமூக நிலையத்திலும் கலந்துரையாடல் இடம்பெறும். (ஓ)

# ஆவணங்களைத் தவறவிட்டோர் சேமலாப நிதியைப் பெறலாம்

## வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
வடமாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதற்கு அதற்குரிய ஆவணங்களை தவறவிட்டோர் அந்தக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"கடந்த கால அசாதாரண சூழ்நிலை, இடம்பெயர்வு போன்றவற்றால் அதிகமானோர் ஊழியர் சேமலாப நிதிக்கான ஆவணங்களை தவறவிட்டுள்ளனர்.

எனவே குறித்த ஆவணங்களைத் தவறவிட்டதால் அதிகமானோர் இந்தக்கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு சிரமப்பட்டு வந்தனர்.

தற்போது தொழில் திணைக்களம் இதற்கென விசேட ஏற்பாடாக ஆவணங்கள் இன்றி உரிய தேடுதல் மூலம் இந்தக் கொடுப்பனவுகளை துரிதமாக உரியவர்களுக்கு விநியோகித்து வருகின்றது.

ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதற்கு ஆவணங்களைத் தவறவிட்ட அநேகமான பயனாளிகள் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர்"- என்றார். (வ-7)

# சிறிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கும் முட்டுக்கட்டையாகவே உள்ளது மத்திய அரசு

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.7

வடக்கு மாகாண சபையூடாக தமிழர்களுக்கு தீர்வு கிடைத்து விடவில்லை சிறிய வேலைத் திட்டங்களை முன்னெடுப் பதற்கும் மத்திய அரசின் தலையீடுகள் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளது என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

அன்னாசிப் பழச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்தில் வயல் விழா நிகழ்வு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சைலாபானு தலைமையில் வவுனியா மாவட்டப் பிரதி விவசாயப் பணிமனை வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது:-

மாகாண சபையின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஏதோ ஒரு வடிவில் மத்திய அரசும் இரா ணுவமும் தலையீடு செய்கின்றன. வடமாகாண சபையின் மூலம் தமிழர் களின் பிரச்சி னைக்கு தீர்வுகண்டு விட்ட தாக உலகத் துக்குக் காண் பிக்க முயலும் அரசு மறுபுறம், மாகாண சபை யின் ஊடாக நாம் எமது மக்களுக்குச் செய்யக் கூடிய குறைந்த பட்சப் பணிகளைக் கூட செய்யவிடமால் தலையிடுகிறது.

எமது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால் மாத்திரமே இந்தத் தலையீடுகளை இல்லாமற் செய்ய லாம். அப்போதுதான் எமது விவசாயப் பொருளாதாரத்தை எமக்கேற்றவாறு நாம் மேம் படுத்தமுடியும்.

வடமாகாணத்தின் விவசாய அபிவிருத்திக்கென மாகாண விவசாய அமைச்சு இருக்கிறது. இந்த அமைச்சின் கீழ் ஒரு மாகாண விவசாயப் பணிப்பாளரும் ஐந்து பிரதி விவசாயப் பணிப்பாளர்களும் உள்ளனர். மாவட்டங்களின் விவசாய விரிவாக் கத்துக்கெனப் பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் இருக்கும் போது, அவர்களுக்கு மேலதிகமாக மாவட்டச் செயலகங்களில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களை மத்திய அரசு நியமித்து வைத்திருக்கிறது.

இது வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயற்பாட்டு உரிமைகளைப் பறிக்கின்ற, மாகாண நிர்வாகத்துக்கு இடையூறு செய்கின்ற ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் அன்னாசிப்பழம் தென் இலங்கையில் தான் விளையும் என்கின்ற நிலைமாறி, இப்போது வவுனியாவிலும் விளைவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் அதிகளவில் அன்னாசி பயிரிடப்படும் கம்பஹா, குருநாகல், பகுதிகளில் விளையும் அன்னாசிப் பழங்களை விட வவுனியாவில் விளைந்துள்ள பழங்கள் இனிப்புச் சுவை கூடுதலாக உள்ளன. பளை, இயக்கச்சி போன்ற பிரதேசங்களில் தென்னை மரங்களுக்கு இடையே ஊடு பயிராக அதிக அளவில் அன்னாசியை வளர்ப்பதற்கான வாய்ப்பான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு விவசாயப் பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்கென எத்தனையோ வாய்ப்புகள் வடமாகாணத்தில் இருந்தபோதும் மத்திய அரச நிர்வாகம் அதற்கு ஒத்துழைப்பதாக இல்லை.

மத்திய அரசு பாதீனியம் ஒழிப்பதற்கென யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள விவசாயப் பணிப்பாளருக்கு 3 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதேவேளை மாகாண விவசாய அமைச்சும் பாதீனியத்தை அழிப்பதற்கு 15 நாள் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

பொருளாதார ரீதியாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களையும், யுவதிகளையும் பயன்படுத்தி, உலக உணவுத் திட்டம் வழங்கிய அரிசியையும் பருப்பையும் அவர்களுக்கு கொடுப்பனவாக வழங்கியே இந்தத்திட்டத்தை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

இவ்வாறு பல்வேறு நடவடிக்கைகள் மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது"- என்றார். (வ-14)

# பாலு, கனிமொழிக்கே சேது திட்டத்தால் பயன்

## இவ்வாறு கூறுகிறார் ஜெயலலிதா



ஜெயலலிதா

சென்னை, ஏப்.7

சேது சமுத்திரத் திட்டத்தால் டி.ஆர். பாலுவும், கனி மொழியுமே பயனடைவர் மொத்தத்தில் இது ஒரு சுயநலத் திட்டம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்;

சேது சமுத்திரக் கால்வாயில் பயணிக்கும் கப்பலின் ஆழம் 10 மீற்றருக்கு மேல் இருக்கக் கூடாது என்ற வகையில்தான் இந்தத் திட்டம் வடிவமைக் கப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கால்வாயில் 20,000 தொன் எடை கொண்ட கப்பல்கள் தான் செல்ல முடியும். இது போன்ற சிறிய கப்பல்கள் தற்போது மிகவும் குறைவு.

தற்போது உலகில் ஆழம் அதிகம் கொண்ட கப்பல்கள் தான் வடிவமைக்கப்படு கின்றன.

தூத்துக்குடி துறைமுகத்தில் பெரும்பாலும் பெரிய சரக்குக் கப்பல்கள்தான் வந்து செல்கின்றன. இந்தப் பெரிய கப்பல்கள் சேது சமுத்திரக் கால்வாய் வழியாகச் செல்லவே முடியாது.

எனவே, சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தால் பெரிய கப்பல்கள் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வர முடியும் என்பதும், இந்தத் திட்டத்தால் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்து போகும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதும் பொய்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் அதிகமானோருக்கு குருதிச் சோகை

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு வருவோரில்

தென்மராட்சி, ஏப்.7

சாவகச்சேரி மருத்துவமனைக்கு வரும் 80-90 வீதம் வரையான ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான குழந்தைகளுக்கு இரத்தச் சோகை நோய் ஏற்பட்டுள்ளது என இனங்காணப்பட்டது.

பாதிக்கப்படும் குழந்தைகளின் போஷாக்குத் திட்டத்தை அதிகரிக்க இரத்தச் சோகையால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கென புதிதாக கிளினிக் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இடம்பெற்ற நோயாளர்களுக்கான மருந்து விநியோகம் மற்றும் சிகிச்சை வழிமுறைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் மருத்துவ அதிகாரிகளாலும் தாதிய உத்தியோகத்தர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில்தேவையான அளவு நிறை இல்லாதிருப்பின் மூளை வளர்ச்சி, நரம்பு வளர்ச்சி, எலும்பு வளர்ச்சி போன்றவை பாதிக்கப்பட்டு மந்த புத்தியுள்ள சுறுசுறுப் பற்ற பிள்ளையாக மாறும் அபாயம் உள்ளது.

இவ்வாறான பாதிப்புகளால் எதிர்காலத்தில் அறிவுக் கூர்மை மற்றும் தேகாரோக்கியமான சமூகம் கிடைக்காமல் போய்விடும்.

போஷாக்குக் குறைவால் ஏற்படுகின்ற குழந்தைகளுக்கு மேலோட்டமான கவனம் எடுக்காமல் ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியே பராமரிக்கப்படல் வேண்டும். பிள்ளையின் குடும்ப நிலை தொடர்பான சமுதாயச் சூழல், குடும்பப் பிரச்சினைகள் , உணவுப்பழக்க வழக்கங்கள், சுகாதார பாவனை போன்றவை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு போஷாக்கு அடி மட்ட உயர்வு வரை பராமரிக்க வேண்டும் என்றும் கருத்து முன்வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆதார மருத்துவமனையில் குழந்தைகளுக்கான கிளினிக் நடத்திய தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் குமுதினி கலையமுகன் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 55 பிள்ளைகளுக்கு சுகாதாரத் திணைக்களம் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் தொடர் பராமரிப்பின் பயனாக போஷாக்கு அடைவு மட்டம் வரை பராமரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஆதார மருத்துவமனையில் நடத்தப்படும் குழந்தைகள். கிளினிக்குக்கு மேலதிகமாக இரத்தச் சோகையால் பீடிக்கப்படும் சிறுவர்களுக்கென தனியான கிளினிக் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இரத்தச் சோகையால் பாதிக் கப்பட்டுவரும் குழந்தைகளை ஆரோக்கியமான குழந்தைகளாக மாற்ற சுகாதாரத் திணைக்களத்திடமும் பிரதேச நலன் விரும்பிகளிடமும் இருந்து ஆக்க பூர்வமான போசாக்கு உணவுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. (வ)

# ஈழத் தமிழரைப் பாதுகாக்க தவறி விட்டது காங்கிரஸ்

## சாடுகிறது பா.ஜ.க.



நிர்மலா சீதாராமன்

சென்னை, ஏப்.7

இலங்கை இறுதிப்போரில் இலங்கையை இந்தியா ஆதரிக்கவில்லை என்று பாரதீய ஜனதாக் கட்சி தெரி வித்துள்ளது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரில் இந்தியாவை ஆளும் காங்கிரஸ் அரசு, உள்ளூர் அரசியல் காரணங்களினால் இலங்கையை கூடுதலாக ஆதரிக்க வில்லையென பா.ஜ.க. குற்றம் சாட்டியிருப்பதன் பொருள் என்ன என்பது குறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதா ராமனிடம் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிப்போரின் போது தமிழ் மக்களை காப்பாற்றுவதற் காக காங்கிரஸ் அரசு சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போர் முடிவடைந்த பின்பும் தமிழ் மக்களைப் பாதுகாப்பாக அவர்களது பிரதேசங்களில் வசிப்பதற்கான வதிகளை இந்திய ஆளும் அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாமை தவறு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசை வலியுறுத்தி தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய இந்திய அரசு, பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்தமை தவறு என்று நிர்மலா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் பிரதமர் மன்மோகன் சிங் அனைத்து தரப்பையும் குழப்பத்துக்கு உட்படுத்தி இறுதி நேரத்தில் பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்தமையினால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### இலங்கையிலிருந்து மதுரைக்கு தங்கம் கடத்தியவர் கைது

இலங்கையிலிருந்து மதுரைக்கு தங்கம் கடத்திய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுரை விமான நிலையத் துக்கு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் இருந்து தனியார் விமானம் வந்திறங் கியது. அந்த விமானத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இருந்த 3 பயணிகளிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்ததால் அவர்கள் மீது சந்தேகம் மேலும் வலுத்தது. இதனால் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது ஒருவர் ஆசனவாயில் 330 கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகளை மறைத்து வைத்து இருந்தது தெரிய வந்தது. அதன் மதிப்பு ரூ.8 லட்சம் ஆகும். அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)


## மரண அறிவித்தல்



### தங்கம்மா அப்புத்துரை

குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா அப்புத்துரை நேற்று (06.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்புமனைவியும் குணலிங்கம் (கொலன்ட்), பேபிசறோசா, தர்மரத்தினம், அருமைநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் சுசிலாதேவி (கொலன்ட்), சுப்பிரமணியம், நாகேஸ்வரி காலஞ்சென்ற குணாம்பாள் ஆகியோரின் பாசமிகு மாமியும் கலைசெல்வி (சுவிஸ்), திருச்செல்வன் (கனடா), செல்வக்குமார் (கொலன்ட்), ராதிகா (கொலன்ட்), சிவதுர்க்கா (ஆஸ்திரேலியா), முருகதாஸ் (பிரான்ஸ்), வர்சினி, சண்முகதாஸ் (பிரான்ஸ்), தர்மநாயகி, தர்மநாதன், தாட்சாயினி, தர்மகுமார், தர்மினி, பார்த்தீபன் (சுவிஸ்), சுலக்சனா, சுதர்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (07.04.2014) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம், கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
075 0398667, 077 7793645

# இந்திய, தென்னிலங்கை புடைவை வியாபாரிகள் குடாநாட்டுக்குள்

## புதுவருட வியாபாரத்துக்காக பிரவேசம்

யாழ்ப்பாணம், ஏப்.7

குடாநாட்டில் சித்திரைப் புதுவருடத்துக்கான வியாபார நடவடிக்கைகளுக்காக இந்தியப் புடைவை வியாபாரிகளும், தென்னிலங்கை வியாபாரிகளும் தாராளமாக உள்நுழைந்துள்ளனர்.

எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்புக்கான நுகர்வு நடவடிக்கைகளில் குடாநாட்டு மக்கள் ஆரம்பித்துள்ள நிலையில் இந்தியப் புடைவை வியாபாரிகள் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், தென்னிலங்கை வியாபாரிகள் மூலை முடுக்குகள் தோறும் தமது வாகனங்களை நிறுத்தி பொருள்கள் மற்றும் புடைவைகளை விற்பனை செய்து வருகின்றனர்.

மாநகர சபையோ, பிரதேச சபையோ இது தொடர்பில் கவனிப்பாரற்று இருப்பதால் உள்ளூர் வர்த்தகர்கள் புதுவருடத்துக்கென கொள்வனவு செய்த பொருள்களை விற்பனை செய்ய முடியாது திண்டாடுகிறார்கள்.


தென்னிலங்கை வர்த்தகர்களால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து யாழ்ப்பாண வர்த்தகர்கள் கடந்த 3ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வடமாகாண முதலமைச்சர் வருடப் பிறப்பின் பின்னர் இது தொடர்பில் முடிவு எடுப்பதாக கூறியதை அடுத்து வர்த்தகர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

எனினும் முக்கிய பண்டிகைக் காலங்களிலேயே வர்த்தகர்களுக்கு ஓரளவு வருமானம் கிடைக்கப்பெறும். இந்தத் தருணத்தில் ஏட்டிக்கு போட்டியாக இந்திய புடைவை வியாபாரிகளும், தென்னிலங்கை வியாபாரிகளும் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் உள்ளூர் வியாபாரிகளது வியாபார நடவடிக்கைகள் சோபை இழந்து காணப்படுகின்றன.

புதுவருட வியாபாரத்தை எதிர்பார்த்து மேலதிக புடைவைகளை கொழும்பு மற்றும் இந்தியாவில் இருந்து வர்த்தகர்கள் இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வருகை தந்துள்ள வியாபாரிகள் எந்தவித வரிப்பணமோ, வாடகையோ இல்லாமல் வீதிகளில் வைத்து தாராளமாக விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் எமது வர்த்தகர்கள் வரிப் பணத்தையும், வாடகைப் பணத்தையும் செலுத்தி விற்பனை இல்லாது திண்டாடுவதாகக் குடாநாட்டு வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-14)



பாடசாலை வளவின் எல்லையில் அமைந்துள்ள - மதிலின் ஓரமாகச் செல்லும் - கழிவு நீர் கால்வாயில் சேரும் கழிவு நீரை, மதிற் சுவரை இடித்து மைதான வளாகத்தினுள் விடப்பட்டிருப்பதைக் காணலாம்

## யாழ்.மத்தியூஸ் வீதி ஆரம்ப பாடசாலையின் மைதானத்துக்குள் குடியிருப்பு கழிவு நீர்

### சுற்றுச் சூழல் மாசடைவதால் மக்களுக்கே பாதிப்பு

கொழும்புத்துறை, ஏப்.7

யாழ்.மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் உள்ள விளையாட்டு மைதானத்துக்குள் அப்பகுதியிலுள்ள தனியார் குடியிருப்புக்களின் கழிவு நீர் வந்து சேர்வதால் மாணவர்கள் சுகாதாரச் சீர்கேடுகளையும் விளையாட்டுப் பயிற்சியின் போது இடையூறுகளையும் எதிர் நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மைதானத்தின் தெற்குப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் சிலர் பாடசாலை வளவின் எல்லையில் அமைந்துள்ள - மதிலின் ஓரமாகச் செல்லும் - கழிவு நீர் கால்வாயில் சேரும் கழிவு நீரை, மதிற்சுவரை இடித்து மைதான வளாகத்தினுள் விட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டினால் மைதானத்தின் ஒருபகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. அது மட்டுமன்றி சூழல் அசுத்தம் அடைந்து துர்நாற்றம் வீசுகிறது. நுளம்பும் பெருகி வருகிறது.

குறித்த ஆரம்பப் பாடசாலையில் 175 இற்கும் மேற்பட்ட சின்னஞ்சிறு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் மேல் வகுப்பு மாணவர்களும் கூட இந்த மைதானத்திலேயே உதைபந்தாட்டப் பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள் என்பனவற்றை நடத்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"இவ்வாறான நிலைமையால் டெங்கு, மலேரியா போன்ற ஆட்கொல்லி நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. சூழல் மாசு ஏற்படுவதால் வேறு தொற்றுகளும் ஏற்படும் நிலை இருப்பது குறித்து பிரதேச மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டால் நாம் தான் விபரீதங்களை எதிர்நோக்கவும் வேண்டி வரும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்" - இவ்வாறு அந்தப் பகுதி நலன் விரும்பி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-135)





நாமலின் வரவுக்காக கால்கடுக்க காத்திருந்த அதிகாரிகளும் மற்றும் சிலரும்

## மணிக்கணக்கில் காத்திருக்க வைத்த நாமல்

வடமாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரச அதிபர், வடமாகாண பிரதம செயலர், பொலிஸ் உயர் அதிகாரிகள், யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, இந்தியத் துணைத்தூதுவர், மும்மொழிக் கற்கை மாணவர்கள், பிரதேசசபை உறுப்பினர், ஊடகவியலாளர்கள் எனப் பலரையும் மணிக் கணக்காகக் காத்திருக்க வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ. மும்மொழிக் கற்கை நெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாமல் ராஜபக்ஷவின் வருகைக்காக காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக இருந்த மும்மொழிக் கற்கைகள் அங்குரார்ப்பண நிகழ்வு மாணவர்கள், அதிகாரிகள் எனப் பலரும் வந்திருந்த போதும் கூட குறித்த நேரத்துக்கு ஆரம்பமாகவில்லை. நாமல் ராஜபக்ஷவின் வருகைக்காக அனைவரும் காத்திருந்து முற்பகல் 11.30மணிக்கு நாமல் வந்ததன் பின்னரே ஆரம்பமானது. இதனால் மாணவர்கள் உட்பட பலர் அசௌகரியங்களுக்கு உட்பட்டனர். (ஒ-21)

## சங்கானை பிரதேச செயலர் பிரிவில் முதியோர் சங்கங்கள்

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நாளை 7 ஆம் திகதி முதல் முதியோர் சங்கம் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

இதன் பிரகாரம் இன்று காலை 9.30 மணிக்கு ஜே/157 வட்டு. கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலும் மு. பகல் 11 மணிக்கு ஜே/158 வட்டு. வடக்கிலும்- 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஜே/159 சங்கரத்தை கிராம சேவையாளர் பிரிவிலும் மு.ப. 11 மணிக்கு ஜே/160 அராலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலும்-

10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஜே/161 அராலி மத்தியிலும் மு.ப.11 மணிக்கு அராலி தெற்கிலும் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்தப் பிரிவிலுள்ள அனைத்து முதியோர்களையும் சமுகம் தருமாறு சங்க முகாமை உத்தியோகத்தர் ந.அருந்தவராசா அறிவித்துள்ளார். (ஒ-100)

## முற்றவெளி புல்லுக்குளம் பகுதிகளில் நிறுத்தப்படும் கனரக வாகனங்கள்

### போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.முற்றவெளி மற்றும் புல்லுக்குளம் பகுதியில் கனரக வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.



புல்லுக்குளம் மற்றும் முனீஸ்வரன் வீதியில் வீதியோரமாக கனரக வாகனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்டதால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வீதியைக் கடக்க முற்பட்டவேளை விபத்துக்கு இலக்காகின.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்தோர் காயமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

போக்குவரத்து நெரிசல் கூடிய வீதியோரமாக வாகனங்களை இவ்வாறு தரித்து நிறுத்துவதாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. (வ-17)

## உணவகத்தில் பணியாற்றி வந்த ஊழியருக்கு நெருப்புக் காய்ச்சல்

தென்மராட்சி, ஏப்.7

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையத்தில் பணி புரிந்த ஊழியருக்கு நெருப்புக் காய்ச்சல் (தைபோயிட்) ஏற்பட்டுள்ளமை பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் அனைத்து உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோர் கட்டாயம் மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட மருத்துவச் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தாலே இந்த வருடத்துக்குரிய வியாபார உரிமம் வழங்கப்படும் என்று நகர சபைத் தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் உணவு கையாளும் நிலையங்களில் மருத்துவ அறிக்கை பெறுவதற்கான மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்த வாரம் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்ட பணியாளருக்கு நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த பணியாளருக்கு உரிய சிகிச்சை பெற்று குணமடையும் வரை கடைப் பணிக்கு வருகை தரக் கூடாது என்றும் கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-9)

## தடங்கலின்றிய அம்புலன்ஸ் சேவைக்கு கையிருப்பில் எரிபொருள் தேவை

### அதற்கான அனுமதியை வழங்குமாறு புங்குடுதீவு மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.7

புங்குடுதீவு அரசினர் மருத்துவமனையின் அம்புலன்ஸ் தடங்கலின்றிதனது சேவையை வழங்குவதற்குக் கணிசமான எரிபொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்க அனுமதிக்கப்படவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவசர நோயாளர்களை யாழ். நகருக்குக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் அம்புலன்ஸ் எரிபொருள் இன்மையால் பெரும்பாலான நேரங்களில் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

எரிபொருளைக் கையிருப்பில் வைத்திருக்க தமக்கு அனுமதி இல்லை என்று வைத்திய அதிகாரி கூறுகிறார்.

தற்போது இங்கு வசிக்கும் மக்கள் மிகவும் கஷ்ட நிலையில் வாழ்வதால் நோயாளர்களை அவசரமாக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வசதிகள் இல்லை. தடங்கலின்றி அம்புலன்ஸ் சேவையை ஈடுபடுத்தக் கூடியதாக எரிபொருளைக் கையிருப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-7)

# முதல்தர தலைவர் நரேந்திர மோடியே

*நடிகை சமந்தா கூறுகிறார்*

சென்னை, ஏப்.7
இந்தியாவின் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் மோடி தான். அவரே இந்தியாவின் முதல்தரத் தலைவர் என்று கூறியுள்ளார் நடிகை சமந்தா.
பானா காத்தாடி, நீதானே என் பொன்வசந்தம் ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்தவர் சமந்தா. நான் ஈ படத்தின் மூலம் பிரபலமான இவர் தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் கத்தி படத்தில் விஜய் ஜோடியாகவும், லிங்குசாமி இயக்கும் அஞ்சான் படத்தில் சூர்யா ஜோடியாகவும் நடித்து வருகிறார்.



நடிகை சமந்தா

இந்த நிலையில், சமந்தா ஐதராபாத்தில் நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தல் பற்றி அவர் கருத்து தெரிவித்துள்ளார்.
"நாடாளுமன்ற தேர்தலில் எல்லோரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். நல்ல ஆட்சியாளரை தேர்வு செய்ய இது தான் சரியான நேரம். இந்தியாவின் 'நம்பர்-1' தலைவர் மோடிதான். நம் நாட்டுக்கு அவரைப்போன்ற திறமையான தலைவர் தேவை. பிரதமர் பதவிக்கு மோடிதான் தகுதியானவர் என்றும் அவர் நல்லாட்சி தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவருக்கு என் ஆதரவு உண்டு" - என்று தெரிவித்துள்ளார் சமந்தா. (ற)

# பிரதமர் பதவி வகிக்க தகுதியானவர் மோடி

## *பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி பாராட்டு*

புதுடில்லி, ஏப்.7
சிறந்த நிர்வாகியான நரேந்திர மோடி, பிரதமர் பதவிக்குத் தகுதி வாய்ந்தவர் என்று பாஜக மூத்த தலைவர் அத்வானி பாராட்டினார்.
குஜராத் மாநிலம் காந்திநகரில் கடந்த சனிக்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பு நடைபெற்ற பா.ஜ.க. தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மோடியுடன் ஒரே மேடையில் பங்கேற்றபோது அத்வானி இவ்வாறு பாராட்டினார். இதன்மூலம் பா.ஜ.க. பிரதமர் பதவி வேட்பாளராக நரேந்திர மோடி தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக எழுந்த சர்ச்சைக்கு அத்வானி முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.
கூட்டத்தில் அத்வானி பேசுகையில்,
"மோடியை எனது சீடர் என்று நான் அழைக்க மாட்டேன். நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதில் அவர் மிகுந்த ஆற்றல் படைத்தவர்.
அந்தத் திறன்தான் குஜராத் மாநிலத்தில் நல்லாட்சியை வழங்க அவருக்கு உதவியுள்ளது. தற்போது பிரதமர் பதவி வேட்பாளர் என்ற பொருத்தமான பொறுப்பை கட்சி அவரிடம் அளித்துள்ளது.
ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பொறுப்பில் இருந்தபோதும் அவர் இதேபோல்தான் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைக்கும். நரேந்திர மோடி பிரதமர் பதவியை வகிப்பார். பிரதமர் பதவிக்கு அவர் தகுதிவாய்ந்தவர்.
பா.ஜ.க. மூத்த தலைவரும், முன்னாள் பிரதமருமான வாஜ்பாயுடன், மோடியை நான் ஒப்பிடமாட்டேன். வாஜ்பாய் அலாதியானவர். பா.ஜ.கவின் முன்னோடியான தீனதயாள் உபாத்யாய வகுத்தளித்த அரசியல் கொள்கைகளை ஆட்சிப் பொறுப்பில் செயற்படுத்தியவர் வாஜ்பாய்.
போபால் தொகுதியிலும் நான் போட்டியிட வேண்டும் என்று மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த எனது நண்பர்கள் விரும்பினார்கள். ஆனால் காந்திநகரில் போட்டியிடுவதில் இருந்து மாற வேண்டும் என்று நான் ஒரு போதும் நினைத்ததில்லை. இங்கு போட்டியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது"- என்று அவர தெரிவித்துள்ளார். (ற)



*காந்தி நகர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். அருகில் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி உள்ளார்.*

# அரசில் தலையிட்டதாலே சீர்குலைந்தது ஆட்சி

*சோனியா காந்தி மீது மோடி காட்டம்*



நரேந்திர மோடி.

புதுடில்லி, ஏப்.7
மத்திய அரசின் செயற்பாடுகளில் தலையிட்டு ஆட்சியை சீர்குலைத்து விட்டார் சோனியாகாந்தி - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
உத்தரபிரதேச மாநிலம் பிஜ்னூரில் தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், "முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மேற்கொண்ட வளர்ச்சிப் பணிகளை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சீரழித்து விட்டது.
அரசியலில் தம்மை வீழ்த்த எதிரிகள் தீட்டிய சதித் திட்டங்கள் தோற்றுப் போய்விட்டன. எதிர்க் கட்சிகள் தங்களுக்குள் பரஸ்பரம் செய்து கொள்ளும் விமர்சனங்கள், ஏற்கனவே ஒத்திகை பார்க்கப்பட்டு அரங்கேற்றப்படும் நாடகம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# போதையில் ஆடிய 47 மாணவர் கைது

சென்னை, ஏப்.7
இரவு விருந்து என்ற பெயரில் பங்களா வீட்டில் போதையில் ஆட்டம் போட்டுள்ள கல்லூரி மாணவ, மாணவிகள் 47 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மும்பை லோனவாலா பகுதியில் நள்ளிரவில் ரோந்து பணியில் ஈடுபட்ட பொலிஸாரே இவர்களைக் கைது செய்துள்ளனர்.
அந்த பகுதியில் ஒரு பங்களா வீட்டில் அதிக சத்தத்தில் பாட்டுச்சத்தம் கேட்டுள்ளது. சந்தேகமடைந்த பொலிஸார் அந்த வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்துள்ளனர். அங்கு இரவு விருந்து என்ற பெயரில் மது போதையில் அரைகுறை ஆடைகளுடன் ஆடிக்கொண்டு இருந்த 47 கல்லூரி மாணவ, மாணவிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரின் மீதும் லோனவாலா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து உள்ளனர். (ற)

# பதவி நாற்காலியை பிடிப்பதே சில கட்சிகளுடைய நோக்கம்

*சாடுகின்றார் சோனியா காந்தி*



புதுடில்லி, ஏப். 7
பதவி நாற்காலியைப் பிடிப்பது மட்டுமே சில கட்சிகளின் நோக்கமாக உள்ளது என்று விமர்சித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.
ஓரிசாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
"நாடு இப்போது கடினமான காலகட்டத்தில் உள்ளது. மக்களவைத் தேர்தல் பரப்புரைகளில் சிலர் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றனர். அதை நம்பி மக்கள் ஏமாந்துவிடக் கூடாது.
கனவு உலகத்தை உங்கள் கண் முன்னே கொண்டு வருவார்கள். ஆனால் ஒரு விடயத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் ஒரே நோக்கம் எப்படியாவது பதவி நாற்காலியைப் பிடிக்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்வது அவர்களின் நோக்கமில்லை.
ஏழைகள், தலித்துகள், பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்டோரின் பாதுகாவலனாக காங்கிரஸ் விளங்குகிறது.
ஓரிசா மாநிலம் நியம்கிரி மலைப் பகுதி தனியார் சுரங்க நிறுவனத்துக்கு அளிக்கப்பட இருந்ததை எதிர்த்து மக்களோடு மக்களாக இணைந்து ராகுல் காந்தி போராடினார். அதன் பயனாக நியம்கிரி மலை காப்பாற்றப்பட்டது. 1967ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி ஓரிசா மாநிலத்தின் வறட்சியைப் போக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். களஹந்தி பகுதியில் இந்திராவதி நீர்ப்பாசன திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தினார்.
ஓரிசாவில் மதிய உணவுத் திட்டம் முதல் அனைத்து திட்டங்களிலும் ஊழல் கரை புரண்டோடுகிறது. வறுமைக்கோட்டுக்கு கீழ் வசிக்கும் மக்களுக்கு ஒதுக்கப்படும் உணவு தானியத்தில்கூட ஊழல் நடந்திருப்பதாக மத்திய தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# காங்கிரஸ் கட்சிக்கு இனி வசந்தகாலம்

*ஜி.கே.வாசன் கூறுகின்றார்*

சென்னை, ஏப்.7
காங்கிரஸ் கட்சிக்கு இனி வசந்தகாலம் தான் என்று கூறியுள்ளார் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
"காங்கிரஸுக்கு இனி வசந்த காலம்தான். காமராஜர் ஆட்சி காலத்தில்தான் அணைகள் கட்டப்பட்டன. இதன்மூலம் மின் உற்பத்தி திட்டங்கள் உருவாக்கப்பட்டு, மாநிலத்துக்கு தேவையான மின்சாரம் கிடைத்து வந்தது. ஆனால் காலப்போக்கில் மின்சாரத்தின் தேவைக்கேற்ப திட்டங்களை 40 ஆண்டு காலமாக தமிழகத்தை ஆட்சி செய்யும் திராவிட கட்சிகள் உருவாக்கவில்லை. இதனால்தான் தமிழகத் தில் மின்வெட்டு உள்ளது.



ஜி.கே. வாசனுடன்.

கடந்த 10 ஆண்டுகளில் காங்கிரஸ் அரசு இந்தியாவில் மாணவர்களுக்கு மட்டும் 27ஆயிரத்து 258 கோடி ரூபா கடன் வழங்கியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்த காமராஜரின் மதிய உணவு திட்டத்துக்கு சோனியா காந்தி, ரூ.ஒரு லட்சத்து 37ஆயிரம் கோடி ரூபா நிதியை நாடு முழுவதும் செயற்படுத்த ஒதுக்கியுள்ளார். இதன் மூலம் 14 கோடி மாணவர்கள் பயனடைந் துள்ளனர். இந்தியாவில் மருத் துவ வசதி திட்டத்துக்காக 37ஆயிரத்து 330 கோடி ரூபா நிதி ஒதுக்கினார்.
காமராஜர் ஆட்சியில் அனைத்திலும் முதலிடத்தில் இருந்த தமிழகம் இன்று எந்த இடத்தில் இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது நாட்டில் மதசார்பற்ற ஆட்சியை காங்கிரஸால் மட்டுமே கொடுக்க முடியும்"- என்று தெரிவித்தார். (ற)

## சீனாவில் கடும் நிலநடுக்கம்

### *25 பேர் காயம்*


பீஜிங், ஏப். 7

சீனாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 25 பேர் காயமடைந்தனர். யுன்னான் மாகாணம் யோங்சன் நகரை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 5.3 ரிச்டர் அளவாகப் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் 75 வீடுகள் இடிந்து விழுந்த நிலையில் காயமடைந்த 25 பேரில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. நிலநடுக்கம் உணரப் பட்ட பகுதிகளில் 2,700 வீடுகள், 48 பள்ளிக்கூடங்கள் சேதமடைந்துள்ளன என்று சீன அரசு தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள 68 ஆயிரத்து 600 பேரில் யோங்சன் நகரத்தில் உள்ள 21 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு சேவைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)





மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் காய்ச்சலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கினியா நாட்டில் 80பேர் இந்த வைரஸினால் உயிரிழந்துள்ள நிலையில் மாலி, லைபீரியா உள்ளிட்ட நாடுகளிலும் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. மூன்று பேருக்கு எபோலா வைரஸ் தாக்கம் இருப்பதாக தெரிவித்துள்ள மாலி அரசு, அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருவதாகவும் அறிவித்துள்ளது. இதனிடையே பாதிக்கப்பட்ட நாடுகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை அளித்து வருவதாக உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளதுடன், எபோலா வைரஸினால் பாதிக்கப்பட்ட 400 பேரின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

# சுமுகமாக நடந்து முடிந்த ஆப்கன் ஜனாதிபதி தேர்தல்

காபூல், ஏப்.7

ஆப்கனில் வரலாற்று சிறப்புமிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது. தலிபான்களின் ஆதிக்கம் நிறைந்த ஆப்கனில் மூன்றாவது முறையாக ஜனநாயக ரீதியில் தேர்தல் நடைபெறுகிறது.

இது குறித்து தேர்தல் ஆணையர் யூசப் நூரிஸ்தானி கூறுகையில்; "ஆப்கன் மக்களுக்கு இன்றைய தினம் முக்கியமான நம்பிக்கையூட்டக்கூடிய தினம். மக்கள் அவர்களின் அதிபரையும், பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க உள்ளனர்" என்றார்.



நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கும் 6,400 வாக்குச் சாவடிகளில் மக்கள் நேற்றுக் காலை முதலே நீண்ட வரிசையில் நின்று விறுவிறுப்பாக வாக்களித்து வருகின்றனர். தலிபான்கள் மிரட்டலால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 4,00,000 ஆப்கான் பாதுகாப்பு படையினர் நாடுமுழுவதும் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தேர்தலில் மூன்றாவது முறையாக போட்டியிட தடை செய்யப்பட்டுள்ளது. அதனால் அப்துல்லா, உலக வங்கியின் முன்னாள் செயலாளர் அஷ்ரப் கனி, சல்மை ரசூல் உள்ளிட்ட 8 பேர் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

இந்த தேர்தலில் எந்த வேட்பாளரும் அதிக வாக்குகள் பெற்று வெற்றியை உறுதி செய்யாத போது, தேர்தல் மீண்டும் வரும் மே 28ஆம் திகதி நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் நிலவரங்கள் குறித்து செய்தி சேகரிக்க சென்ற ஏ.பி. செய்தி நிறுவனத்தின் புகைப்பட பெண் நிருபர் அஞ்சா நைட்ரிங்கஸ் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் ஒரு பெண் நிருபர் படுகாயம் அடைந்தார். (ற)

## விமான உதிரிப்பாகங்களை ஈரானுக்கு விற்க முடியும்

### *அனுமதி வழங்கியது அமெரிக்கா*

வொஷிங்டன், ஏப்.7

ஈரானுக்கு விமான உதிரி பாகங்களை விற்பனை செய்ய போயிங் நிறுவனத்திற்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. 1979ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக ஈரானிடம் அமெரிக்கா மீண்டும் வர்த்தக உறவை புதுப்பித்துள்ளது.

இதுகுறித்து போயிங் விமானத் தயாரிப்பு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்;

"விமான உதிரி பாகங்களை மட்டும் விற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய விமானங்களை விற்பனை செய்ய அனுமதியில்லை. இந்த அனுமதியும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

அமெரிக்காவில் உள்ள மற்றொரு விமானத் தயாரிப்பு நிறுவனம், ஈரானுக்கு விமான உதிரிப் பாகங்களை விற்பனை செய்ய கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க அரசிடம் அனுமதி கோரியபோது, அரசிடம் இருந்து அப்போது பதில் வரவில்லை என்று கூறியுள்ளது. ஈரானின் அணுசக்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன.

இதையடுத்து அணுச் செறிவூட்டல் பணியை நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்த ஈரான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கடந்த நவம்பர் மாதம் ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்படி ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை 6 மாதங்களுக்குத் தளர்த்தப்படும் என்று அமெரிக்கா அறிவித்தது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் விமான நிறுவனங்களுக்கு தற்போது அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. ஈரானில் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு மீண்டும் அந்நாட்டுடன் அமெரிக்கா தற்போது வர்த்தக உறவை ஏற்படுத்தி உள்ளது. (ற)

## காணாமற்போன விமானத்தினுடைய கறுப்புப் பெட்டியிலிருந்து சமிக்ஞை

### *உறுதிப்படுத்தும் ஆய்வுகள் தீவிரம்*

பீஜிங், ஏப்.7

காணாமற்போன மலேசிய விமானத்தின் கறுப்புப் பெட்டியில் இருந்து அதை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள சீனக் கப்பல் ஒன்றுக்கு சமிக்ஞை கிடைத்துள்ளன என்று கூறப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி 239 பேருடன் காணாமற்போன மலேசிய விமானமான எம்.ஹெச்.370 இந்தியப் பெருங்கடலில் விழுந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்த விமானத்தின் பாகங்களை தேடும் பணியில் 10 இராணுவ விமானங்கள் மற்றும் 11 கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

தேடுதலில் ஈடுபட்டுள்ள ஹாய்சுன் 01 என்ற சீனக் கப்பலுக்கு இந்தியப் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் இருந்து கிடைத்துள்ள இந்த சமிக்ஞையானது விநாடிக்கு 37.5 கிலோ ஹெர்ட்ஸ் அலைவரிசையை கொண்டதாக உள்ளதாகவும், இது காணாமல் போன மலேசிய விமானத்தின் கறுப்புப் பெட்டியில் இருந்து வரும் சமிக்ஞை தானா என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## ஹைதியில் கடும் வறட்சி

### *உணவுக்காகத் திண்டாடும் மக்கள்*

லண்டன், ஏப்.7



ஹைதி நாட்டில் நிலவி வரும் கடுமையான வறட்சியால் 6 லட்சம் பேருக்கு உடனடியாக உணவு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐ.நாவின் சர்வதேச உணவு பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

அந்தநாட்டின் வடமேற்கு நகரங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளதால் ஒரு வேளை உணவுக்காகவே பொதுமக்கள் தவிர்த்து வருகின்றனர். நாட்டு மக்கள் தொகையில் பெரும்பகுதி மக்கள் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் தங்களின் ஊதியங்களை முழுக்க முழுக்க தண்ணீருக்காகவும், உணவுப் பொருள்களுக்காகவுமே செலவிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொருள்களைவழங்கிஐ.நா. அமைப்பு எதிர்வரும்ஜூன் மாதம் வரை வறட்சி நீடிக்கலாம் என எச்சரித்துள்ளது. (ற)

## பள்ளத்தாக்கில் பஸ் வீழ்ந்து 16 பேர் சாவு

பாகிஸ்தானின் மத்திய மகாணமான பஞ்சாப்பில் மலை பள்ளத்தாக்கில் பஸ் விழுந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 45 பயணிகளுடன் சென்ற பஸ் கல்லார் காகர் தாலுகா மார்ட்டன்கர்டு கிராமத்தில் சென்ற போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி 50 அடி ஆழ பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதில் 3 குழந்தைகள், 4 பெண்கள் ஆகியோர் அடங்குவர். காயமடைந்த மற்ற பயணிகள் பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

TCT MULTI TRADE CENTRE

# ரீசீரீ (TCT) பல்பொருள் விற்பனை நிலையத்தில்

# புதுமையான சலுகை மழை!

வாழ்க்கையாளர் நலன் கருதி விரிவாக்கம் செய்யப்பட்டு **"புதுப்பொலிவுடன்"**
காணப்படும் உங்கள் ரீ.சி.ரீ பல்பொருள் விற்பனை நிலையத்தில் மலரும்
ஜய வருடத்தினை முன்னிட்டு ஏப்ரல் 13 ஆம் நாள் வரை வியாபாரச் சலுகைகள்

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| 01. Nice-Maam-360g | Chocolate Cream-90g |
| 02. Banana Cream-360g | Chocolate Cream-90g |
| 03. Apple Cream-360g | Chocolate Cream-90g |
| 04. Lemon Puff Maam-200g | Milk shortied-60g |
| 05. Shorties Maam-360g | Milk Biscuits -60g |
| 06. Chocolate Cream-360g | Milk Biscuits-60g |
| 07. Orange Cream Lucky Land-375g | Bourbon-100g |
| 08. Batter Carol Lucky Land-400g | Bourbon-100g |
| 09. Nice Lucky Land-400g | Bourbon-100g |
| 10. Chocolate Cream Lucky land-400g | Bourbon-100g |
| 11. Wafers Lucky Land-500g | Bourbon-100g |
| 12. Marie Master-300g | Marie-100g |
| 13. Choco Rings-300g | Marie-100g |
| 14. Batter Rings-300g | Marie-100g |
| 15. Milk Biscuits Master-325g | Marie-100g |
| 16. Chocolate Cream Maliban-500g | Doubles-100g |
| 17. Chick Bits Maliban-170g | Gold Marie -80g |
| 18. Gold Marie -320g | Gold Marie-80g |
| 19. Orange Cream Maliban | Doubles-110g |
| 20. Custard Cream Maliban-500g | Doubles-110g |
| 21. Cheese Puff Maliban-200g | Gold Marie-80g |
| 22. Golden Nuggets Edna-140g | Choco nut-50g |
| 23. Dreams Chocolate Edna -100g | Choco nut -50g |
| 24. Check Mate Edna-200g | Choco nut -90g |
| 25. Chocolate Cream Munchee-400g | Hawaian cookies-100g |
| 26. Chocolate Marie Munchee-400g | Hawaian cookies-100g |
| 27. Ginger Munchee-400g | Hawaian cookies-100g |
| 28. Wafers kist-400g | Chocolate Cream-100g |
| 29. Mineral Water Mount Spring 1.5L | Mineral Water-1.5L |
| 30. Fortune Sun Flower Oil-1L | Soya-50g (3) |
| 31. Fortune Sun Flower Oil-2L | Fortune Coconut Oil-200ml |
| 32. Prima Special Pack Noodles- 345g | Kottume-80g |
| 33. Ruhunu Special Noodles | Soya-65g |
| 34. Delmege Noodles-82g (3) | Noodles-82g |
| 35. Seven Star Atta-1Kg(2) | Atta- 1Kg |
| 36. Ruhunu Soya-65g(3) | Soya(1) -65g |
| 37. Samaposha-200g(2) | Samaposha -80g(1) |
| 38. Lanka Soya-90g(2) | Soya(1) -50g |
| 39. Delmege Soya-90g(2) | Soya(1) -60g |
| 40. Pringles Original-161g | Prigles-161g |
| 41. Watawala Tea -400g | Tea-100g |
| 42. Delmege Soya-90g (2) | Salt-400g |
| 43. Rani Soap- (3) | Rani Soap-1 |
| 44. Baby Cheramy-(4) | Cheramy Soap -1 |
| 45. Dettol Cool Soap -(4) | Dettol cool Soap -1 |
| 46. Velvet Soap-(3) | Velvet Soap-1 |
| 47. Natures Secrets Body Lotion-225ml | Face Wash-100ml |
| 48. Natures Secrets | Face Wash-100ml |
| 49. Natures Secrets Sunscreen lotion | Face Wash-100ml |
| 50. Perlwite Dish Wash | Safeplus –Soap |
| 51. Hichem Washing Liquid -1L | Multy Wash-500ml |
| 52. Clogard-160g | Clogard-40g |
| 53. Sunlight Soap (5) | Sunlight (1) |
| 54. Sunlight Powder 1Kg | Sunlight Powder-200g |
| 55. Smak/Hist Nector-1L | Smak /Hist-Nector-200ml |
| 56. MD Orange Cordial -750ml | MD Divul kiru-200ml |
| 57. MD Mixed fruit Cordial-750ml | Coconut Vinegar-350ml |
| 58. MD Mango Cordial-750ml | Soya Sauce-190ml |
| 59. MD Mango delight-850ml | Glass |
| 60. MD Orange delight-850ml | MD Tomato Sauce-200g |
| 61. Dettol Hand wash | Lunch box |
| 62. Cinthol Soap(2) | Cinthol Soap(1) |
| 63. Good knight Liqidetor Refill(2) | Good night Refill(1) |
| 64. Good knight Liqidetor Refill(2) | Vapouriser |
| 65. Colin Class Cleaner | Dettol Soap |
| 66. Mortein Cockroah killer-400g | Lysol-200ml |
| 67. Mortein Cockroah killer-400g | Dettol Hand wash |
| 68. Air Wick-675ml | Lysol-200ml |
| 69. Lysol-950ml | Paper Serviettes |
| 70. Dash Dish wash | Sponch(1) |
| 71. Loreal Shampoo-375ml | Conditioner-180ml |
| 72. Loreal Shampoo-360ml | Conditioner-175ml |
| 73. Loreal Shampoo-175ml | Conditioner-65ml |
| 74. Pantien Shampoo-170ml | Conditioner-75ml |
| 75. Ariel Complete+-1Kg | Ariel-200g |
| 76. Garnier Shampoo-180ml | Conditioner-90ml |
| 77. Garnier Shampoo-180ml | Daily fairness moistuises |
| 78. Mabroc Bopf Tea | Cup Free |
| 79. Garnier Shampoo-375ml | Conditioner-180ml |
| 80. Harpic-750ml | Toilet Brush |
| 81. Domex-500ml | Vim Soap-100g |
| 82. Comex-500ml | Gliz Soap |
| 83. Mr.Muscle Tile cleaner-1L | Kitchen cleaner-500ml |
| 84. Nestomalt box-400g | Maggi Noodles-81g |
| 85. Cow & Gate No-III box(2) | Cow & Gate box (1) |
| 86. Cow & Gate No-IV Tin | Cow & Gate box (1) |
| 87. Golden Cow box(2) | Lunch box |
| 88. Nestum-240g | Lunch box |
| 89. Milo-400g | Lunch box |
| 90. Bonlac- Non Fat-400g | Cream cracker-125g |
| 91. Reebonn leave on Silicone Conditioner-100ml | Face wash-30ml |
| 92. MD Jam-485g | MD Saucc-200g |
| 93. MD Sauce -400g | Jam-225g |
| 94. Chunky Choc-200g | Fingers-100g |

**HACHI BOX FAN 1 இற்கு IRON BOX FREE**

| | பொருள்கள் | குறித்த விலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|---|
| 01. | Johnsons Baby Soap-50g | 100/- | 75/- | 25/- |
| 02. | Johnsons Baby Soap-75g | 155/- | 100/ | 55/- |
| 03. | Lux Soap | 76/- | 65/- | 11/- |
| 04. | Necto – 2L | 210/- | 185/- | 25/- |
| 05. | Orange Barley-2L | 210/- | 185- | 25/- |
| 06. | Pepsi -2.25L | 250/- | 225/- | 25/- |
| 07. | 7 Up -2.5L | 250/- | 225/- | 25/- |
| 08. | Fanta -2L | 220/- | 195/- | 25/- |
| 09. | Portello- 2L | 220/- | 195/- | 25/- |
| 10. | Harpic-500ML | 165/- | 135/- | 30/-- |
| 11. | Harpic -500Ml Fresh citrus | 170/- | 155/- | 15/- |
| 12. | Baby Diapers SoftLove 36Pcs (M) | 1540/- | 1386/- | 154/- |
| 13. | Baby Diapers SoftLove 12Pcs (S) | 460/- | 414/- | 46/- |
| 14. | Baby Diapers SoftLove 12Pcs (L) | 525/- | 472/- | 53/- |
| 15. | SoftLove Smartpant 22Pcs(L) | 1504/- | 1353/60 | 150/40 |
| 16. | Delmege Tin fish-420g | 250/- | 170/- | 80/- |
| 17. | Ceylonta Tea-400g | 385/- | 350/- | 35/- |
| 18. | Maggi Noodles Special pack | 195/- | 145/- | 50/- |
| 19. | Master gift Biscuit | 200/- | 180/- | 20/- |
| 20. | Pampers 24Pcs (S) | 780/- | 710/- | 70/- |
| 21. | Pampers 16Pcs (XL) | 780/- | 710/- | 70/- |
| 22. | Pampers 10Pcs (M) | 440/- | 410/- | 30/- |
| 23. | Pampers 9Pcs (L) | 440/- | 410/- | 30/- |
| 24. | Pampers 7Pcs (XL) | 440/- | 410/- | 30/- |
| 25. | Eva Dritex Wings -2 Pack | 210/- | 180/- | 30/- |
| 26. | Sorbex Serviettes | 120/- | 85/- | 35/- |
| 27. | Turkey Sunflower oil-1L | 590/- | 530/- | 60/- |
| 28. | Tastyy Sun flower oil-1l | 575/- | 490/- | 85/- |
| 29. | Turkey Sunflower oil-2L | 1100/- | 1040/- | 60/- |
| 30. | Turkey Sunflower oil-3L | 1625/- | 1550/- | 75/- |
| 31. | Turkey Vegetable oil-3L | 1200/- | 1090/- | 110/- |
| 32. | Turkey Vegetable oil-500ml | 250/- | 230/- | 20/- |
| 33. | Farleys Rusks | 475/- | 375/- | 100/- |
| 34. | Fortune Vegetable oil -3L | 1200/- | 1020/- | 180/- |
| 35. | Tastyy Sunflower oil-500ml | 290/- | 265/- | 25/- |
| 36. | Tastyy Sunflower oil-2L | 1200/- | 940/- | 260/- |
| 37. | Tastyy Vegetable oil-3L | 1150/- | 990/- | 160/- |
| 38. | Vegetable Oil -3L | 1100/- | 980/- | 120/- |
| 39. | Tastyy Vegetable Oil -2L | 766/- | 690/- | 76/- |
| 40. | Gold Winner-500ml | 260/- | 240/- | 20/- |
| 41. | Sunquick Passion-840ml | 735/- | 660/- | 75/- |
| 42. | Sunquick Fruit cocktail-840ml | 680/- | 610/- | 70/- |
| 43. | Sunquick Mango-840ml | 775/- | 697/- | 78/- |
| 44. | Sunquick Apple-840ml | 680/- | 610/- | 70/- |
| 45. | Sunquick Orange-840ml | 680/- | 610/- | 70/- |
| 46. | Sunquick Black Currant-840ml | 845/- | 760/- | 85/- |
| 47. | Surfexcel Matic-1Kg | 320/- | 270/- | 50/- |
| 48. | Surfexcel -1Kg,Comfort-200ml | 400/- | 375/- | 25/- |
| 49. | Black Night Shaving Cream-2Pcs | 240/- | 216/- | 24/- |
| 50. | Garniger Men Face Wash | 565/- | 508/- | 57/- |
| 51. | Garniger men moisturizer-50g | 595/- | 538/- | 57/- |
| 52. | Garnier men moisturiser-20g | 318/- | 286/- | 32/- |
| 53. | Garnier men moisturiser | 370/- | 333/- | 37/- |
| 54. | Garnier color Natural Cream | 645/- | 580/- | 65/- |
| 55. | Enchanteur –Talc-250g | 590/- | 500/- | 90/- |
| 56. | Tastyy –Vegetable Oil -1L | 355/- | 330/- | 25/- |
| 57. | Dream -2l Washing Liquid 2 ins | 750/- | 650/- | 100/- |
| 58. | Tiara Layer Cake-480g | 320/- | 270/- | 50/- |

(கையிருப்பு உள்ளவரை)

**இத்துடன் இந்நாள்களில்......**

***Commercial Bank Card* வகைகளுக்குப் புடைவையகம், பான்சியகத்தில் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு 20 % விலைக்கழிவு வழங்கப்படும்.**

## மேலும் எமது வழமையான சலுகைகள்

- எமது விற்பனை நிலையத்தில் 10000/- க்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு இலவச வாகனவசதி வழங்கப்படுகின்றது. (நிபந்தனைக்கு உட்பட்டது)
- 25000/- க்கு மேல் பொருள்களை கொள்வனவு செய்பவருக்கு 500/- GIFT VOUCHER வழங்கப்படுகின்றது.
- மேலே குறிப்பிட்ட எண்ணெய் வகைகளுடன், பால்மா பொருள்கள் காகிதாதி வகைகள் உட்பட 120 இற்கு மேற்பட்ட பொருள்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

*உங்கள் நுகர்வுத் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவு செய்யவும், பருவகால சலுகைகளுக்கும் முந்துங்கள்!*

*"அறப்பணியே முதற் பணி"*

**ரீசீரீ மல்ரி ரேட் சென்ரர்** (C/13426)(2.6)

527, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

021 745 1895 / 021 222 8025 / 077 751 1285

# மன்னார் ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலயத்தில் கிறிஸ்துவின் பாடுகளின் தியானம்

மன்னார், ஏப். 7
கத்தோலிக்கர் கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கும் காலமாகிய தவக்காலத்தை முன்னிட்டு மன்னார் மறை மாவட்டத்தின் புனித தலங்களின் ஒன்றான ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலயத்தில் வெள்ளிக் கிழமை மறைமாவட்டத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் பக்தர்கள் ஒன்றுகூடி வழிபாட்டில் ஈடுபட்டனர்.


பக்தர்கள் பாத யாத்திரையாகச் செல்லும் காட்சி

மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்பணி ஏ.விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் அன்று கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.
அதிகமான பக்தர்கள் தங்கள் பங்குத் தலங்களிலிருந்து பாத யாத்திரையாக இந்த ஓலைத் தொடுவாய் கர்த்தர் ஆலயத்துக்கு வந்து வெள்ளிக்கிழமை காலை பொது சிலுவைப் பாதையில் கலந்துகொண்டது டன் அங்கு நடைபெற்ற திருப்பலியிலும் கலந்து சென்றனர்.
இந்த கர்த்தர் ஆலயம் மிகவும் பழைமை வாய்ந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)


ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலய வளாகத்தில் பற்றைகளுக்கு மத்தியில் காணப்படும் கைவிடப்பட்ட வாகனங்கள். (க-500)

# மன்னார் மாவட்டம் எங்கும் சுவரொட்டிகள்



கோபி என அழைக்கப்படும் கசியன், அப்பன் என அழைக்கப்படும் நவநீதன் மற்றும் தெய்வீகன் என அழைக்கப்படும் பகீரதன் என்பவர்களே தேடப்படுவதாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டி.

மன்னார், ஏப்.7
பல்வேறுகுற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்து மூவரின் புகைப் படங்கள் பிரசுரிக்கப்பட்ட சுவரொட்டிகள் மன்னாரின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. குறித்த சுவரொட்டியில் கோபி என அழைக்கப்படும் கசியன், அப்பன் என அழைக்கப்படும் நவநீதன் மற்றும் தெய்வீகன் என அழைக்கப்படும் பகீரதன் என்பவர்களே தேடப்படுவதாக சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
குறித்த நபர்கள் தொடர்பில் தகவல்கள் தருவோருக்கு 10 லட்சம் ரூபாவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், தகவல்கள் இரகசியமாக பாதுகாக்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கோபி, தெய்வீகன் மற்றும் அப்பன் ஆகிய மூவர் தொடர்பில் தகவல் வழங்குமாறு கோரியே மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகள் மன்னார் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள், நகரப் பகுதிகள், அரச திணைக்களங்கள் மற்றும் பொது இடங்களிலும் மக்கள் பார்வைக்காக ஒட்டப்பட்டிருக்கின்றன.

**குறித்த சுவரொட்டியில் கோபி என அழைக்கப்படும் கசியன், அப்பன் என அழைக்கப்படும் நவநீதன் மற்றும் தெய்வீகன் என அழைக்கப்படும் பகீரதன் என்பவர்களே தேடப்படுவதாக சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

ஆயினும் குறித்த பிரசுரம் எவரால் உத்தியோகபூர்வமாக உரிமை கோரி வெளியிடப்பட்டிருக்கின்றது என்பது தொடர்பில் தெளிவில்லாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
இதனிடையே கடந்த ஒரு சில தினங்களாக மன்னார் மாவட்டத்தில் இராணுவம், பொலிஸ், விசேட அதிரடிப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக பொது போக்குவரத்து மற்றும் அனைத்து வாகனங்களும் பயணப் பாதையில் இடை மறிக்கப்பட்டு தீவிர தேடுதல் இடம் பெறுகின்றன. (ஓ-56)



# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
**பாலசுப்பிரமணியம் சதீசன்**

மலர்வு 07.11.1991

உதிர்வு 22.02.2014

எமது குடும்ப விளக்காக விளங்கிய பாலசுப்பிரமணியம் சதீசன் அவர்களின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்து கொண்டோருக்கும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து பலதொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் வேறு பல உதவிகளைச் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (07.04.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி வடக்கு. (46277)(3.6.4) குடும்பத்தினர்.



ஒட்டுசுட்டான் பகுதியில் கொங்கிறீற் வீதி அமைக்கவெனப் பறிக்கப்பட்ட கிரவல் மண் பரவப்படாத நிலையில் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது. (க-500)

# மானிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கம் மீண்டும் செயற்படுகிறது

மானிப்பாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் நீண்ட காலமாக இயங்காமல் இருந்த கிராம அபிவிருத்திச் சங்கம் தற்போது இயங்கி வருகிறது.

இதன் முதலாவது கூட்டம் கடந்த சனிக்கிழமை கட்டுடை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக வி.அருந்தவராசாவும் செயலாளராக திலீபனும் பொருளாளராக கிருபைராசாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 11 பேர் கொண்ட நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ-100)

# ஏழாம் ஆண்டு நினைவலை



திருமதி **சிதம்பரம் சட்டநாதர்**

தோற்றம் 28.10.1935 மறைவு 25.03.2007

திதி : பூர்வபக்க அட்டமி (07.04.2014)

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
எம் மனம் ஆறவில்லை
எங்கள் அருகிலிருந்து
பழமொழிகள் பேசி மகிழ்வித்து
எம்மை வேதனையுடன்
விட்டுவிட்டு
இறைவனிடம் சென்றீரே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.
(4/73423)(7.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி**

அன்னை மடியில்
14.11.1952

ஆண்டவன் அடியில்
19.04.2013




**திதி: 07.04.2014 (பூர்வபக்க அட்டமி)**

ஓராண்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு – எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க்கலந்த உத்தமியே!
வேருடே நீர்சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்!
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அமுதாவே!
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
நெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங்கண்களுடன் நிதமும்மைப்போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளை.

இல.14, நாவற்குழி கிழக்கு,
கைதடி.
(50426)(48.6.3)



போர் வேளையில் சேதமடைந்த பாடசாலையின் தோற்றம்

# தம்பிராய் பாடசாலையை மீள இயக்கக் கோரிக்கை

கிளிநொச்சி.ஏப். 7

கிளிநொச்சி பூநகரியில் மூடப்பட்டுள்ள தம்பிராய் அ.த.க. பாடசாலையை மீள இயக்குமாறு கிராம மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

தம்பிராய் அ.த.க. பாடசாலை 2008 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது மூடப்பட்டது. தற்போது இந்தக் கிராமத்தில் 265 வரையான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் பாடசாலை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

இதன் காரணமாக இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் 3 கிலோ மீற்றர் தூரம் பயணித்து பூநகரி மகா வித்தியாலயத்துக்கோ அல்லது 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள செல் லியாதீவு அ.த.க.பாடசாலைகளுக்கோ செல்ல வேண்டியுள்ளது.

தம்பிராய் அ.த.க. பாடசாலை முன்னர் ஆரம்பப் பிரிவைக் கொண்டு இயங்கியது. அதை மீள ஆரம்பிப்பதன் மூலம் 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் பிற பாடசாலைகளுக்கு செல்ல வேண்டி ஏற்படாது எனவும் இதனைக் குறித்த பாடசாலை மீள இயங்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை பூநகரிக் கல்விக் கோட்டத்தில் 6 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்பிராய் அ.த.க., பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், செட் டியகுறிச்சி அ.த.க., கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை ஆகியவையே இவ்வாறு மூடப்பட்டுள்ளன. (ஜ-18)

# வாய்க்கால்களைப் புனரமைத்து வாழ்வாதாரத்துக்கு உதவுங்கள்

*மாகாண சபை உறுப்பினரிடம் கூழாமுறிப்பு மக்கள் கோரிக்கை*

நெடுங்கேணி, ஏப்.7

மழை வெள்ளம் காரணமாக நீர் விநியோகம் பாதிக்கப்பட்டு 126 ஏக்கர் வரையான காணிகள் விவசாயத்துக்கு பயன்படுத்த முடியாதுள்ளதாக ஒட்டுசுட்டான் - கூழாமுறிப்புப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணிகளுக்கான நீர் விநியோகக் கட்டமைப்பை மீளமைத்து தமது வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கூழாமுறிப்புப் பகுதியில் அண்மையில் மக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அந்த மக்கள் தமது விவசாய நிலங்களுக்கான நீர் விநியோக வாய்க்கால்களைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக கூழா முறிப்பு நீர் விநியோக வாய்க்கால் முற்றாகச் சேதமடைந்தது. இதனால் அப்பகுதி பெரும் குழியாகிக் காணப்படுகிறது.

எனவே குறித்த நீர் விநியோக வாய்க்காலைப் புனரமைத்து தமது வாழ்வாதாரத் தொழிலுக்கு உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். குறித்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட ரவிகரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடி உரிய தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். (ஜ-435)



வெள்ளத்தால் சேதமுற்று காணப்படும் வாய்க்கால்

# வவுனியா பாடசாலையில் திருடரின் முயற்சி தோல்வி

வவுனியா, ஏப்.7

வவுனியா காத்தார் சின்னக்குளம் பாடசாலையில் திருட்டு முயற்சியொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

உலக உணவுத்திட்டத்தின் கீழான பொருள்கள் கடந்த மாத இறுதியில் பாடசாலைக்குக் கொண்டுவரப்பட்டன. இவை களஞ்சிய அறையில் வைக்கப்பட்டன. இரண்டு நாள்களின் பின்னர் களஞ்சிய அறையின் கதவுகள் அதற்கு அருகில் உள்ள கணினி அறைக்குப் பொருத்தப்பட்ட கூரைத்தகடுகள் என்பன உடைக்கப்பட்டுத் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது. எனினும் அயலவர்கள் விழித்துக் கொண்டதால் திருடர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

கணினி அறையில் வைக்கப்பட்டிருந்த மூன்று கணினிகளும், உலக உணவுத் திட்டத்தின் கீழான பொருள்களும் பாதுகாப்பாக உள்ளதை மறுநாள் 2 ஆம் திகதி காலையில் அங்கு சென்று பார்வையிட்ட அதிபர் உறுதி செய்தார். இதனையடுத்து குறித்த விடயம் வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி, வவுனியாப் பொலிஸார், உலக உணவுத் திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு வருகை தந்த பொரிஸார் குறித்த பாடசாலையைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் ஆரம்பித்தனர். பாடசாலை அதிபர் முறைப்பாடு ஒன்றையும் வவுனியாப் பொலிஸில் பதிவு செய்தார்.

வவுனியா தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்று இரண்டு வாரத்தினுள் இந்தப் பாடசாலையில் திருட்டு முயற்சி சம்பவம் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-402)



கடந்த வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்தசனிக்கிழமை நடை பெற்றது. இதில் போரின் போது காயமடைந்து இடுப்புக்கு கீழ் பாதிக்கப்பட்டுள்ள கெங்காதரன் பவதாரணிக்கு வட மாகாணக் கல்வியமைச்சர் பரிசில் வழங்குகிறார். (ஜ-102)

# நா வறண்டு நீர் நிலைகளை தேடி அலையும் கால்நடைகள்

பூநகரி, ஏப். 7

பூநகரியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக கால்நடைகள் நீர் நிலைகளைத் தேடி அலையும் நிலைமை காணப்படுகின்றது.

தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி பூநகரியில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்த நிலையில் பிரதேச சபையினால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் அது மக்களுக்கு போதுமானதாக இல்லையென தெரிவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க பூநகரி பிரதேசத்தில் உள்ள குளங்கள், நீர்நிலைகள் என்பவற்றில் நீர் வற்றிய நிலை காணப்படுகின்றது.

இதனால் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரியும் அவல நிலை காணப்படுவதுடன் வேறு இடங்களை நாடிச் செல்வதுடன் கால்நடைகள் காணாமற்போகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வறட்சியின் காரணமாக பல்வேறு வகையான நோய்கள் ஏற்படும் நிலை காணப்படுகின்றது என்றும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஒ-55)

# தமிழர் கலைகளை பாதுகாக்க நாம் ஒன்றிணைய வேண்டும்

*கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி.ஏப். 7

கலைகள் மக்களின் உடல் உள ஆரோக்கியத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே அவற்றைப் பேணி பாதுகாத்து ஆற்றுகை செய்ய வேண்டியது எமது கடமையாகும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இதயராஜ்.

பூநகரி மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோட்ட மட்ட தமிழ் மொழித் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மொழித் தின விழாவில் நம்பிக்கை தரும் வகையில் மாணவர்கள் பங்கு பற்றி சிறப்பித்தனர். பூநகரி கல்விக் கோட்டத்தில் கலையுணர்வு கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் உள்ளனர் என்பதை இந்தப் போட்டி நிகழ்வு வெளிப்படுத்தியது. பூநகரிக் கோட்ட மாணவர்களின் திறமைகளை வளர்த்தெடுப்பதன் மூலம் தேசிய மட்டத்திலும் வெற்றிகளைப் பெறமுடியும்.

தமிழர்களின் தொன்மையான வரலாற்றோடு பூநகரிப் பிரதேசம் இணைந்திருக்கிறது. எமது கலை வரலாறுகளையும் கிராமியச் சிறப்புக்களையும் பாதுாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும் - என்றார். (ஜ-18)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மற்றுமொரு கல்வி வலயம்

*உருவாக்கப்பட வேண்டும் என்கிறார் பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி*

கிளிநொச்சி ,ஏப். 7

கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலம் கல்வி, விளையாட்டு, கலைத்துறைகளை விருத்தி செய்ய முடியும் என பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மரத்தினம் தெரிவித்தார்.

பூநகரிக் கோட்ட தமிழ் மொழித் தின விழா கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரிக் கோட்ட மாணவர்கள் தேசிய மட்டத்தில் கடந்த வருடம் புதிய சாதனைகளைப் பதிவு செய்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுக்கு சிறந்த நடுவர் குழு இருப்பது போல கலைத்திறன் போட்டிகளுக்கும் சிறந்த நடுவர் குழு உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக பூநகரிக் கோட்ட மாணவர்கள் கலைத்திறன் போட்டிகளில் பங்குபற்றும் போது நடுவர் குழு இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

**பூநகரிக் கோட்ட மாணவர்கள் தேசிய மட்டத்தில் கடந்த வருடம் புதிய சாதனைகளைப் பதிவு செய்தனர்.**

கிளிநொச்சி கல்வி வலயம் 105 பாடசாலைகளைக் கொண்டு காணப்படுகிறது. இது நிர்வாக நெருக்கடிகளை ஏற்படுத்துவதால் ஒரு புதிய கல்வி வலயம் ஒன்றை உருவாக்கி மாணவர்களின் கற்றலுக்குத் துணைபுரிய வேண்டும் - என்றார். (ஜ-18)

# சர்வதேச விளையாட்டு மைதானம் கிளிநொச்சியில்

*செப்ரெம்பரில் திறக்கப்படும் என்றார் அரச அதிபர்*

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விளையாட்டு மைதானத்தின் பணிகள் நிறைவடைந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் நிறைவு பெற்று திறந்து வைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி மிகவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் வேலைகள் கடந்த 2012 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நவீன வசதிகள் கொண்ட சர்வதேச தரத்திலான முறையில் அமைக்கப்பட்டு வரும் குறித்த மைதானத்தின் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது, குறித்த வேலைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் வேலைகள் நிறைவடையவுள்ளன. அதன் பின்னர் விரைவாக திறந்து வைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-55)


## துப்பாக்கித் தயாரிப்பில் ஈடுபட்ட நபர் கைது

திருக்கோவில்,ஏப்.7

திருக்கோவில், விநாயகபுரம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்ளூர் துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவரை நேற்று முன்தினம் மாலை திருக்கோவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து சம்பவ தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை விநாயகபுரம், பாலக்குடா பிரதேசத்தில் உள்ள குறித்த வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்ட போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் தெப்பத் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது சுவாமி தெப்பத்தில் வலம்வந்து திருகோணமலை கடற்கரையில் விசேடமாக அமைக்கப்பட்ட இறங்குதளத்தில் தரித்துநின்றபோது விசேட பூசைகள் நடைபெற்றன. (ச-40)

## மட்டு. மாவட்டத்தில் ஆன்மிகப் பேரணி

மட்டக்களப்பு,ஏப்.7

ஆன்மிக உணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு பௌத்த, இந்து, கிறிஸ்தவ,இஸ்லாம் மதங்களின் இளைஞர்கள் பங்கேற்ற ஆன்மிகப் பேரணி மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

ஆன்மிகப் பேரணியில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலுமிருந்து 4 மதங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணி இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுடன் மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அழிந்தன வீதி கடவைகள்; பாதசாரிகள் பெரும் சிரமம்



அழிவடைந்த நிலையில் வீதிக் கடவை

கல்முனை,ஏப்.7

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதான வீதியில் சில இடங்களில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பாதசாரிகளுக்காக போடப்பட்ட மஞ்சள் வீதிக் கடவைகள் அழிந்துள்ளதால் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிக் கடவைகள் இல்லாததால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மஞ்சள் கடவைகள் வீதி விபத்துக்களை தடுக்க உதவுகின்றன.

இவ்வாறான நிலையில் சில இடங்களில் இடப்பட்டுள்ள மஞ்சள் கடவைகள் அழிந்த நிலையில் உள்ளன.

சாய்ந்தமருது சுனாமி வீட்டுத் திட்டம் அமைந்துள்ள வெலிவேரியன் கிராமத்துக்கு செல்லும் வீதிக்கடவை அடையாளம் தெரியாத அளவுக்கு அழிவடைந்துள்ளது.

எனவே இந்த விடயத்தில் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கவனம்செலுத்தவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# குத்தகை காணியில் ஹோட்டல் அமைப்பதை நிறுத்த வேண்டும்

## சட்டத்துக்கு முரணாக செயற்பாடுகளை ஏற்க முடியாது என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு,ஏப்.7

மட்டக்களப்பு, வாகரை, காயான்கேணி கிராமத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணியில் ஹோட்டல் அமைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு மாவட்ட அரச அதிபருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காயாங்கேணி கிராமத்தில் கடற்கரையை அண்டிய காணித் துண்டொன்று 1942 ஆம் ஆண்டு வாழைச்சேனையைச் சேர்ந்த ஒரு நபருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம் அரச காணியாகும். இதனைக் கைமாற்றுவதற்கோ, உறுதி வழங்குவதற்கோ சட்ட ரீதியாக இடமில்லை.

இந்த விடயத்தை ஆராய்ந்து சட்டப்படி அரச குத்தகைக் காணியில் ஹோட்டல் அமைத்துள்ளதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்த ஹோட்டல் அமைக்கப்படும் காணியின் முன்னால் காயான்கேணியின் முக்கிய வீதி செல்கின்றது. அதற்கு முன்னால் கடற்கரைக்கு ஒதுக்கப்பட்ட காணியும் கடலும் உள்ளது.



யோகேஸ்வரன்

**குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம் அரச காணி ஆகும். இதனைக் கைமாற்றுவதற்கோ, உறுதி வழங்குவதற்கோ சட்ட ரீதியாக இடமில்லை.**

சட்டத்துக்கு முரணாக காணிகளைப் பெற்றுள்ள இந்த ஹோட்டல் உரிமையாளர் கடற்கரை வலயகாணியையும் சுவீகரித்துக் கொள்ளும் வகையில் கடற்கரைக்கும் தாம் ஹோட்டல் அமைத்த காணிக்கும் இடையில் செல்லும் வீதியை அரசியல்வாதிகளினதும், அரச உயர் அதிகாரிகளினதும் செல்வாக்கில் தடை செய்யவும், புதிய வீதியை வேறு பக்கமாக ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தச் செயற்பாட்டை ஏற்கமுடியாது. எனவே இந்த மாவட்டத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தர்மத்துக்கும் நீதிக்கும் பங்கம் ஏற்படாத வகையில் அரச குத்தகை காணியில் ஹோட்டல் அமைப்பதைத் தடுக்க வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


சீரடி சாயி மந்திரில் பாபா பிறந்ததினமும் (ஸ்ரீ ராம நவமி) ஏகதின இலட்சார்ச்சனையும்
08.04.2014



பாபா பக்தர்களே!
* பூசைகள் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும்.
* காலை 8 மணி முதல் 9 மணிவரை பக்தர்கள் பாபாவுக்கு பாத பூசைசெய்யலாம் (பால் அபிஷேகம்)

சாவடி ஊர்வலம் (பல்லக்கு உற்சவம்)
இரவு 7 மணிக்கு வட இந்தியா சீர்டியில் நடைபெறுவதுபோல நடைபெறும்.
(ஆலயம்- மருதடி வீதி-றக்கா வீதி-இராசாவின்தோட்ட வீதி- நாவலர் வீதி- ஆலயம்)
ஸ்ரீராம நவமி தினம் மட்டுமே சீர்டியில் பாபாவின் பிறந்த தினமாகக் கொண்டாடப்படுகிறது.
"சீரடி சாயி மந்திர்", 3141, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 722 2568,021 321 1605
ஆலயத்தினர்.

தவறிவிட்டது
கந்தையா குணரத்தினம்
என்பவருடைய தே.அ.அட்டை (341210917V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 28.03.2014 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைச் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(46446) (12.0)
தொடர்பு: 077 853 1071

பேக்கரி உரிமையாளர்கள் கேக் தயாரிப்பாளர்கள் பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!
காலம், காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற
றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது
1kg பைக்கற்றில்!!
மிருதுவான கேக் தயாரிப்பதற்கும்,
அனைத்து வகையான பேக்கரி மற்றும்
பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள்.
தரத்திற் சிறந்த, விலையில் குறைந்த
"றோயல் பேக்கிங் பவுடர்"




Manufactured By:
Royal Industries
No.22,1/1, Adamally Buiding
Wolfendhal Street,
Colombo-13.
ஏக விநியோகஸ்தர் :
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 2567



50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
07.04.2014 (திங்கட்கிழமை)
திருமதி
கலா கௌரவம்
உயிர் சுமந்த உண்மைத் தாயாய்
துயர் களைந்த அன்புத் தாயாய்
எம்மை எல்லாம் ஆளாக்கி
அமுதூட்டிய தாய்மையின் வடிவே
ஆண்டுகள் ஐம்பது அகவையில்
அம்மா
உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
கௌரவம் (கணவர்),
சஜித் (மகன்),
மகள்மார்:- தர்ஷா, பிரியா, தர்ஷி.
மருமக்கள்:-
அன்ரன், கண்ணன், சத்தியராஜ்.
பேரப்பிள்ளைகள்:-
மேனு, டவ், சியா, தபி, டாரி.
10 ஆம், வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
[44574](2.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாவிட்டபுரம்,சாயுடையைச் சேர்ந்த
எல்லுப்போலை சின்னத்தம்பி
BA (Cey) , J.P
(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவியாணையாளர்)
அவர்கள் 14.03.2014 இல்
சமாதான நீதிவானாக
சத்தியப் பிரமாணம் எடுத்துக்
கொண்டமையைப்
பாராட்டுவதோடு அவர்
பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.
Congratulation
மாவிட்டபுரம்.சி.க.கூ சங்கம்,
மாவிட்டபுரம் மத்திய சனசமூக நிலையம்,
மாவிட்டபுரம் கி.மு.சங்கம்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
நோயாளர் நலன்புரி சங்கம்
(பதிவிலக்கம்:JF/VN/VOL/2013/05)
ஈருருளி வாகனங்களுக்கான பாதுகாப்புச் சேவைக்கு கேள்வி விண்ணப்பம் கோருதல்
மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் ஈருருளி வாகனங்களுக்கான பாதுகாப்புச் சேவையை 01.05.2014 முதல் ஒருவருட காலத்திற்கு வழங்க தனிநபர்கள்/பொது நிறுவனங்களிடமிருந்து, மேற்படி விண்ணப்பங்கள், 2014.04.20ஆம் திகதி வரை கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் ரூபா 50.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். வைத்தியசாலை ஊழியர்கள் கேள்வி விண்ணப்பம் கோர முடியாது.
(46499) (12.5.6)
தலைவர், செயலாளர்,
நோயாளர் நலன்புரி சங்கம், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.

## பொருளாதார நெருக்கடியால் வங்கியில் கடன் பெறும் அரசு


கொழும்பு,ஏப்.7
அரசு எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியால் அரச வங்கிகளில் கடன் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்று கூறப்படுகிறது.
கடந்த ஜனவரி மாதம் முதல் அதிகளவில் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
ஜனவரி மாதம் அரசு 6,830 கோடி ரூபா கடன் பெற்றுக் கொண்டுள்ளது.
இதேவேளை, நாடு பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கி வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறை

### சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு,ஏப்.7
நாட்டிலுள்ள அரச வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறை நிலவுகிறது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தாதியர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை விரும்பிச் செல்வதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.
ஒவ்வொரு வாரமும் சுமார் 50 தாதியர்கள் வரை வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என்று அவர் கூறினார்.
தற்போது அரச வைத்தியசாலைகளில் 10,000 தாதியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


மைத்திரிபால சிறிசேன


நாடாளுமன்றம்

## நாடாளுமன்றம் 3 மாதங்களுக்கு மூடப்படும்?

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள நாடாளுமன்றம் மூன்று மாத காலம் மூட வேண்டிய நிலை ஏற்படும் என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.
நாடாளுமன்றம் நிர்மாணிக்கப்பட்டு 35 வருட காலம் கடந்துள்ள நிலையில், இதுவரை அது மறுசீரமைக்கப்படவில்லை. அதனால் நாடாளுமன்றத்தை முற்றாக புனரமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், நாடாளுமன்றம் மூன்று மாதங்கள் மூடப்படவுள்ளது என்று கூறப்படுகிறது.
மறுசீரமைப்பு பணிகளுக்கான திகதி, கால எல்லை இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. எனினும் அதற்கான அடிப்படை அறிக்கை ஏற்கனவே பிரதமரின் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போரை விற்று தொடர்ந்து பிழைப்பு நடத்த முடியாது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு


பொன்சேகா

கொழும்பு,ஏப்.7
போரை விற்று தொடர்ந்தும் அரசால் பிழைப்பு நடத்த முடியாது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
போரையும், மின்சார நாற்காலியையும் காண்பித்து அரசு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது. எனினும், இந்த முறை தேர்தலில் எதிர்பார்த்தளவு வெற்றி கிட்டவில்லை என்று அவர் கூறினார்.
பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் 2,50,000 வாக்குகளை எனது கட்சி பெற்றுக் கொண்டது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# மீண்டும் ஆட்சிக்கு நான் வர முடியும்

### பணம் சம்பாதிக்கும் நோக்கிலேயே இன்று பலர் அரசியலில்

கொழும்பு,ஏப்.7
இரண்டு முறை நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்த எனக்கு, மீண்டும் என்னால் ஆட்சிக்கு வர சந்தர்ப்பம் கிடைக்கும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
எம்பிலிப்பிட்டிய ஹல்மில்லார பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் எனக்கு அந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.
நாட்டின் அரசியல் அதலபாதாளத்துக்கு விழுந்துள்ளது. பணத்தை சம்பாதிக்கும் நோக்கத்திலேயே பலர் அரசியலுக்கு வருகின்றனர்.
நாட்டில் காணப்படும் நிலைமையை மாற்ற எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுக்காது போனால், மக்கள் அதற்கு தீர்வை வழங்குவார்கள்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நடைமுறைப்படுத்தியுள்ள 18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி ஒருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும்.


சந்திரிகா

**நாட்டில் காணப்படும் நிலைமையை மாற்ற எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுக்காது போனால், மக்கள் அதற்கு தீர்வை வழங்குவார்கள்.**

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்று கூறப்பட்டிருந்தது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்தச் சட்ட வரைபில் மாற்றங்களை செய்து ஒருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்று சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். -என்றார். (ச)

## வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திரிகா இரகசியமாகச் சந்திப்பு

கொழும்பு,ஏப்.7
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் இடையில் இரகசிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பு அத்தனகல, ஹொரகொல்லவில் அமைந்துள்ள சந்திரிகாவின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இந்தச் சந்திப்பில் அமெரிக்கா, இந்தியா, தென் கொரியா ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகள் கலந்து கொண்டனர்.
அரசு சந்திரிகாவின் நடவடிக்கைகளை கண்காணித்து வருவதாக அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பண்டிகைக் காலத்தில் விசேட பாதுகாப்புகள்


அஜித் ரோஹண

கொழும்பு,ஏப்.7
பண்டிகைக் காலத்தில் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சீருடையிலும், சிவில் உடையிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.
மதுபோதையில் வாகனம் செலுத்துகின்ற சாரதிகளை கைது செய்வதற்கான 24 மணித்தியால நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறினார்.
பண்டிகைக் கால கொள்வனவுகளின் போது பெண்கள் தங்களின் நகைகள் மற்றும் பணம் உள்ளிட்ட உடைமைகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று பொலிஸார் அறிவுரை வழங்கியுள்ளனர்.
இந்தக் காலப்பகுதியில் பணக் கொடுக்கல் வாங்கல்களின்போது போலி நாணயத்தாள்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)


நியோமல் பெரேரா

## ஐ.நா. குழுவுக்கு விசா; இன்னும் இல்லை முடிவு

### வெளிவிவகார அமைச்சு தகவல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விசாரணைக் குழுவுக்கு இலங்கைக்குள் வருவதற்கு விசா வழங்குவது குறித்து இன்னும் அரசு முடிவெடுக்கவில்லை என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித் தார்.
ஐ.நா. மனித உரிமைகள் விசாரணைக் குழுவுக்கு விசா வழங்குவதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளதாக வெளி வந்துள்ள செய்திகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மனித உரிமைகள் விசாரணைக் குழு தொடர்பாக இது வரை உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படாத நிலையில் விசா வழங்குவது குறித்து எதுவும் கூற முடியாது என்று அவர் கூறினார். (ச)

## நீர்மின் உற்பத்தி 12 வீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு,ஏப்.7
நீர்மின் உற்பத்தி 12 வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது.
நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் போதுமான அளவு மழை வீழ்ச்சி காணப்படாமையே இதற்கு பிரதான காரணம் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான செனஜித் தசநாயக்கா தெரிவித்தார்.
இதேவேளை, நாட்டில் பரவலாக மழை பெய்யக் கூடும் என்று திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலீஹீன் தெரிவித்தார். (ச)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்

### கட்சித் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியம் என்கிறார் சஜித்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இவ்வாறு கூறினார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.
அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அவர் தெரிவித்தார்.



சஜித் பிரேமதாச

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிறந்த எதிர்காலமில்லை.
இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியின் தலைமைத் துவ மாற்றம் ஜே.வி.பி யின் தலைமைத்துவ மாற்றம் ஆகியவற்றினால் சாதக விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
இவற்றை முன் மாதிரியாகக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் எடுக்க வேண்டும்.
கட்சித் தலைமைத்துவத்தில் மாற்றம் செய்யப்பட்டால் அதிகளவான ஆதரவாளர்கள் மீளவும் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்று அவர் கூறினார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டுக்கு நலன் தரும் போக்கை கைக்கொள்வதால் பாதிப்பு வராதே....

போர்க் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து வரும் இலங்கை அரசு, புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பதினைந்தைத் தடை செய்துள்ளதோடு, அவற்றின் பிரதிநிதிகள் 424 பேர் இலங்கை வருவதற்குத் தடையும் விதித்துள்ளது.

இதே வேளை, ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசு மீதான தீர்மானத்தின் பிரகாரம், மனித உரிமை மீறல்கள் குறித்த ஐ.நாவின் விசாரணை அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேலும் , மேற்படி விசாரணையில் சாட்சியம் வழங்குவதற்கு- அனைத்துலக மட்டத்திலும் இந்நாட்டு மட்டத்திலும் சாட்சியமளிப்பதற்குப்- பலர் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவா தீர்மானத்துக்கு அமைவாக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மூலம் போர்க் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், இலங்கை அரசைக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த முடியும் என அனைத்துலக சட்டத்தரணிகள் பலரும் சுட்டிக் காட்டி உள்ளனர்.

மேலும், இறுதிப் போரின் போது வன்னியில் பணியாற்றிய வைத்தியர்களும், இறுதித் தருணத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட கோரச் சம்பவங்களையும் அனைத்துலகத்துக்கு வெளிப்படுத்துவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 'இலங்கையின் கொலைக்களம்' , 'யுத்த சூனிய வலயம்' போன்ற போர்க்குற்றக் காணொலிகள் மற்றும் பல ஆவணங்களை முக்கிய ஆதாரங்களாக முன்வைத்து, அவை தொடர்பான சாட்சியங்களை வழங்குவதற்குப் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் தயாராகி உள்ளனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஜெனிவாத் தீர்மானத்தில் அனைத்துலக விசாரணை வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில், புலம்பெயர் தமிழர்களின் சாட்சியங்களைத் தடுக்கும் நோக்கத்துடனேயே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். இந்தத் தடையை மேற்கொள்ள அரசு முடிவு செய்தமைக்கு அதுவே பிரதான காரணமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது; அவதானிகளும் சுட்டிக்காட்டுகின் றனர்.

மேலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இங்கு வருவதற்கு அரசு அனுமதிக்காது என்று பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், மனித உரிமைகள் ஆணைக்குழு வெளிநாட்டிலிருந்தவாறே விசாரணைகளை மேற்கொள்ள முடியும். அதனைக் கருத்தில்கொண்டே புலம்பெயர் தமிழர் அமைப்புகளை அரசு தடை செய்துள்ளது என்றும் கருதலாம்.

இலங்கை அரசு மீதான அனைத்துலக விசாரணைக்கு, தமது நாடு நெருங்கிய நிலையில் செயற்படும் என்று பிரித்தானியப் பிரதமர் தெரிவித்திருப்பதும் இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண் டியதாகும்.

பிரதமர் டேவிட் கமரூன், பிரிட்டன் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளை, இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பேணுதல், அந்த நாட்டில் நல்லிணக்கத்தைப் பேணுதல் என்பன சமாதானத்துக்கு அவசியமானவை என்று அர்த்தபுஷ்டியுடன் தெரிவித்திருக்கிறார். இது குறித்து பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் தாம் கலந்துரையாடியதாகவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளைச் சேர்ந்த எல்லோரையும் ஒட்டுமொத்தமாகப் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்க முடியுமா? என்று அவர் கேள்வி எழுப்பி உள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எவர், எந்த நாடு, எந்த அமைப்பு என்னென்னவற்றைக் கூறினாலும் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளுமா எங்கள் நாட்டு அரசு?- என்ற வினாவே மேல் எழுகிறது.

இப்போதைய நிலையில், அனைத்துலக நாடுகளுடன் இசைந்து, ஒத்துழைப்பு நல்கிச் செயற்பட மனம் கொள்ளாமல் முரண்டுபிடிக்கும் போக்கு நீடித்தால், எங்கள் நாட்டுக்கு அவை உதவப் போவதில்லை என்பதே பெறுபேறாக எழும்.

அனைத்துலக நட்புறவு எப்போதும் நாட்டுக்கும் மக்களுக்கும் நலன்களைத் தரும் என்பது குறித்து சிந்திக்கலாகாதா....?

# எந்த ஒரு விசாரணைக்கும் இடம் தரப் போவதில்லை

## அரசு கொள்கை ரீதியில் திட்டவட்டம்

**எந்தவொரு சர்வதேச விசாரணைக்கும் இணங்கிப் போவதில்லை அரசின் கொள்கை ரீதியான தீர் மானம் உள்ளக விசாரணை பற்றியும் விரிவாக கலந்துரையாடல்**

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்



நடந்து முடிந்த இரண்டு மாகாண சபைகளுக் கான தேர்தல் பரப்புரைகளின்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சித் தலைவர்கள் , ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்துக்கு முகம் கொடுப்பதை விட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மின்சாரக் கதிரையில் அமர்வதற்குத் தயாராய் இருக்கிறார் என்று அடித்துக் கூறிப்பேசி வந்தார்கள். ஆனால் அவ்வித பிரசாரம் அதிக அளவு ஆதரவைப் பெற்றுத் தர தவறிவிட்டது. ஜனாதிபதி ராஜபக்ஷவும் கூடத் தேர்தல் கூட்டங்களில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்க ஆதரவில் கொண்டு வரப்படுகின்ற தீர்மானம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வரும் நோக்கத்தைக் கொண்டது என்று தெரிவித்து வந்தார். இது ஒருபுறமிருக்க அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு வந்த அபிவிருத்திப் பணிகள் பற்றிய பரப்புரையும் பெரிய அளவில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தெற்கில் அதிவேகப் பாதைகள் காலியில் பின்னதுவ என்ற இடத்திலிருந்து மாத்தறையில் கொடகம வரையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வாக்களிப்புக்குச் சற்று முன்னதாக இது முற்றுப் பெற்றிருந்தது. அந்தப் பாதையை ஹம்பாந்தோட்டை வரையில் வேகப் பாதையாக மாற்றவும் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டமானது ஜனாதிபதி ராஜபக்ஷ குடும்பத்தின் சொந்த மாவட்டமாகும். சர்வதேச விமான நிலையம், ஒரு துறைமுகம், ஒரு சர்வதேச மாநாட்டு மண்டபம், ஹோட்டல் கட்டுமானத் தொகுதிகள் போன்றவை அங்கு தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பல பில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்திகளாகும். இன்னும் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டு இங்கு 66. 95 வீத வெற்றியைப் பெற்றிருந்த ஐ.ம.சு.மு கடந்த வாரம் தேர்தலில் 57.42 வீதத்துக்கு வீழ்ச்சியுற்றிருந்தது.

மேற்கு மாகாணத்தில் சிறப்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வானை முட்டும் கட்டடங்களும் இருபக்கமும் இயற்கைக் காட்சிகளைக் கொண்ட வீதிகளும், நீர் பாய்ந்தோடும் கால்வாய்களும், பாலங்களும் புதிய வடிவம் பெற்று எழுந்தவண்ணமுள்ளன. கொட்டாவ வரையில் இருந்த அதிவேகப்பாதை தேர்தலுக்கு முன்னர் கடுவல வரையில் நீடிக்கப்பட்டது. கொழும்பை மிக அழகான நகரமாக மாற்றி அமைக்கும் பணிகள் தொடர்கின்றன.

மின்சாரக் கதிரை எச்சரிக்கைக்கு அப்பால் ஐ.நா.தீர்மானத்தை முறியடிக்கும் தீர்வாக மக்கள் ஆணையாக இந்தத் தேர்தல் முடிவு அமையப் போகிறது என்று அரசுத் தலைவர்கள் கூறி வந்தார்கள். மனித உரிமைச் சபைக்கு இலங்கை சார்பில் சென்ற உறுப்பினர்களில் ஒருவரான அமைச்சர் சிறிபால டி சில்வா மக்கள் தீர்வு ஒரு எச்சரிக்கையாக அமையப் போகிறது என்றும் கூறியிருந்தார்.

கடந்த வாரம் நடந்து முடிந்த இரண்டு மாகாண சபைத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட எந்த ஒரு சிறுபான்மை இன வேட்பாளரும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தங்கள் கொள்கைச் சின்னங்களில் போட்டியிட்டிருந்தன. இதிலிருந்து அந்த மக்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கே தமது வாக்குகளை வழங்கியிருந்தார்கள் என்று தெரிய வந்துள்ளது. இதிலிருந்து எழும் கேள்விகள் என்னவென்றால் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது அரசு சார்ந்த கட்சிகளின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ 50 + 1 வீத வாக்கைப் பெற்றுக் கொள்வது சிறுபான்மையினரின் ஆதரவில்லாமல் சாத்தியமாகுமா என்பதாகும்.

இது போக இந்த இரு தேர்தல்களிலும் அரசு சார்ந்த வளங்கள் பெரும் அளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

அரச வளங்கள் ஊடகங்கள் முதற்கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. அரசின் உயர்மட்டப் பிரமுகர்கள் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அரச தொலைக்காட்சிகளில் தோன்றி பரப்புரை செய்துள்ளார்கள் என்று பவ்ரல் என்ற சுதந்திர நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள கட்சிகளின் தேர்தல் முடிவு பற்றிய விமர்சனக் கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிறன்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

தேர்தல் முடிவுகள் குறித்து விவாதிக்கப்பட்ட போதிலும் ஜெனிவாத் தீர்மானம் குறித்த விவாதமே அதிக நேரத்தைப் பிடித்தது. ஜனாதிபதி அங்கு பேசிய போது தேர்தலில் வாக்குகள் குறைந்துள்ளதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களின் ஆதரவை இழந்து விட்டதாக எதிர்க்கட்சியினர் கற்பிக்க முயல்கிறார்கள். 57 வீதமான வாக்குகளைப் பெற்றமையானது வெற்றியைத்தான் குறிக்கும் என்று வாதிட்டார். அது தவறு என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட் டினார்.

ஜெனிவாத் தீர்மானம் பற்றிய பிரச்சினையை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வியாக எழுப்பினார். அரசின் பிரதிபலிப்பு என்னவாக இருக்கப் போகிறது என்று அவர் கேட்டார். அதற்கு எந்தவொரு சர்வதேச விசாரணைக்கும் அரசு செவி சாய்க்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கை ஒரு வேளை அதற்குச் சம்மதித்தாலும் கூட விசாரணையின் பின்னர் மனித உரிமைகள் சபையின் தீர்மா னம் முடிவுற்றதாகவே காணப்படும்.

அதன் மீதான நிலைமைகள் மோசமடையுமானால் தாம் காபந்து அரசு ஒன்றை பதவியில் அமர்த்திவிட்டு தேர்தல் ஒன்றை நடத்துவார் என்று குறிப்பிட்டார். ஜனாதிபதி தமது சகாக்களிடம் மேலும் கூறுகையில் :

இழப்பை சந்திக்கப் போவது தாம் மட்டுமல்ல நாம் அனைவருமே என்பதால் அனைவருமே ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்துச் செயற்பட வேண்டும் என்றார்.

வெளியுறவு அமைச்சர் -ஜி.எல்.பீரிஸ் பேசுகையில் தீர்மானத்தை நாம் தோற்கடித்துவிட்டதாக முன்னர் கூறியிருந்த நிலையில் இப்போது விசாரணைக்காக பெரும் எடுப்பில் பணம் தேவைப்படும் என்பதால் செயற்பாடு தாமதமடைவது சாத்தியம் என்று ஒரு புது விடயத்தை முன்வைத்தார். அதற்கு உடனடியாக பதிலளித்த அமைச்சர் விமல் வீரவன்ச இதன் வெளிப்பாடு செலவினத்தில் தங்கியிருக்காது எமக்குள்ள பிரச்சினை இந்தியா ஏன் வாக்களிக்காமல் விட்டது என்பதைக் கண்டுபிடிப்பதாகும் என்றார். இதற்குப் பதிலளித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வாக்களிக்காமல் விடும் தீர்மானம் காங்கிரஸ் அரசினால் எடுக்கப்படவில்லை. இந்தியப் வெளியுறவு அமைச்சுதான் இந்த முடிவை எடுத்தது. நியூயோர்க்கில் இருந்த இந்திய பெண் ராஜதந்திரி கொப்பாகடே உடல் ரீதியில் சோதனையிடப்பட்டு குற்றமிழைக்கப்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்பட்ட விடயம், ஒரு காரணமாக இருக்கலாம். அத்துடன் சர்வதேச விசாரணையில் இந்தியாவும் உள்ளடக்கப் படலாம் என்ற பயமும் இருக்கலாம் என்று கூறினார்.

கடந்த வாரம் இந்திய ஸ்தானிகர் குமார் சிங்ஹா வெளிநாட்டு நிருபர்கள் கூட்டமொன்றில் பேசும்போது மனித உரிமைகள் சபைக் கூட்டம் நடப்பதற்கு முன்பாகவே வாக்களிக்காமல் விடுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததாகவும் அது இரகசிய மாக வைக்கப்பட் டிருந்தமையால் இலங்கைக்கும் தெரிந்திருக்கவில்லை என்றும் கூறியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டு முன்னணி அரசு கொள்கை தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. எந்த ஒரு சூழ்நிலையிலும் இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் சபை சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கு அனுமதிப்பதில்லை என்பதாகும் அது. ஐ.நா.மனித உரிமைகள் சபையினால் வெளியில் இருந்து விசாரணையொன்றை நடத்த முடியும் என்று வெளியுறவு அமைச்சர் பீரிஸ் கூறினார். நம்பகமான உள்ளக விசாரணையொன்றை நடத்துவது குறித்து விரிவாகக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளதாக அரச தரப்பு ஒரு தகவல் தெரிவிக்கின்றது. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் நிபுணர்கள் குழுவில் உறுப்பினராக இருந்தவரான யஸ்மின்சூகா வெளியிட்டிருந்த கருத்துகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. ஐ.நா.மனித உரிமை சபையின் தீர்மானத்தை அனுசரித்துச் செயற்படாது போனால் இலங்கை மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என்று சூகா கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம் இன்று



த.அருணன்,
மட்டுவில்


இலங்கையிலே வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும் உள்ள பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், முருகன் ஆலயங்கள், அம்மன் ஆலயங்கள், விநாயகர் ஆலயங்கள் எனப்பல சிறப்புப் பெற்ற ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் யாழ்.மாவட்டத்தில் அம்மன் ஆலயங்களுள் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயமும் வரலாற்றுடன் ஒன்றித்த ஆலயமாகும்.

இந்த ஆலயம் தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி, புத்தூர் வீதியின் மட்டுவில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. மருத மரச் சூழலும் புளியமரம், பனைமரங்களும் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. தல விருட்சமாக மருதமரங்களும்,புளிய மரங்களும் ஆலயச்சூழலில் காணப்படுகின்றது. ஆலயத்தின் தீர்த்தக்கேணி நீண்ட நீள அகலம் கொண்டதாக அமைக்கப்பட்ட புனித தீர்த்தமாகும். இந்தத் தீர்த்தம் மகிமை பெற்றது. நோய்கள் பல தீர்க்கும் அரு மருந்தாக உள்ளது.



> பங்குனி உற்சவம் என்றதும் மட்டுவில் பிரதேசம் தனிச் சிறப்புப் பெற்றுவிடும். இந்தப் பிரதேச மக்கள் தங்கள் பிரதேசங்கள் வீதிகள் யாவும் துப்புரவு செய்து ஆகமசீலராக மாறி அன்னையை வணங்குவர்.

பன்றித்தலைச்சி அம்பாள் அன்றைய காலகட்டத்தில் ஒரு பனை ஓலையால் வேயப்பட்ட குடிலில் அமர்ந்திருந்தாள். அதிலிருந்து அருள் பாலித்தாள். அன்றைய நாள்களில் விளக்கு வைத்து இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை மக்களால் பூசிக்கப்பட்டாள் அம்மன். அன்றைய நாள்களில் பக்தன் ஒருவனின் விவசாயப் பயிர்களை அழித்த பசுமாடு ஒன்றை அந்த விவசாயி எறிந்து துரத்திய போது அது தவறுதலாக இறந்துவிட்டது. இது தொடர்பாக அந்த விவசாயிக்கு எதிராக பஞ்சாயத்து தலைமையில் விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது. இதன்போது அந்த விவசாயி செய்வதறியாது தான் பூசிக்கின்ற அம்மனை வணங்கி தாயே ஆச்சி என்னைக் காப்பாற்று நீயே எனக்கு அபயம் என வணங்கி அழுதான். இதனையடுத்து பஞ்சாயத்து சபையினர் கூடி குறித்த இடத்தைப் பார்த்த போது அங்கு மாட்டுத்தலை பன்றித்தலையாகக் காணப் பட்டது.



அன்று தொட்டு இந்த அம்பாள் பன்றித்தலைச்சி அம்மன் என அழைக்கப்பட்டு அருள் பாலித்து வருகின்றாள். பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்துக்கு வெளிநாடுகளிலிருந்தும், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் வருகின்றனர்.

பங்குனி உற்சவம் என்றதும் மட்டுவில் பிரதேசம் தனிச் சிறப்புப் பெற்றுவிடும். இந்தப் பிரதேச மக்கள் தங்கள் பிரதேசங்கள் வீதிகள் யாவும் துப்புரவு செய்து ஆகம சீலராக மாறி அன்னையை வணங்குவர். அம்பாளின் தெய்வீக சிலம்பு கூறும் பெருமைகளை புகழும் ஏடுகளை இந்தப் பகுதியைச் சேர்ந்த அம்பாளின் அடியவர்கள் வைத்திருந்து அன்றைய நாள்களில் ஆலயத்தின் வாயிலில் பக்தி சிரத்தையுடன் மிருதங்கம், சல்லாரி, உடுக்கையுடன் பாடி அம்பாளின் வரலாற்றை பண்ணுடன் பாடுவர். இதனை அடியவர்கள் சூழ இருந்து கேட்பார்கள்.



அந்தக்காலம் மிக அற்புதகாலமாக இருந்தது. இந்தப் பாடல்கள் ஏட்டு வடிவில் காணப்பட்டன.

தலச்சிறப்புப் பெற்ற பன்றித்தலைச்சி அம்பாள் சந்நிதி சென்று வழிபட்டு அருள் பெறுவோமாக!

---

## தவக்காலச் சிந்தனை



### தொடர் கதையான சோதனைகள்

தவக்காலத்தைப் புத்துயிர் தரும் வசந்த காலம் என்ற வித்தியாசமான கோணத்தில் சிந்திப்பது போன்று சோதனைகளைப் பற்றியும் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திக்க முயற்சி செய்வோம். சோதனை என்ற வார்த்தையைக் கேட்டதும், நம்மில் பலருக்கு அவ்விடத்தை விட்டு ஓடிவிட வேண்டும் போலத் தோன்றலாம். அவ்வளவு பயம், ஆற அமரச் சிந்தித்தால், சோதனைகள் நம் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஒரு முக்கிய அம்சம் என்பது தெரியவரும். சோதனைகள் இல்லாத மனித வாழ்வு இல்லை என்ற உண்மைகளை நாம் உணரலாம். இயேசுவே சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

சோதனைகள் எப்படிப்பட்டவை என்பதை அறிந்திருந்தாலும் அவைகளுக்கு இடம்தரும் நம் போக்கை விளக்கும் ஒரு கதை இது. சிவப்பு இந்தியர் என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பழங்குடியினர் மத்தியில் ஒரு வழக்கம் உண்டு. அவர்கள் சமுதாயத்தில், ஓர் இளைஞன் வயதுக்கு வரும் வேளையில் அவர் சில நாள்கள் காட்டிலும் மலையிலும் தனியே தங்கி, தன்னையே ஒரு சக்தி மிகுந்த வீரனாக மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தச் சமுதாயச் சடங்கில் ஈடுபட்டிருந்த ஓர் இளைஞன், ஒருநாள் பனி படர்ந்திருந்த ஓர் உயர்ந்த மலை உச்சியைச் சென்றடைந்தார். உலகின் உச்சியை அடைந்து விட்டதைப் போன்ற வெற்றி பெருமிதத்துடன் அவர் அங்கு நின்றுகொண்டிருந்த போது காலடியில் ஏதோ ஊர்ந்ததைப் பார்த்தார். அது ஒரு கட்டுவிரியன் பாம்பு. அந்தப் பாம்பு இளைஞனிடம் பேசியது. நான் இறக்கப் போகிறேன். நான் இந்தப் பனியில் இருந்தால் ஒன்றும் கிடைக்காது. எனவே தயவு செய்து என்னை உன் கம்பளிப் போர்வைக்குள் வைத்து கீழே எடுத்துச் சென்று, அங்கே என்னை விட்டுவிடு. உனக்கு நான் என்றும் நன்றிக் கடன் பட்டிருப்பேன் என்றது. இளைஞன் பாம்பிடம், உன் குணம் எனக்குத் தெரியும். நான் உன்னைக் கையில் எடுத்தால் நீ என்னைக் கடித்துக் கொன்று விடுவாய் என்றார். பாம்பு அவரிடம் கட்டாயம் இல்லை. உன்னிடம் நான் அப்படி நடந்துகொள்ள மாட்டேன் என்று கூறியது. இளைஞன் தயங்கியபோதிலும் கட்டுவிரியன் நயமாகப் பேசி அவரைச் சம்மதிக்க வைத்தது.

இளைஞன் பாம்மை எடுத்து தன் கம்பளிப் போர்வைக்குள் வைத்துக் கொண்டு கீழே இறங்கினார். சமவெளியை அடைந்ததும் பாம்பை எடுத்து தரையில் விட அவர் முயன்றபோது கட்டு விரியன் திடீரென இளைஞனைக் கடித்தது. என்னைக் கடிக்கப் போவதில்லை என்று உறுதி அளித்தாயே என்று இளைஞன் கதறினார். பாம்பு அவரிடம் மலை உச்சியில் என்னை நீ கையில் எடுக்கும் போதே என் குணம் உனக்கு நன்றாகத் தெரிந்ததே! என்று சொல்லிவிட்டு அதன் வழி சென்றது. போதை, மது, பேராசை, பதவிவெறி என்று நம் வாழ்வைச் சுற்றி வருபவை நச்சுப் பாம்புகள் என்று தெரிந்தும் அவற்றைத் தூக்கி அல்லற்படுகின்றோம்.

*எம்.சேவியர்.*

---

## நல்லைக் குருமணியின் குருபூசை தினம் இன்று

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை அமைத்த நல்லைக் குருமணி அவர்கள் தெய்வமாக நாங்கள் வணங்க வேண்டிய ஒருவராவார். இன்று நல்லூரில் அமைந்திருக்கின்ற அந்த ஆதீனத்தில் சுவாமிகளது 33 ஆவது குருபூசைத்தினம் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப் பெறுகின்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்கி வளர வேண்டும் என்னும் பெருநோக்கில் அமைக்கப்பட்டதே நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமாகும். இந்தியாவில் பல்வேறு ஆதீனங்கள் துரித கதியில் செயற்பட்டு சைவத்தையும் தமிழையும் நன்கு பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதைக் கண்ணுற்ற நல்லைக் குருமணி அவர்கள் தாமும் இலங்கையில் அதைப் போலவே ஓர் ஆதீனம் உருவாக்கி அறப்பணி புரியவேண்டுமென்று திருவுளங்கொண்டார். அந்த உணர்வின் வெளிப்பாடே இன்று நல்லூரிலே நல்லைக் கந்தன் ஆலய மேற்கு வீதியில் அமைந்து பல நற்பணிகள் புரிந்து வருகின்ற நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இந்த ஆதீனம் சமயம் வளர தம்மாலான பல பணிகள் செய்து வருகின்றது.

1966 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப் பெற்ற இவ்வாதீனம் சமய பாட வகுப்புகள், சங்கீத இசை வகுப்புகள், பாலர் வகுப்புகள், வயலின், மிருதங்க பயிற்சி வகுப்புகள் என்று இன்னோரன்ன பல வகுப்புக்களை ஆரம்பித்து நடத்தி கலை வளரப் பாடுபடுகின்றது. இன்னும் சமய தீட்சை, பஜனை முதலானவற்றைச் செவ்வனே நடத்தி மக்கள் மத்தியில் பூரண நல்லாதரவு பெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றது.

கதாப்பிரசங்கம் செய்வதில் இருவருக்கு நிகர் இவரே. இவரைப் போலக் கதை சொல்லும் அறிவும் ஆற்றலும் வேறு ஒருவருக்குமே இல்லை. எங்கெல்லாம் திருவிழாக்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் இவருடைய கதாப் பிரசங்கம் இருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ள மூலை முடுக்கெல்லாம் சென்று பிரசங்கம் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமை இவரையே சாரும்.

நல்லூர்க் கந்தன் மஹோற்சவ காலத்தில் இவருடைய கதாப் பிரசங்கம் நள்ளிரவுவரை நிகழும். இவருடைய பிரசங்கம் கேட்பதற்கென்று யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு வந்து கூடுவர்.

தம்முடைய கணீரென்ற குரலினால் எல்லோரையும் தம்பால் ஈர்த்திழுத்துக் கொள்வதில் இவர் சமர்த்தர். தமது தொண்டையினாலேயே தொண்டாற்றிய இவர் எல்லோராலும் 'மணிபாகவதர்' என்று அழைக்கப் பெற்றார். இலங்கையில் ஆதீனம் அமைக்க வேண்டும் என்ற பெரு விருப்பினால் இந்தியாவிலுள்ள மதுரை ஆதீனத்துக்குப் போய் துறவு பூண்டு 'காஷாயம்' பெற்று "சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்" என்ற திருநாமத்துடன் இலங்கை வந்து நல்லூரிலே திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவி சேவை செய்த சுவாமிகளுடைய பெருமை சொல்லில் அடங்காது.

இவருடைய சமாதிக் குருமூர்த்த ஆலயம் நல்லை ஆதீனத்தில் அமைந்துள்ளது. 10.04.1981 இல் முத்திப் பேறடைந்த திருவாதிரை நாளே குருபூசைத் தினமாக இன்று கொண்டாடப்படுகின்றது.

*கலாபூஷணம், இராசையா ஸ்ரீதரன்*
*(நல்லை ஆதீன சமயப் பிரசாரகர்.)*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: திடீர் பணத்தட்டுப்பாடு ஏற்படும். எதைப் பற்றியாவது யோசித்துக் கொண்டே இருப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் அலுவலக வேலைகளை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம்.



**இடபம்**: பிள்ளைகளின் மீது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நெருக்கமானவர்களுடன் ஏற்படும் சந்திப்பு மன மகிழ்ச்சியைத் தரும். எதைப்பற்றியாவது யோசித்துக்கொண்டே இருப்பீர்கள். பணத் தேவை உண்டாகும்.



**மிதுனம்**: உத்தியோகத்தில் உயர்வு பெறுவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பணத் தட்டுப்பாடு நீங்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய அனுகூலம் ஏற் படும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி அமைதி உண்டாகும்.



**கடகம்**: உடல் ஆரோக்கியம் குறைவதுடன் மருத்துவ செலவும் ஏற்படலாம். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் நன்மைகள் உண்டாகும்.



**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.



**கன்னி**: மனக்கவலை நீங்கி எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் வரும். உத்தியோகம் பற்றி முக்கிய முடிவு எடுப்பீர்கள். இடமாற்றம் ஏற்படலாம். வீண் அலைச்சல், காரிய தடை நீங்கும். பணவரத்து அதிகரிக்கும்.



**துலாம்**: அடுத்தவர்களுக்கு உதவி செய்யப்போய் வீண் பழி சுமக்க நேரிடலாம் கவனம் தேவை. அயல் வீட்டாருடன் கவனமாக பழகுவதன் மூலம் தேவையற்ற சண்டைகளை தவிர்க்க முடியும்.



**விருச்சிகம்**: அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எந்த வகையிலாவது உழைப்பு வீணாகும். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபங்கள் உண் டாகும்.



**தனுசு**: மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் கெட்ட பெயர் வாங்க நேரலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப் பதைத் தவிர்க்கவும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியத்தைச் சாதிப்பீர்கள்.



**மகரம்**: மனதில் திடீர் பதற்றம் ஏற்பட்டு நீங்கும். அடுத்தவர்களுடன் வீண் வாக்குவாதங்களும் அதனால் கருத்து வேற்றுமையும் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தேவையான பண உதவி கிடைக்கும்.



**கும்பம்**: எதிர்பார்த்த தொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபத்தை குறைத்துக் கொண்டு செயலாற்றுவது வீண் பகை வராமல் தடுக்கும். குடும் பத்தில் இருந்த குழப்பம் நீங்கும்.



**மீனம்**: அறிமுகமில்லாத நபர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதுரியமாக பேசுவது நல்லது..

## நாளை

**பங்குனி-25 செவ்வாய்க்கிழமை | 08.04.2014**

திதி: நவமி முழுவதும்
நட்சத்திரம்: புனர்பூசம் மு.ப.11.10 வரை

சுபநேரம்: 10.37-12.07 வரை
இராகுகாலம்:.03.07-04.37 வரை

ஸ்ரீராம நவமி

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### பொருள்காட்சியில் இந்துக்கள்

'கலை மாளிகை'யின் வாயிலுக்கு இடது புறத்தில் ஓர் அறை உள்ளது. 'எண் 1 உள்ளே செல்ல அனுமதி இல்லை' என்று அதன் முகப்பில் எழுதியிருக்கும். சர்வ மத மகா சபைப் பேச்சாளர்கள் சில வேளைகளில் இந்த அறைக்கு வருகிறார்கள். தங்களுக்குள் உரையாடவோ அல்லது தலைவர் பான்னேயைச் சந்திக்கவோ அவர்கள் இங்கு வருகிறார்கள். தலைவர் பான்னேயின் தனி அலுவலகம் இங்கேதான் ஒரு மூலையில் அமைந்துள்ளது. மடிப்புக் கதவுகள் கொண்ட இந்த அறை பொதுமக்கள் நெருங்காதபடி எப்பொழுதும் காவல் புரியப்பட்டு வருகிறது. பொதுமக்கள் வழக்கமாக நிற்கும் இடத்திலிருந்து உள்ளே எட்டிப்பார்க்க இயலாது. பிரதிநிதிகள் மட்டுமே இந்தப் புனிதமான இடத்தினுள் நுழைவதற்கு உரிமை உடையவர்கள் ! என்றாலும் சில சமயங்களில் அங்குள்ள மதிப்புக்குரிய விருந்தினரை நெருங்கி அவர்களுடன் சிறிது நேரம் உரையாடவும் முடியும். கொலம்பஸ் கூடத்தில் உள்ள மேடையை விட இந்த இடத்தில் அவர்களுடன் நெருங்கிப் பழக முடிகிறது.

இந்த முன் அறையில், அனைவரின் கவனத்தையும் வெகுவாகக் கவர்கின்றவர் அந்தணத் துறவியாகிய சுவாமி விவேகானந்தர் ஆவார். அவர் கட்டான உடலமைப்புக் கொண்டவர். பாங்கான அங்க அமைப்புகளுடனும் வெண்ணிறப் பற்களுடனும் காணப்படும் அவர் முகத்தை முழுவதும் சவரம் செய்திருக்கிறார். ஒழுங்காக அமைந்துள்ள அவரது உதடுகள் அவர் உரையாடும்போது விரிந்து கருணை நிறைந்த புன்னகை ஒன்றை வெளிப்படுத்துகின்றன.

கம்பீரமான அவருடைய தலையை எலுமிச்ச நிறம் அல்லது சிவப்பு நிறத் தலைப்பாகை அலங்கரிக்கிறது. அவர் அணிந்துள்ள நீண்ட அங்கி இடையில் கட்டப்பட்டு முழந்தாள்களுக்குக் கீழேயும் தொங்குகிறது. அது பிரகாசமான ஆரஞ்சு அல்லது காவி நிறத்தில் இருக்கிறது. அவர் அருமையாக ஆங்கிலம் பேசுகிறார். கேட்கப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையான அக்கறையுடன் அவர் விடையளித்தார்.

# சிறுவர்களின் எலும்புகளை பலவீனமாக்கும் கணினி



தற்காலத்திய சிறுவர்கள் வெளியிடத்தில் ஓடி, ஆடி விளையாடுவதைவிட கணினியின் முன் நேரத்தை செல விடுவதே அதிகமாக உள்ளது.

அவ்வாறு உட்கார்ந்த நிலையில் அதிக நேரத்தைச் செலவிடும் சிறுவர்களின் எலும்புகள் பலவீனமாகக் கூடும் என்றும் இது பிற்காலத்தில் ஆஸ்டியோபொராசிஸ் மற்றும் எலும்புமுறிவு போன்றவற்றை அதிகரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

தங்களுடைய டீன் ஏஜ் பருவத்தில் உட்கார்ந்தே பணியாற்றும் பையன்களுக்கு எலும்புத் தாது அடர்த்தி குறைபாடு ஏற்படும் என்று நோர்வே ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

ஒருவருக்கு பிறந்ததிலிருந்து வளர்ச்சி காணும் எலும்புகள் டீன் ஏஜ் பருவத்தின் இறுதியில் உச்சகட்ட வளர்ச்சியைப் பெறுகின்றன. ஆனால், இந்த எலும்புத் தாது அடர்த்தி குறைபாடானது எலும்புகளின் அதிகபட்ச வலிமை மற்றும் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி விடும் என்று அவர் எச்சரிக்கின்றார்.

அதேபோல் ஒருவரது உடல் எடையும் இத்தகைய குறைபாடுகளால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக டிரோம்சோவில் உள்ள நோர்வே ஆர்க்டிக் பல்கலைக்கழகத்தின் ஆன்னி விந்தர் கூறினார்.

15-18 வயதுக்குட்பட்ட 463 பெண்கள் மற்றும் 484 ஆண்களிடம் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் கணினித்திரை முன் செலவிடும் நேரமும், எலும்புத் தாது அடர்த்தியும் வயதின் அனுசரிப்பு, பாலியல் முதிர்ச்சி, பிஎம்ஐ, ஓய்வுநேரம், உடல் செயற்பாடு, புகை, மது, மீன் எண்ணெய் மற்றும் காபனேட் பானம் நுகர்வு போன்ற பல தொடர்புகளுடன் ஆராயப்பட்டது. இதில் பெண்களைவிட ஆண்களே அதிக நேரம் கணினி முன் செலவிடுகின்றனர் என்றும் இதனால் அவர்களின் உடல் எடையும் அதிகரிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச ஆஸ்டியோ பொராசிஸ் அமைப்பின் கணக்கீட்டின்படி 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் சராசரியாக ஐந்தில் ஒருவர் இந்தக் குறைபாட்டினாலேயே எலும்புமுறிவுக்கு ஆளாகின்றார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | | | | | 5 | | 9 |
| | | | 4 | | 3 | | 1 | 8 |
| | | | | | | | 3 | 2 |
| 9 | 3 | | | 2 | 5 | | | |
| 7 | | 8 | 3 | | 4 | 9 | | 1 |
| | | | 7 | 9 | | | 5 | 4 |
| 3 | 6 | | | | | | | |
| 2 | 4 | | 9 | | 6 | | | |
| 5 | | 1 | | | | | 9 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 1 | 7 | 4 | 6 | 5 | 2 | 3 |
| 3 | 6 | 7 | 9 | 2 | 5 | 1 | 8 | 4 |
| 4 | 2 | 5 | 3 | 1 | 8 | 6 | 7 | 9 |
| 2 | 5 | 6 | 8 | 7 | 4 | 9 | 3 | 1 |
| 8 | 3 | 9 | 2 | 6 | 1 | 4 | 5 | 7 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 9 | 8 | 6 | 2 |
| 6 | 4 | 2 | 1 | 5 | 7 | 3 | 9 | 8 |
| 1 | 9 | 3 | 6 | 8 | 2 | 7 | 4 | 5 |
| 5 | 7 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 |

# பெண்கள்
## எதிர்நோக்கும் பிரச்சினைகள்





உடல் ரீதியாக ஏற்படுத்தப்படும் தாக்கங்களால் உடலில் வடுக்கள் ஏற்படுவதுடன் மாறுதல்களும் ஏற்படுகின்றன. உளவியல் தாக்கம் என்று கூறும்போது பெண்களை அவமரியாதை செய்தல், அவதூறாகப் பேசி அவர்களின் உணர்வுகளைப் பாதிப்படையச் செய்தல் என்பன அடங்குகின்றன. பெண்கள் மீதான வன்முறைகளை ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கட்டவிழ்த்து விடுகின்றனர். மேலும் கல்வி, திறமை, அனுபவம் என்பன பால் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் பெண்கள் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படுகின்றனர்

● சோபனா

எமது சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் கருவில் தொடங்கி கல்லறை வரை தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

பால்நிலைச் சமத்துவம் இல்லாததால் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அவர்கள் சமூக, பொருளாதார, கலாசார அரசியல் ரீதியாகவும் ஒதுக்கப்படுகின்றனர்.

அத்துடன் அவர்கள் வன்முறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். வறுமை மற்றும் சமூக பண்பாட்டுக் காரணிகளாலும் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பெருந்தோட்டப் பகுதியில் அதிகளவான பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. இந்த வன்முறைகள் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இடம்பெற்று வருகின்றன.

உடல் ரீதியாக ஏற்படுத்தப்படும் தாக்கங்களால் உடலில் வடுக்கள் ஏற்படுவதுடன் மாறுதல்களும் ஏற்படுகின்றன. உளவியல் தாக்கம் என்று கூறும்போது பெண்களை அவமரியாதை செய்தல், அவதூறாகப் பேசி அவர்களின் உணர்வுகளைப் பாதிப்படையச் செய்தல் என்பன அடங்குகின்றன. பெண்கள் மீதான வன்முறைகளை ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

மேலும் கல்வி, திறமை, அனுபவம் என்பன பால் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் பெண்கள் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் வேலை வாய்ப்புக்களிலும் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலைகளைத் தாண்டி முன்னுக்கு வருவதில் பெண்கள் அதிக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் அலுவலகங்களில் பெண்களால் ஆற்றப்படும் பணிகளில் குறை காணப்படுவதுடன் சில இடங்களில் ஊதியமும் குறைவாகவே வழங்கப்படுகின்றது. இவை யாவும் பெண்களை மனதளவில் மிகவும் பாதித்து வருகின்றன.

மேலும் இத்தகைய சிக்கல்களைத் தாண்டிப் பெண்கள் முன்னுக்கு வருவதென்பது மிகவும் கடினமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால்தான் பெண்கள் இன்றுவரை பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அந்தப் பெண்கள் சார்ந்த முழுக் குடும்பத்தையும் பாதித்துவிடக் கூடியன. இதனால் குடும்ப முன்னேற்றமும் தடைப்படுகின்றன.

இன்றைய நிலையில் உலகின் பல்வேறு நாடுகளிலும் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாகி வருகின்றனர். 1992 ஆம் ஆண்டு இணைந்திருந்த யூகோஸ்லாவியாவில் 12 ஆயிரம் பேர் வன்முறைகளுக்கு ஆளாகியதாகத் தகவல்கள் தெரிவித்தன.

பப்புவா நியூகினியில் அதிகளவில் கிராமப்புறப் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். கனடாவில் நான்குக்கு ஒன்று என்ற வீதத்தில் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். தாய்லாந்தில் இருந்து பெருமளவு பெண்கள் விபச்சாரத்துக்கெனக் கடத்திச் செல்லப்படுகின்றனர். ஆபிரிக்க நாடுகளில் சடங்குகள் என்ற போர்வையில் பெண்களின் பிறப்புறுப்புகள் சிதைக்கப்படுகின்றன. இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை காரணமாக மரணங்களும், பெண் சிசுக் கொலைகளும் அதிகளவில் காணப்படுகின்றன. கென்யாவில் சுமார் 42 வீதமான பெண்கள் கணவனின் அடி உதைகளை வாங்க நேரிடுகின்றது. இலங்கையிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

ஆகவே உலகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏதோ ஒரு ரூபத்தில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

அடித்தல், பிடித்துத் தள்ளுதல், இழுத்தல், முடியை இழுத்தல் ஆகியவற்றை நாம் பெண்களுக்கு எதிரான வன்முறையாகவே காண்கின்றோம். மற்றும் மது அருந்த வைத்தல், போதைப் பொருளைப் பாவிக்கத் தூண்டுதல் ஆகியவற்றையும் வன்முறையாகவே கருத முடியும்.

ஆகவே பெண்கள் மீதான வன்முறை என்பது தொடர் கதையாகவே நீண்டு கொண்டு செல்கின்றது. இதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகள் பெரியளவில் பயனைத் தந்ததாக இதுவரை தெரியவில்லை என்பதுதான் பரிதாபத்துக்குரியது.

# உலகப் பார்வைக்கு வைத்திடுங்கள்!

"பணத்தைத் தண்ணீரில் போடாதீர்!
பரப்புரை ஒன்றினில் அறிவுரையாம்
பணத்தைத் தண்ணீரில் போடாட்டில்
பாவியர் எங்களுக்குக் கண்ணீரோ?
இணக்கம் ஒன்றதும் எட்டாமல்
இலங்கையில் சிறுபான்மை இனத்தாரின்
பிணக்குக் காரணமாகத் தெருத் தெருவா
பிணக்குவி யல்களும் தோன்றலாகும்!


படகுதனில் ஆஸ்திரேலிய நாட்டுக்கு
பயணிக்கும் தமிழினப்பி ரயாணிகள்;
இடம் பெயர் புராணத்தைச் சுட்டித்தான்
இடை நடுவு பிடித்தவர் போதனைகள்!
சுடச் சுட வானொலி விளம்பரமாய்
சொல்கிறார் நிமிடத்துக்கு நிமிடமாக!
சடப்பொருளாகவும் மதிப்பாரோ
சட்டத்துக் கடிமையாய் கூண்டிடுவர்!

ஆண்பிள்ளை மூவரைப் பறிகொடுத்து
ஆடி விட்ட குடும்பமொன் றின்நிலையை
கூண்டோடு உலகுக்கே தெரிவிக்கும்
குரூரமாம் ஆட்சியைக் கண்டீரோ?
சாணேற முளஞ்சறுக் கும்வாழ்வில்
சாற்றலென் நீதியதும் இலங்கையில்?
தாண்டிக் கடலன்னை தயவில்போக
தானும்விடாக் கண்டதின்கொடுமைகேள்!

ஆஸ்திரேலி மண்ணதும் உடந்தையா?
அகதியாய்ச் செல்கின்ற ஏதிலிகளைக்
கவுட்டிடை கொணர்ந்து சிறைவைக்க?
கடவுச்சீட் டென்றேதும் இல்லாமலே
ஆஸ்திரேலி என்றில்லை உலகப் பந்தில்
அடிமிட்ட மண்ணுக்கும் சென்றுவாழ;
பவுத்திரம் பார்ப்பதும் எங்களுக்கு
பாத்தியதை இல்லையோ சொல்லுங்கள்!

ஜெனிவாவில் முள்ளிவாய்க் காலின்வதம்
ஜெயமதை இலங்கைக்கு தந்தவிதம்?
தனியாக ஆராயப்பட இருக்கின்ற
தருணத்தும் கிளிநொச்சித் தருமபுரம்;
தனில்வாழ் தாயையும், மகளையும்
தண்டிக்க ஓராயிரம் பட்டாளமா?
மனித இனம் தலை குனிய வைக்குமிம்
மமதையை என்சொல்ல முடியுமாமோ?

"பயங்கர வாதத்தைத் தோற்கடித்தோம்"!
பறை சாற்று மஹிந்தவின் சிந்தனையில்
பயங்கரமா விளைந்துள அவ்வாதம்;
பானையில் இருப்பதே ஏப்பை வரும்!
தயங்காமல் ஜெனிவாவில் முடிவெடுப்பீர்;
தமிழினத்தைத் தனியாக வாழவைக்க!
இயந்திர மனிதனவன் இரும்பேதான்
இருக்காது இதயமெனும் என்றொன்றே!
ஒருவனைப் பிடிப்பதற்கா ஆர்ப்பாட்டம்?



ஒண்ணாது ஆண்டைந்தில் மற்றுமோர்
திருவிளையா ட்டிற்கீடு செய்வதற்கும்!
திக்கெங்கும் வாழ்வதும் மனிதகுலமா?
கருணையுள மிருப்போர் இவ்வுலகே
கிடையாதா தட்டித்தான் கேட்பதற்கும்?
திரும்பத்தி ரும்பத்தாக் குண்டாலோ
தேறுதற்கும் முடியாதே சிந்தியுங்கள்
ஒளித்தும் விட்டதாகக் கூறிக்கொள்ளும்

ஒன்றையே கையெடுத்து உலாவுகிறான்!
அழிப்பதுதா னவன்கனவு சித்தமெலாம்
அகந்தையை அழிப்பதற்கு கையாளல்
பழிக்குப்பழி என்றில்லை! ஓரினத்தின்
படைப்புரி மையதைக் காத்தலெனும்;
ஒளியதை ஜெனிவாவில் எடுத்துள்ள
உலகத்துப் பார்வையில் வைத்திடுங்கள்!

**நவாலியூர்க் கவிராயர்.**

## வருடாந்த பொதுக் கூட்டம்

தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வட மாகாணக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒன்றுகூடல் நிகழ்வும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளன.

'இக்ராட்' (ICTAD) அமைப்பில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர் களும் தொழில்நுட்பப் பிரிவினருக் குமான இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிப ரும், சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் பாடசாலைப் பகுதி மேலதிக பணிப்பாளரும் கலந்து கொண்டு சிறப்பிப்பர். (ஞ)

◆◆◆

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரி சங்கத்தின் 23 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேலும் கௌரவ விருந்தினராக கவிஞர் வ.சின்னப்பாவும் கலந்து கொள்வர் என்று சங்கச் செயலாளர் மருத்துவர் இ.கந்தையா அறிவித்துள்ளார். (வ-9)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சைக்கிள் தரிப்பிடம்

அளவெட்டி, ஏப். 7

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையம் 2 ஆம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக வைத்திய சாலை முன்பகுதியில் இதுவரை காலமும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இயங்கியதால் நோயாளர், பொதுமக்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட சிரமம் நீங்கியுள்ளது.

புதிய இடத்துக்கு பாதுகாப்பு நிலையம் மாற்றப்பட்டு விட்டதால் வைத்தியசாலை முன்புறம் நெருக்கடியின்றிக் காணப்படுகிறது. (ஒ-36)



யாழ். இராணுவப் படைப் பிரிவும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து கடந்த சனிக்கிழமை நடத்திய தமிழ், சிங்கள புத்தாண்டு விழாப் போட்டிகளில் பெண்களுக்கான சைக்கிளோட்ட வீராங்கனைகள் முடிவிடமான துரையப்பா விளையாட்டு அரங்குப் பகுதியை நோக்கி வருகின்றனர். (ஒ-135)


## இறை இரக்க இயேசுவுக்கு நன்றி



மகா தயை நிறைந்த இறைவா! இரக்கத்தின் தந்தையே! ஆறுதலின் தேவனே! உம்மில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டோர் மீது இரக்கம் கொண்டீரே! உமது அளவற்ற இரக்கத்தைக் குறித்து எங்கள் பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இத்துன்ப உலகில் எமக்கு நேரிடும் சோதனைகளிலும் உமக்குப் பிரமாணிக்கமாக இருக்க உமது இரக்கத்தின் அருட் கொடைகளை எம் மீது நிறைவாகப் பொழிந்தருளும்.

'ஆமென்'

இயேசுவின் துன்பகரமான பாடுகளைப் பார்த்து எங்கள் மீதும் முழு உலகின் மீதும் இரக்கமாயிரும்.

இறை இரக்க ஆண்டவரின் வல்லமைமிக்க அருள் வளங்களினால் எனது குடும்பம் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

**ஓர் அடியான்**
[பாஷையூர்]

(46594)(7.6.3)

## பிரத்தியேக வகுப்பு

யாழ்.நகரில் பிரபல பாடசாலை ஒன்றில் கல்விகற்பிக்கும் ஆசிரியரால் (BSc (Sp) in Food Science & Technology from SUSL) பின்வரும் பாடங்கள் பிரத்தியேகமாக தனியாகவோ Or குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

A/L: Chemistry, Biology, Biosystem Technology, Science for Technology
10 or O/L: Science, Maths (46476) (12.3.6)

**Contact : 077 228 1413**

## கோப்பாயில் வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதிக்கும், மானிப்பாய் வீதிக்கும் அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 072 095 1390 (46593) (7.6.3)

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வசிக்கும் வயோதிபத் தம்பதியினரைத் தங்கியிருந்து பராமரிப்பதற்கு நன்னடத்தையுள்ள பணிப் பெண் தேவை. தொடர்பு: (16595) (12.3.6)

**077 038 7742/077 419 1036**

Northern Central Hospitals

## VACANCIES

Vacancies are available for the following posts to be filled immediately.

1. Personal Secretary ,with good knowledge of English and Stenography
2. Pharmacist possessing SLMC registration
3. Billing Clerk, preferably with Science background
4. Receptionists, preferably with good knowledge of English
5. Qualified, experienced nurses

Eligible candidates are requested to hand over/ send their applications accompanied by:

a) biodata giving names two non-related referees
b) Photo copies of educational certificates, NIC, Birth Certificate, Letter from Grama Niladari , passport size photograph and a letter from last employer.

Applications should reach the undersigned on or before **16th April 2014:**

**Director, Human Resources**
Northern Central Hospitals ( Pvt ) Ltd
342, Palaly Road, Jaffna

(அ/13424)(7.6.3)

## இந்திய மென்பொருள் வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட

K7™ TOTAL SECURITY VERSION FREE

**வைரஸ் காட்**
இப்பொழுது **இலங்கையிலும் முன்னணியில்**




20 வருடங்களுக்கு மேலாக வைரஸ் தடுப்பு மென்பொருள் துறையின் முன்னோடிகளாக விளங்கும் அனைத்து K7 வைரஸ் தடுப்பு தயாரிப்புகளும் உங்கள் **கணினி** அமைப்புகளுக்கு அதிகபட்ச உயர்சக்தி மிகுந்த இணையத்தள பாதுகாப்பை அளிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் K7 தயாரிப்பொன்றை வாங்கும் போது, உங்கள் **கணினியை** அச்சுறுத்தக்கூடிய எந்தவொரு ஆபத்தையும் எதிர்கொள்ளக்கூடிய அதிநவீன, அறிவார்ந்த ஆயுதம் ஒன்றை பெற்றுள்ளீர்கள் என உறுதியாய் நம்ப முடியும்.



(சி.13425)

Enquiry T.P.: 021 222 1121

Dealer in North

NALIN Information Technologies (Pvt) Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

## கலைஞர்கள் விவரம் திரட்டும் பணி

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பிறந்த, வாழ்ந்த கலைஞர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளது. அதனால் கலைஞர்கள் தங்களின் விவரங்களை உடனடியாக வழங்கி உதவுமாறு வலி.கிழக்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடவுள்ள கலைஞர் விவரத் திரட்டில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பிறந்த, வாழ்ந்த மற்றும் புலம் பெயர்ந்த, மறைந்த கலைஞர்களின் விவரங்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

கலைஞர் விவரத் திரட்டில் இணைத்துக் கொள்வதற்கு கலைஞர்களின் பாஸ்போட் அளவிலான புகைப்படத்துடன் கலைஞர்களின் கலைப் பணிகள், ஆக்கங்கள், அவரது விருதுகள், பட்டங்கள், கலைப்படைப்புக்கள்தொடர்பானவிவரங்களை உடனடியாக வலி. கிழக்கு பிரதேச செயலக கலாசார அலுவலரிடம் சேர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

# புதிய தூதர்களை நியமிக்கத் தீர்மானம்

கொழும்பு.ஏப்.7

வெளிநாடுகள் சிலவற்றுக்கான இலங்கையின் புதிய தூதர்களை நியமிப்பது தொடர்பாக, உயர்பதவிகளுக்கான இலங்கை நாடாளுமன்றத்தின் குழு இந்தமாதம் பரிசீலனை மேற்கொள்ளவுள்ளது. இந்தியாவுக்கான புதிய தூதராக சுதர்சன்செனிவிரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

மூத்த இராஜதந்திரிகளான பிரசாத் காரியவசம் அமெரிக்காவுக்கும், கருணாதிலக அமுனுகம ஜேர்மனிக்கும், சரத் கோன்கடே தென்னாபிரிக்காவுக்கும், சுதர்சன் செனிவிரத்ன இந்தியாவுக்குமான தூதர்களாக முன்மொழியப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் நியமிக்கப்பட்ட இந்தியத் தூதராக உள்ள பிரசாத் காரியவசம் தமது பணிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார்.

பல்வேறு நாடுகளில் இராஜதந்திரியாகப் பணியாற்றிய அவரை அமெரிக்காவுக்கான புதிய தூதராக நியமிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

ஜேர்மனியில் உள்ள இலங்கை தூதர் சரத் கோன்கடேயின் பணிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதம் நிறைவடையவுள்ளது. அவரைத் தென்னாபிரிக்காவுக்கான தூதராக நியமிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தியாவுக்கான தூதராக நியமிக்கப்படவுள்ள சுதர்சன் செனிவிரத்ன, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறை பேராசிரியராகப் பணியாற்றி வரும் ஒரு கல்வியாளர் ஆவார். அவர் முன்னர் தூதராகப் பணியாற்றியவரல்லர். ஆனால், இலங்கை மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஊழல்கள் புரிந்து வெற்றிபெற்றோர் உறுப்பினர் பதவி பறிபோகும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு. ஏப்.7

அண்மையில் நடந்து முடிந்த மேற்கு மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் போது தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் ஊழல் புரிந்து வெற்றி பெற்றார்கள் என்பது தெரியப்படுமானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை தேர்தல்கள் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இது பற்றி தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவிக்கையில்;

"நாங்கள் இன்னமும் விருப்பு வாக்குகளை எண்ணிக் கொண்டிருக்கின்றோம். இது முடிவுற்றதும் எமக்குக் கிடைத்துள்ள தேர்தல் ஒழுங்கீனங்கள் குறித்த 800 முறைப்பாடுகளையும் நீதிமன்றங்களுக்கும்பொலிஸாருக்கும் உரிய நடவடிக்கைகளுக்காகக் கையளித்து விடுவோம்" -என்றார்.

திணைக்களத்துக்கு 800 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதை உறுதி செய்த துணை ஆணையாளர் எம்.எம். மொகம்மது. இவைகளில் லஞ்சம் வாங்கியது. அரச சொத்துகள் பயன்படுத்தப்பட்டது. தேர்தல் பிரசார காலம் முடிவுற்றதன் பின்னரும் பிரசார கட்அவுட்கள் காட்சிக்கு வைத்தது போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுகள் அடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் பாரதூர தன்மையைப் பொறுத்தும் அவை நிரூபிக்கப்படுவதையொட்டியும் தெரிவானவர்கள் பதவிகளை இழக்கும் நிலை ஏற்படலாம் என்று அவர் மேலும் கூறினார். (ப)

## எஞ்சக் கதங்கள் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### போதை காட்டும் பாதை

இந்தியன் சுவாமிப் பட்டுக்கள் கசங்காமல் இருப்பதற்காக அவற்றின் மடிப்புக்களுக்கு இடையே பழைய பத்திரிகைத் துண்டுகளை வைத்திருப்பார்கள். அப்படி வந்த பட்டுத் துண்டொன்றில் தமிழக மார்க்கட் நிலவரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

தங்கம், வெள்ளி, மளிகைப் பொருள்கள், எண்ணெய், காய்கறிகள் எனப் பல்வேறு ரகங்களைக் கொண்ட 13 வகையான பொருள், பண்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இதில் அரிசி மட்டும் 16 ரகங்களில் இருந்தது. உலகிலே மிக மலிவு விலையில் பொருள்கள் இந்தியாவில் தானே என் ற எண்ணத்துக்கு " உலகிலே மிக மலிவு விலையில் கஞ்சா கிடைக்கும் எட்டு நாடுகளில் இந்தியா முதலிடத்தில்" என நிறுவனம் ஒன்றின் ஆய்வு தெரிவிப்பதாக கடந்தவாரம் இங்கு வெளியான செய்தி மண்ணள்ளிப் போட்டது.

கஞ்சா மற்றும் ஹெரோயின் வர்த்தகம் எமது நாடு முழுவதையும் சிறைச்சாலைகள் உட்பட சுதந்திர வர்த்தக வலயமாகக் கொண்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளே போதைவஸ்துக்களை அங்கு கொண்டு செல்கிறார்கள் எனும் தகவல்கள், "சிறைச்சாலைகள் என்பவை சீர்திருத்தப் பள்ளிகளாகும்" என்பதை மறுதலிப்பதாகவே உள்ளது. போதைவஸ்து வர்த்தகர் ஒருவரது வங்கிக் கணக்கில் மூன்று கோடி ரூபாவாம் எனும் செய்தியைப் பார்த்து ஏக்கப் பெரு மூச்சு விடுபவர்களுக்கு வீட்டுக் கோடியையும், புதிதாக உடுக்கும் கோடியையும் தவிர வேறு கோடியே தெரிந்திருக்காது.

பிரசவ வேதனை, கடும் காயங்களால் வேதனைப்படுவோருக்கு வலி தெரியாதிருக்க ஒரு வகைப் போதையிலாழ்த்தும் பெதடின் போன்ற மருந்துகளும்; சுதேச மருத்துவ தேவைகளுக்கு உரியவர்களின் அங்கீகாரத்துடன் கஞ்சா, அபின் ஆகியனவும் பயன்படுத்தப்படுகின்றன.

சட்டவிரோத மான, சமூக விரோதமான போதை வஸ்துகளின் போதைக்கு மீளா அடிமையாவோர், பல்வேறு உடல், உள பாதிப்புகளால் நாளும் செத்துச் செத்து வாழ்ந்து செத்தல்களாகச் சாகும் பாதைக்கே போதை வஸ்துகள் கொண்டு செல்லும். எது எப்படியாயினும் எங்கள் இளசுகளையும் மாணவ சமூகத்தையும் போதை வஸ்துக்களின் பக்கலில் அண்ட விடாமல் கண்காணிக்கும் பொறுப்பு சமூகப் பங்காளிகளான எம் அனைவரதுமே.

# சீரடி சாயி நாதருக்கு இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஏப்.7

நாளைய தினம் 08 ஆம் திகதி நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திரில் ஸ்ரீ சீரடி சாயி நாதருக்கு ஏகதின இலட்சார்ச்சனையும், அதனைத் தொடர்ந்து சாவடி ஊர்வலமும் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் சாவடி ஊர்வலம் நாவலர் வீதி, மருதடி வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதியூடாகச் சென்று ஆலயத்தை வந்தடையும். (க)

## மரண அறிவித்தல்

### கந்தையா சபாரட்ணம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும், மாகியம்பதியினை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சபாரட்ணம் 06.04.2014 கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தாமு சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலகுணநாயகியின் அன்புக் கணவரும், சுபாஜினி, சுதர்சினி, சயந்தன், நிஷாந்தன், சுகன்யா, அனிற்ரா, கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜய், தமிழ்வாணன், சாருமதி ஆகியோரின் அன்பு மாமனும், மது, றஸ்மி, டிவைன்சன், அக்சயன், மினேவா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.04.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அமெரிக்கன் சிலோன் மிசன் சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(46606) (7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27 . 05 . 1973

மறைவு
11 . 04 . 2011

### திருமதி சுமனேஸ்வரி கிருபானந்தன்

திதி: அட்டமி

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சிவன்கோயிலடி,
சுன்னாகம்.


(46603)(12.6)

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

# மண்முனைத்துறை பாலம் 19 இல் திறப்பு

மட்டக்களப்பு.ஏப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் மண்முனைத்துறை



*புனரமைக்கப்பட்ட மண்முனைத்துறைப்பாலம்*

பாலம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஜப்பான் அரசிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படை யில் மண்முனைத் துறைப் பாலத்துக்கான நிதியை ஜப்பான் அரசு வழங்கியிருந்தது.

இந்தப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு ஜப்பான் அரசு 1736 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இதேவேளை இந்தப் பாலம் திறக்கப்பட்டதன் பின்னர் இரு பகுதிகளிலும் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படவேண்டும் என்று படுவான்கரைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரு கரைகளுக்கு இடையிலான போக்குவரத்து இலகுபடுத்தப்படும்போது படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள படகுகள் சுரண்டிச் செல்லப்படக் கூடிய ஆபத்துகள் இருப்பதால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா குமாரசாமி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக் கட்டுவன் வடக்கு குரக்கன் புலத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா குமாரசாமி 04.04.2014 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை குமாரசாமியின் அன்பு மனைவியும், உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான செல்லப்பா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், எஸ்.கே. சண்முகநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்), செல்வரத்தினம் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தாயும், சாந்தபவானி, ஜெயக்குமாரி ஆகியோரின் மாமியும், துஷ்யந்தி (யாழ். போதனா வைத்தியசாலை), பரந்தாமன் (ஆசிரியர்), மயூரதன் (வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு), யதர்ஷினி, இளங்கோதை-பிரதாபன் (கனடா), மாதுலன், நிவேதிதன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், நிருத்தன், சரண்யன், பவித்திரன், அஜானன், அஜெய்னன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது புன்னாலைக் கட்டுவன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிள்ளையான்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரக்கன்புலம் வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(46590) (7.6.3)

தகவல்:
எஸ்.கே.சண்முகநாதன்
(மகன்)

# ஒட்டோவை மோதி தள்ளியது ஹைஏஸ் மூவர் படுகாயம்

வலி. வடக்கு, ஏப். 7

ஹைஏஸ் வான் மோதித் தள்ளியதில் ஓட்டோ தடம் புரண்டு சாரதி உட்பட மூவர் படுகாயமுற்ற போதிலும் ஓட்டோவில் இருந்த ஏழு மாத கைக் குழந்தை தெய்வாதீனமாக எந்தக் காயங்களும் இன்றித் தப்பியுள்ளது.

சனிக்கிழமை மதியம் பூநாறி மரத்தடியில் இந்த விபத்து இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் நோக்கி காங்கேசன்துறை வீதி வழியாக வந்து கொண்டு இருந்த ஓட்டோவின்மீது பூநாறி மரத்தடி ஒழுங்கையால் பிரதான வீதிக்கு ஏற முற்பட்ட ஹைஏஸ் வான் மோதியுள்ளது.

இதனால் ஓட்டோவில் வந்த மல்லாகத்தைச் சேர்ந்த தாயும் மகளும் மற்றும் சாரதியும் படு காய முற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சுமார் 55 வயது மதிக்கத் தக்க பெண்ணுக்கு இரண்டு கைகளும் முறிந்துள்ளதுடன் மகளுக்கு காலில் காயம் ஏற்பட்டதுடன் ஓட்டோ சாரதிக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

தாயின் மடியில் இருந்த ஏழு மாதக் கைக் குழந்தை தெய்வாதீனமாக காயங்கள் எதுவும் இன்றித் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த யாழ்ப் பாணம் பொலிஸார் ஓட்டோவையும் ஹைஏஸ் வாகனத்தையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளதுடன் விசாரணைகளையும் மேற் கொண்டுள்ளனர். (வ-86)

# உலக நீர்தினம்

வலி.மேற்குப் பிரதேச சபையால் உலக தரிசனம் நிறுவனத்தின் உதவியுடன் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நாளைய தினம் 8 ஆம் திகதி சர்வதேச நீர் தினம் அனுஷ் டிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் தரிசனம் நிறுவனத்தின் பணிப்பாளர் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வார். வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமார் (தலைவர் சமுதாய மருத் துவத் துறை யாழ்.பல்கலைக்கழகம்), பேராசி ரியர் கலாநிதி இ.இராஜேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரதீபா விபுலன், சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜ், பொது சுகாதாரப் பரிசோதகர் ப.சோழன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கவுள்ளனர். (க)

# புதுவருடத்துக்கு முதல் ஞாயிற்றுக்கிழமை சிகை அலங்கரிப்பு நிலையம் திறக்கப்படும்

புதுவருட தினத்துக்கு முதல்நாள் ஞாயிற்றுக் கிழமை என்பதால் பலரின் நன்மை கருதி எதிர் வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறந்திருக்க அனு மதிக்கப்படும் என்று வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலா ளர் அன்ரன் இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் புதுவருடத்துக்கு முதல் மூன்று தினங்களுக்கு நிலையங்கள் பூட்டும் நேரம் தளர்த் தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (வ-421)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நடப்பு ஆண்டுக்கான நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

வலிகாமம் தெற்கு, வடமராட்சி தெற்கு-மேற்கு, வலிகாமம் தெற்கு- மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நடப்பு ஆண் டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

**வலிகாமம் தெற்கு**

தலைவர்- சே.இராசவல்லவன், உபதலைவர்- ந.சண்முகவேல், செயலாளர்-ப.மகேந்திர தாசன்,உப செயலாளர்-சீ.நடேசு, பொருளா ளர்-பொ.கமலநாதன், நிர்வாக சபை உறுப் பினர்கள்- சி.ஜெயராஜா, ச.தில்லைநாதன், கணக்காய்வாளர்-செ.ஆனந்தகுமாரதாஸ்.

**வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு**

தலைவர்-வீ.எஸ்.வீரசிங்கம்(ஓய்வு பெற்ற தபாலதிபர்), செயலாளர்-சி.க.லோகநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பொருளாளர்- க.தா.சிறீஸ்கந்தசிங்கம்(பட்டய அளவையாளர்), நிர்வாக சபை அங்கத்தவர்கள்- சிவசிதம்பரம், சிவப்பிரகாசம், செவந்திநாதர், உமாபதிகயிலாய நாதன் .

**வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்)**

தலைவர்-எம்.எக்ஸ்.சர்வானந்தன், உப தலை வர்-கந்தையா இராசதுரை, செயலாளர்-ஐ.மாா் கண்டன், உப செயலாளர்-கே.தேவராசா, பொருளாளர்- எஸ்.எஸ்.மன்மதராசா, கணக் காய்வாளர்-எஸ்.முத்துலிங்கம், நிர்வாக உறுப் பினர்- எம்.வின்சன் குணாளன்,செல்வி எஸ்.கமலராணி ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (க)

# சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.7

2013 டிசெம்பர் மாதம் நடை பெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை வெளியா கின.

இந்தப் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களின் பெயர் விவ ரம் வருமாறு:

**கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

கா.தனுஷா -9ஏ, கு.விதுஷா -8ஏபி, ந.யதாங்கி -8ஏபி, ஜெ.ஜனனி -8ஏசி , சி.ஜனார்த் தனா-7ஏபிசி, கே.சாருஜா -4ஏ3பி2சி, ச.தர்சிகா-3ஏ4பிசிஎஸ், நே.நர்மதா- 3ஏ4பிசிஎஸ், ர.விதுசன் -3ஏ2பிசி3எஸ்.

**வேலணை மத்திய கல்லூரி**

வடிவேல் வானவன் -8ஏசி, லக்ஷினி கஸ்மீர் -8ஏஎஸ், ஜெயசங்கர்நிதர்சன் -6ஏ2பி, சிவராஜதேவப்பிரியன்-5ஏ2பி2சி, க.நிதர்ஸா-3ஏபி4சி, ஜெகதீஸ் வரன் யுகந்தன் -3ஏ2பி2சிஎஸ், வி.டிசானா -3ஏபி2சி2எஸ், கு.மாருதி-3ஏபி2சி2எஸ், ரா.மயூரி -2ஏ2பி4சி, வி.விதுசா -2ஏபி4சிஎஸ், செ.சுகிர்தா -2ஏபி2சி3எஸ், ர.டிலக்ஷினி -2ஏபி2சி2எஸ்,

சி.சிவானுஜா -2ஏ4சி2எஸ் , இ.யஜிதா-2ஏ3சி2எஸ், முத்துலிங்கம் மகிந்தன் -ஏ4பி சிஎஸ், வ.கௌமிதா -ஏ3பி2சி 2எஸ், விஜயகாந்தன் சிந்து ஜன்-ஏ2பி5சி,க.தமிழினி -ஏ2பி2சி4எஸ், உ.சானுகா- ஏ2பிசி4எஸ், பாலசுப்பிரமணி யம் உஷாந்தன் -ஏபி5 சி2எஸ், கிருபானந் தன் அரிநிசாந் -ஏ2பி 3சி2எஸ்.

**யாழ்.சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்**

பி.நிரோசா -8ஏஎஸ், ஆர்டின் மைக்லின் -8ஏஎஸ்.

பாராட்டி வாழ்த்துகின்றேன்



கிளி/விவேகானந்த வித்தியாலயத்தின் வரலாற்றில் முதல் தடவையாக 2013 க.பொ.த(சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் 'A' தரச் சித்தியைப் பெற்று பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தந்த மாணவி

ஜெ.கீர்த்திகா (5A, 2B, C,S)

அவர்களை மனமுவந்து பாராட்டுவதுடன் ஏனைய பெறுபேறுகள் பெற்ற மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

வாழ்த்துபவர்:
சி.பாலச்சந்திரன்
2013 கணித பாட ஆசிரியர்.

கிளி/விவேகானந்த வித்தியாலயம், அம்பாள்குளம், கிளிநொச்சி.

(46603/7.6.)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

விஜயகுமார் உமாதேவி
தம்பதியரின்
ஏக புதல்வி
திஷாந்தினி



அவர்கள் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையில் 8A, B பெற்றுச் சித்தியடைந்தமையை அக மகிழ்ந்து அவரைப் பாராட்டி மேலும் பல சித்திகளைப் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

சி.தர்மலிங்கம்
குடும்பத்தினர்.
வேலணை - 05

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, மாமா, அத்தை, அம்மம்மாமார், அப்பப்பாமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(46596/2.6.)

லொறிகள் விற்பனைக்கு



நல்ல நிலையில், தற்போது பாவனையில் உள்ள அசோக் லேலண்ட் லொறிகள் இரண்டு விற்பனைக்கு உள்ளன.



(43237/6.3)

தொடர்பு : 077 772 2305

O/L , A/L இன் பின்னர்...




- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

15 YEARS
ISO 9001:2008 CERTIFIED

Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

Thanks St.Jude for Favour Granted V.K (46607)

தேவை

பல்பொருள் நிறுவனம் ஒன்றுக்கு கணக்கு உதவியாளர், காசாளர் தேவை.

தொடர்பு: 077 122 5425 (46604) (7.6.3)

தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எமது நிறு வனத்துக்கு விற்பனை பிரதிநிதி (ஆண்), பொதி செய்வதற்கான பெண்களும் தேவை.

வலிகாமம் பிரதேச சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு: 076 650 5048 (46602) (7.6.3)

உடனடி வேலைவாய்ப்பு

- விற்பனைத்துறையில் ஆர்வம், பேச்சாற்றல் உள்ள ஆண்கள், பெண்கள் தேவைப் படுகின்றனர்.
- Door to door புத்தக விற்பனைக்கு
- மாதாந்த வேதனம் - 52,500.00
- பெயர், விலாசம், அடையாளஅட்டை இலக்கம், தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் என்பவற்றை S.M.S செய்யவும்.

தொடர்பு: 076 699 4821

(46397) (12.3.6)

Beacon Study Centre Uduppiddy

புதிய பிரிவுகள் ஆரம்பம்
க.பொ.த உயர்தரம் - 2016
கலை/வர்த்தகப் பிரிவுகள்

| கலை 11.04.2014 வெள்ளி - 03.30 | வர்த்தகம் 09.04.2014 புதன் - 02.30 |
|---|---|
| தமிழ் க.நடராசா | கணக்கீடு ச.சரவணபவான் |
| இந்துநாகரிகம் ம.ஜோதீஸ்வரன் | வணிகக்கல்வி சி.சிவராசா |
| அளவையியல் ஆ.பிரபானந்தன் | |
| புவியியல் சு.கிருஸ்ணராசா | பொருளியல் வி.ஜெகதீசன் |
| நாடகமும் அரங்கியலும் க.கனகேஸ்வரன் | |

(33437)(12.3.6)

## ஓய்வூதியருக்கான கொடுப்பனவு செவ்வாயன்று

புதுவருடத்தை முன்னிட்டு அரச துறை ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுநாளை செவ்வாய்க்கிழமை வழங்கப்படும். இவர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஓய்வூதியர்களுக்கான விசேட இலகு கடன் திட்டம் சம்பந்தமான விளக்கப் பிரசுரமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ஓ-100)

**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 251-xxxx தொடர் இலக்க முடைய Full சீற், Full AC, GL டொல்பின் வாகனம் விற்பனைக்கு.

தொடர்பு :M.G.M. 777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 734 8883 (46607) (7.6.3)

**A/L CHEMISTRY**

வெளிவந்துவிட்டது 1999 - 2013 M.C.Q
விளக்க உரையுடன் கூடிய நூல் ஆசிரியர்
Mr. S.Sureshkumar Bsc (Hons)
பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் கிடைக்கின்றது. T.P : 077 5559028

**A/L CHEMISTRY**

2015 - பௌதீக இரசாயனம்
2016 - இரசாயனக் கணித்தல்கள்
ஆசிரியர் Mr. S.Sureshkumar Bsc (Hons)
Mon - Fri 6.30 pm - 7.30pm
THE SCIENCE CORNER JAFFNA

# சுயமாக சிந்தித்து முடிவெடுப்பதாலேயே மனிதன் தன்னை வளப்படுத்த முடியும்

### யாழ். அடைக்கல மாதா ஆலயத்தின் அருட்தந்தை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.7

மனிதன் சுயமாக சிந்தித்து முடிவெடுப்பதன் ஊடாகவே தனது திறன்களை விருத்தி செய்வதுடன் பூரணமான மனிதனாக மாற முடியும் என்று யாழ். அடைக்கல மாதா ஆலயத்தின் அருட்தந்தை ரெஜிராஜேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சியும் கலை நிகழ்வும் அண்மையில் யாழ். அடைக்கல மாதா தேவாலயத்தின் ஓ.எல்.ஆர். மண்டபத்தில் நடைபெற்றது.

> “ மனிதன் தன்னை முதிர்ச்சி உடைய மனிதனாக மாற்றுவதற்கு சுயமாக சிந்தித்துச் செயற்பட வேண்டும். தனக்குள் துணிவை வளர்த்து வாழ்க்கை யில் முன்னேற்றம் அடைய வேண்டும்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது.

"மனிதன் சுயமாக சிந்திக்க வேண்டும். துணிவுடன் செயற் பட வேண்டும். திடீரென வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியாது. படிப்படியாகவே உயர்வடைய முடியும். இதற்கான ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தம்மால் முடிந்த துறைகள் ஊடாக அந்த ஆளுமைகளை விருத்தி செய்ய வேண்டும். தனக்குள்ளே குறைபாடுகளை வளர்த்துக் கொள்வதாலே முதிர்ச்சி அடையாத மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மனிதன் தன்னை முதிர்ச்சி உடைய மனிதனாக மாற்றுவதற்கு சுயமாக சிந் தித்துச் செயற்பட வேண்டும். தனக்குள் துணிவை வளர்த்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும்.

அதற்கு இந்த சுய தொழில் முயற்சிகள் கைகொடுக்கும். இதனை சாதகமாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும்" என்றார். (வ-14)

# கல்விப் பணிப்பாளருக்கான ஆளுமை விருத்தி செயலரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.7

இலங்கை முழுவதும் உள்ள தெரிவு செய்யப்பட்ட 40 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான ஆளுமை விருத்திச் செயலரங்கு கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று சனிக்கிழமைவரை மூன்று தினங்களுக்கு மினிப்பேயில் அமைந்துள்ள ஆசிரியர் தலை மைப் பிரிவு மையத்தில் நடை பெற்றது.

இந்தச் செயலரங்கில் வட மாகாணத்தில் இருந்து தீவகம், வவுனியா வடக்கு , வடமராட்சி, தென்மராட்சி கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (வ-7)

தென்னிந்திய கலைஞர்களினாலும் பாராட்டப்பட்ட பிரபல இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் இசையமைப்பில் வடபுலத்தின் முன்னணி இசைக்குழுவான

**யாழ். ஸப்தஸ்வரம் இசைக்குழு**

- இனிய இசையமைப்பு
- முத்தான இளம்பாடகர்கள்

விழாக்களுக்கு அழைத்து மகிழுங்கள்
தொடர்பு : ஸ்ரீகுகன் (0776980573)
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

## மாணவருக்கு உதவி வழங்கும் புலம்பெயர் புங்குடுதீவு மக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.7

பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் புங்குடுதீவைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதில் வெளி நாடுகளில் வதியும் புங்குடுதீவைச் சேர்ந்த நல்லெண்ணம் கொண்டவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்று புங்குடுதீவு சர்வோதய அமைப்பின் நிர்வாக அதிகாரி செல்வி பொ.ஜமுனாதேவி கூறியுள்ளார்.

லண்டன் புங்குடுதீவு அன்னை பார்வதி அமைப்பகம் இரண்டு மாணவர்களுக்கும் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் ஆறு மாணவர்களுக் கும் சர்வோதய அமைப்பி னூடாக இந்த நிதியுதவிகளை வழங்கி வருகின்றன.

பிரதான வீதியோரங்களில் நிழல்தரு மரங்களை நடுவதற்கு கனடா புங்குடுதீவு நற்பணி மன்றம் முன்வந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)

**மரண அறிவித்தல்**

**திருமதி ஞானாம்பிகை சுந்தரலிங்கம்**



பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கருகம்பனை கிரீமலையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கோண்டாவில் மேற்கில் வசித்தவருமாகிய திருமதி ஞானாம்பிகை சுந்தரலிங்கம் கடந்த (04.04.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுந்தரலிங்கத்தின் அன்புமனைவியும் பன்னா லையை சேர்ந்த காலஞ் சென்றவர்களான சரவணை - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் கருகம்பனை கீரிமலையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - அப்புக்குட்டி தம்பதியரின் அனபுமருமகளும் பிரபாகரன் (டோகா), தயாபரன், அஜிந்தா (ஜேர்மனி) காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் நிஷாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் தயாழினி, இந்திரசாந்தி, சந்திரமோகன் (ஜேர்மனி), சிவசேந்தன் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் டிசாணன், டிசாணி, ஜஸ்விகா (கனடா), அகிஷ் (கனடா), கபிஷன், விதுஷாலினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சரஸ்வதி, சிவஞானம், கனகாம்பிகை, சந்திரசேகரம், இராதா, ஞானசேகரம், குணசேகரம், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. றோட் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

தகவல்:
குடும்பத்தினர்
077 6590978

**கடை இடமாற்றம்**

இல,74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த

**எஸ்.என்.கிருஷ்ணா ஜுவல்ஸ் அன் நகைத் தொழிலகம்**

இன்று (7/4/2014) திங்கட்கிழமை முதல் இல.118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கிருபா லேனர்ஸ் அருகில்) என்னும் விலாசத்தில் இயங்க வுள்ளது என்பதை அன்பர்கள் , வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

ச.நாககிருஷ்ணா (காலேப்)
உரிமையாளர்

## இரு வேளைகளிலும் இயங்கவுள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம்

கடந்த 75 வருடங்களாக தற்காலிக வைத்திய அதிகாரியுடன் காலையில் மட்டுமே இயங்கி வந்த புன்னாலைக்கட்டுவன் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு எதிர் வரும் 31 ஆம் திகதி தொடக்கம் இரு வேளைகளிலும் செயற்படவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளகப் பிரிவில் பயிற்சியை முடித்துக் கொண்ட வைத்தியக் கலாநிதி பா.தினகரன் இங்கு நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்.

இதுவரை தற்காலிக வைத்திய அதிகாரியுடன் காலை நேரத்தில் மட்டும் இயங்கி வந்த ஆரம்ப மருத்துவப் பிரிவு தற்போது வழங்கப்பட்டுள்ள நிரந்தர நியமனத்தை அடுத்து காலையிலும் பிற்பகலிலுமாக இரு நேரங்களில் மருத்துவ சேவை இடம் பெறவுள்ளது. (வ-7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

சதாசிவம் அமிர்தலிங்கம்
(பீடாதிபதி - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

அவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையும் எமது கற்கை நெறியின் இணைப்பாளராக நியமனம் பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
விரிவுரையாளர்கள்,
2ஆம் அணி ஆசிரிய மாணவர்கள்,
கல்வி முதுமாணிக் கற்கைநெறி,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி, பிராந்திய நிலையம்.

(46608)(2.6)

**hp பண்டிகைக்கால சலுகை விற்பனை**

இவ் விசேட சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

**Offer 1 - HP Pavilion 14**
Intel Core i5 4th Gen
2GB / 500 GB HDD
DVD-RW/14.0" LED
WiFi /Bluetooth
Card R /Webcam
1 Year Wty
Free HP Laptop Bag
Rs.68,000/= Only

Windows 8 Recommends

**Offer 2 - HP Pavilion 15**
Intel Core i3 3rd Gen
2GB / 500 GB HDD
DVD- RW/ 15.6" LED
WiFi /Bluetooth
Card R /Webcam
1 Year Wty
Free HP Laptop Bag.
Rs.61,500/= Only

**Offer 3**
1.Dongle 7.2
2.Cooler Pad
3.Pen drive 8GB
4.M/M Speaker
5. Laptop Cleaner Kit
6. Headphone with Mic
7. Mouse with Pad
8. Laptop 3 in 1 Stickers
5990/=

**SDS Computer Technologies**

#48 கல்லூரி வீதி,
( JHC மைதானத்திற்கு முன்பாக)
நீராவியடி, யாழ்ப்பாணம்.

Hotline : 077 7874707
Tel/Fax : 021 2224500

Sales, Repair, Networking, CCTV, Software Develop. and Etc..



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18 ஆவது பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா உட்பட பலர் மேடையில் காணப்படுகின்றனர். (ச-10)

## மின்னல் தாக்கி இருவர் சாவு

கொழும்பு.ஏப்.7

புத்தளம் கருவலகஸ்வெவ பகுதியில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதேவேளை, கதிர்காமத்தில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை மொறவக்கப் பகுதியை ஊடறுத்து வீசிய கடும் காற்றால் ஒருவர் காயமடைந்துள்ளார். (ச)

## கட்டுப் பணம் செலுத்துவதில் வருகிறது மாற்றங்கள்

### தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை

கொழும்பு.ஏப்.7

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தலின் போது கட்டுப் பணம் செலுத்தும் முறைமையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசியல் கட்சிகளும் கட்டுப் பணம் செலுத்தும் வகையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் செலுத்தும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு செயலகம் தீர்மானித்துள்ளது.

கட்டணங்களை அதிகரிப்பதன் ஊடாக சிறு சிறு கட்சிகள் போட்டியிடுவதைத் தடுக்க முடியும். தேர்தல்கள் செலவுகளை குறைத்துக் கொள்ளவும் முடியும் என்று கூறப்படுகிறது. (ச)

## ஜிஎஸ்பி வரிச்சலுகைக்கான இரு தரப்புப் பேச்சு ஆரம்பம்

### 5 வருடங்கள் இடைவெளிக்குப் பின்னர்

கொழும்பு,ஏப்.7

ஐந்து வருடங்களுக்கு பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை வர்த்தகத் துறையின் ஜிஎஸ்பி வரிச்சலுகைக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஐந்து வருடங்களுக்கு முன்னர் மனித உரிமை மீறல்களை காரணம் காட்டிய ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடனான வர்த்தக வரிச்சலுகைகளை மீளப்பெற்றுக் கொண்டது.


**வலுவான நல்லிணக்கம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் இலங்கையுடன் வரிச் சலுகை தொடர்பான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

எனினும் தற்போது வலுவான நல்லிணக்கம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் இலங்கையுடன் வரிச்சலுகை தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதர் டேவிட் டட்லி தெரிவித்தார்.

இரண்டு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் கடந்த டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## பாவனைக்கு உதவாத வெங்காயம் சிக்கியது

கொழும்பு.ஏப்.7



பாவனைக்கு உதவாத 80 தொன் பெரிய வெங்காயம் வெலிசற பொருளாதார மத்திய நிலைய களஞ்சியசாலையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பெரிய வெங்காயத்தின் பெறுமதி 60 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபையின் கம்பஹா மாவட்ட பொறுப்பதிகாரி ரஞ்சித் வீரவர்தன குறிப்பிட்டார்.

இரண்டு கொள்கலன்களில் இருந்தே பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)

## பெண் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான இடம் தங்காலை

### சுற்றுலா சபை கூறுகிறது

*கொழும்பு.ஏப்.7*

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊரான தங்காலை, பெண் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான இடம் என்று இலங்கையின் சுற்றுலா சபை தெரிவித்துள்ளது.*

*தங்காலை கடற்கரை ஹோட்டலுக்கு செல்லும் வெளிநாட்டு பெண் சுற்றுலா பயணிகள் பல்வேறு வழிகளிலும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது.*

*இது தொடர்பில் தெரிவித்த இலங்கை சுற்றுலா சபை, ஏற்கனவே வெளிநாட்டு பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் பாதிக்கப்பட்ட சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது. அதற்கு உரிய தீர்ப்பு வழங்கப்படும் என்று சபை எதிர்பார்க்கிறது.*

*எனினும் இதற்காக தங்காலை பெண் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பற்ற இடம் என்று கூறமுடியாது என்று சபை குறிப்பிட்டுள்ளது.*

*இதேவேளை இந்தியா, மலேசியா, தாய்லாந்து உட்பட்ட நாடுகளில் இடம்பெறுகின்ற சம்பவங்களை பார்க்கின்றபோது இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அதிக சம்பவங்கள் பதிவாகவில்லை என்று சபை குறிப்பிட்டுள்ளது. (ச)*

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற அறுவர் கைது

திருக்கோவில்,ஏப்.7

திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 6 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளதுடன் மின்சார வயர்களும் மீட்கப்பட்டுள்ளன என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை இலங்கை மின்சர சபையும் திருக்கோவில் பொலிஸாரும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு விநாயகபுரம், திருக்கோவில், தாண்டியடி, தம்பிலுவில் ஆகிய பிரதேசங்களில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதலில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 6 பேரைக் கைது செய்துள்ளதுடன் மின்சார வயர்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப் பட்டவர்களை பொத்துவில் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## வெளிநாடுகளில் வருடந்தோறும் 300 இலங்கையர் உயிரிழப்பு

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

கொழும்பு.ஏப்.7

வெளிநாட்டு வேலைவாய்ப்புக் களுக்காக சென்றுள்ள இலங்கையர்களில் வருடந்தோறும் 300 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அதிகமாக மேற்கு ஆசிய நாடுகளிலேயே அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து சுமார் 15 லட்சம் பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர். அதில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

2011 ஆம் ஆண்டு மாத்திரம் 289 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டில் அது 303 ஆக உயர்ந்துள்ளது.

அரேபிய தகவல்களின் படி இலங்கை பெண்களை அதிகமாக உயிரிழக்கின்றனர் என்று கூறப்படுகின்ற போதும், ஆண்களே அதிகமாக உயிரிழக்கின்றனர் என்று இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ச)

**இலங்கையில் இருந்து சுமார் 15 லட்சம் பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.**

## மூன்று ஆண்டுகளுக்கு சீனாவிடம் கை மாறுகிறது அனல்மின் நிலையம்

### அமைச்சரவையிடம் அனுமதி

கொழும்பு.ஏப்.7

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளை மூன்று ஆண்டுகளுக்கு சீனாவிடம் ஒப்படைத்து விட இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சீனாவின் இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயற்பாடுகளை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவையிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட பின்னரே புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படுவது வழக்கமான நடைமுறை. ஆனால் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை கைமாற்றும் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னரே, அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது என்று பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.



நுரைச் சோலை அனல் மின் நிலையம்

அனல்மின் நிலையத்தின் தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள், மற்றும் மின்நிலையத்தின் தரத்தைப் பரிசோதிக் கும் கருவிகளை சீன நிறுவனத்திடம் பெறும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு இலங்கை மின்சார சபையே நிதியை செலவிடும். பராமரிப்பு பணிகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படாது என்று இலங்கை மின்சக்தி அமைச்சின் செயலர் பெர்ணாண்டோ தெரிவித்தார். (ச)

# ‘ரி-20’ இறுதியாட்டம் காரணமாக தொழிலுக்கு செல்லாத மீனவர்கள்

சென்னை, ஏப்.7

நேற்று நடைபெற்ற 'ரி-20' உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் இலங்கை - இந்திய அணிகள் மோதியதால், இலங்கை கடற்படையினரின் தாக்குதல் அச்சம் காரணமாக தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்று செய்தி வெளியிட்டுள்ளது 'த ஹிந்து' நாளிதழ்.

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியை இந்திய அணி வென்றது. அதனால் ஆத்திரமடைந்த இலங்கைக் கடற்படையினர் அன்றிரவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் விக்டஸ், யோன்போல், மாரிமுத்து, அந்தோனிராஜ் ஆகிய 4 பேரையும் சித்ர வதை செய்து படுகொலை செய்தனர் என்று கூறப்படு கின்றது.

இதன் பின்னர், இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவிடம் எப்போதெல்லாம் தோற்கிறதோ அப்போதெல்லாம் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதும், சிறைப் பிடிப்பதும் வாடிக்கையாகி விட்டது.

இவ்வாறான நிலையில் நேற்று மீண்டும் ஒரு முறை இறுதி ஆட்டத்தில் இலங்கை, இந்திய அணிகள் மோதியமையால் மீனவர்கள் அச்சம் காரணமாக தொழி லுக்குச் செல்லவில்லை.

இது தொடர்பில் ராமேஸ்வரம் மீனவர் பிரதிநிதி ஒருவர் கூறும்போது,

"2011 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடை பெற்ற உலகக் கிண்ண

> “
> **இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவி டம் எப்போதெல்லாம் தோற்கிறதோ அப்போதெல்லாம் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதும், சிறைப் பிடிப்பதும் வாடிக்கையாகி விட்டது.**

இறுதி ஆட்டத்தில் இலங்கை தோற்றதால் இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேரை படுகொலை செய்தனர்.

**அச்சம்**

இதில் ஒரு மீனவரின் உடல் யாழ்ப்பாணம் அருகில் கரை ஒதுங்கியது. இரு மீனவர்களின் உடல் தொண்டியிலும், இன்னொருவரின் உடல் புதுக் கோட்டையிலும் கரை ஒதுங்கியது. அவர்களது உடலில் தாக்கி சித்திரவதை செய்யப்பட்ட அடையாளங்கள் இருந்தன. ஒரு மீனவரின் தலையும், ஒரு மீனவரின் கையும் துண்டிக்கப்பட்டும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், மீண்டும் இலங்கையும், இந்தியாவும் இறுதி ஆட்டத்தில் மோதுவதால், இலங்கை கடற்படையினர் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக மீனவர்களில் பெரும்பாலானோர் கடலுக்குச் செல்லவில்லை என்று அவர் குறிப்பிட்டார் என்று அந்த நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (ற-5)

# கல்வியுடன் சமூக மட்டத்திலும் மாணவர் முன்னேற வேண்டும்

## மத்திய மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

வாழ்க்கையில் கல்வி மட்டும் தான் முன்னேற்றம் என்று யாரும்நினைத்துவிடக்கூடாது. கல்வியுடன் சமூக மட்டத்திலும் நாம் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார் மத்திய மாகாண முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான சரத் எக்கநாயக்கா.

இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஹொக்கிப் போட்டியின் இறுதி ஆட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவா சந்திரகாந்தி கருணநாயக்கா தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மத்திய மாகாண முதலமைச்சா சரத் எக்கநாயக்கா,

"பாடசாலைகள் மட்டத்தில் சுமார் நாற்பது லட்சம் மாணவாகள் காணப்படுகின்றார்கள். இவர்களில் ஐந்து சதவீத மாணவர்களே விளையாட்டுத் துறையில் கலந்து கொள்கின்றார்கள் பங்கேற்கின்றார்கள். இத்தகைய நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே எமது நாட்டு ஜனாதிபதி யின் விருப்பமும் ஆவலும் ஆகும். விளையாட்டின் மூலம் சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும். அதன் அடிப்படையில் இந்த விளையாட்டுப் போட்டியை யாழ்ப்பாணத்தில் ஹொக்கிச் சங்கம் நடத்தியதன் மூலம் மாணவர்களிடையே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தன்மை ஏற்பட முடியும்" -என்று தெரிவித்தார். (ற-86)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கொடுமைகளை

வருட நிறைவை முன்னிட்டு பிரிட்டனின் 'த இன்டிபென்டன்' நாளிதழில் எழுதியுள்ள குறிப்பிலேயே பான்கி மூன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

"அப்பாவிப் பொதுமக்கள் பெருந் தொகையாகப் படுகொலை செய்யப்படுகின்ற போது குறிப்பிட்ட நாடுகளின் அரசுகள் அதனைத் தடுக்க விரும்பாது இருக்கின்ற போது. அல்லது அரசுகளே குறித்த வன்முறைகளைப் பிரயோகிக்கின்றவர்களாக இருக்கின்ற போது சர்வதேச சமூகம் என்ன செய்ய முடியும்? இந்த விதமான கொடுமைகள் எப்போதுமே நிகழாமல் தடுப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

**ஐ.நாவின் தோல்விகள்**

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை சர்வதேச சமூகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு நாடுகளின் பிரச்சினைச் சூழல்களுமே அவற்றுக்கென்று சொந்தமான பரிண்ணாமங்களைக் கொண்டவை. ஆனால் அவை ஒவ்வொன்றுமே வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்டதான பன்முகச் சவால்களைக் கொண்டிருக்கின்றன. ருவாண்டா மற்றும் சேர்பனிக்கா போன்ற நாடுகளில், மாதக் கணக்காக ஒவ்வொரு நாளும் 10 ஆயிரம் பேர் வரை படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகள் - சர்வதேச சமூகத்தின் முத்திரை குத்தப்பட்ட தோல்விகள்.

2009 ஆம் ஆண்டின் இலங்கை இறுதிப் போரில் பத்தாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டது கூட - உரிய வகையில் குரல் கொடுக்கவும் - செயற்படவும் தவறிவிட்ட ஐ.நா. சபையின் ஓர் ஒழுங்கு முறையான தோல்விதான்.

**சர்வதேச நீதிமன்றம்**

இத்தகைய பேரழிவுகள் நிகழாமல் தடுப்பதற்குரிய பல் படிமுறை ஒழுங்குகளைச் சர்வதேச சமூகம் செய்துதான் இருக்கின்றது.

ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் ஒருவர் போர்க் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இன்னொரு அரசுத்தலைவர் போர்க் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வழக்குகளை எதிர்கொண்டு நிற்கிறார். இன்னும் பல சர்வதேச மற்றும் ஐ.நா. தீர்ப்பாயங்கள் நடந்து முடிந்த பல கொடுமைகளுக்கான பொறுப்பாளிகளை தேடிக் கொண்டிருக்கின்றன.

'பாதுகாப்பதற்கான பொறுப்பு' (ஆர் ரூ பி) என்ற ஒரு செயற்பாட்டுக் கோட்பாட்டைக் கொள்கையாகக் கொண்டு சர்வதேச சமூகம் இயங்குகின்றது. இத்தகைய கொடுமைகளை வெறும் உள்நாட்டு விவகாரம் என்ற சொல்லிவிட முடியாது. அத்தகைய கொடுமைகள் உலக சமூகத்தின் அக்கறை வரம்புக்கு அப்பாற்பட்டவை அல்ல. ஆனாலும் இது அவற்றைத் தடுப்பதற்கு போதாது.

சர்வதேசம் ஒதுங்க முடியாது. இத்தகைய குற்றக் கொடுமைகளில் தமக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொண்டு, அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காமல் உலக சமூகம் தன்னை சுருக்கிக் கொள்ள முடியாது. தடுக்கக் கூடியவற்றை தடுப்பதற்கும், எமது கண்களுக்கு முன்னால் நடைபெறும் கொடுமைகளை எதிர்கொண்டு நிறுத்துவதற்கும் உலகத் தலைவர்கள் இன்னும் காரியங்களைச் செய்ய வேண்டும்.

அழிவுகளுக்கு முகம் கொடுத்து நிற்கும் மக்களின் இடத்தில் நாம், எம்மை வைத்துப் பார்க்க வேண்டும். மனிதாபிமானமும் கௌரவம் மிக்க ஓர் உலகத்தை எம் எல்லோருக்காகவும் உருவாக்குவது எப்படி என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வாழ்வின் இத்தகைய கடும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு, நாங்கள் அவர்களுடன் இருக்கிறோம் என்பதையும் அவர்கள் தனித்து விடப்படவில்லை என்பதையும் நாம் காட்ட வேண்டும். அவர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான ஓர் உயிர் நாடி அவர்களை நோக்கி வருகின்றது என்பதையும் நாம் காட்ட வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### துன்புறுத்தல்கள்

அச்சுறுத்தல்கள் குறித்த உடனடியாக www.slpc.lk என்ற முகவரியின் ஊடாக தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கபட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள், துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது. பத்திரிகையாளர் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்து நீதிமன்றில் நடவடிக்கை துரிதமாக எடுக்குமாறும் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருக்கக் கூடிய இத்தகைய வழக்குகளை விரைவாக விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறும் அந்தப் பரிந்துரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெனிவாவிலே அண்மையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான மூன்றாவது தீர்மானத்தில் பத்திரிகைச் சுதந்திரம் இங்கு பேணப்படுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டிருந்ததுடன் பத்திரிகைகள் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணைகள் நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. (உ-400)

### நான்கு

றப்பட்டது. இந்தநிலையிலேயே அதற்குரிய விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் முயற்சிகளில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இறங்கியுள்ளது. இந்தப் பொறிமுறையை உருவாக்குவதற்கான செயல் முறைகள் முடிவுற்றதும், அது தொடர்பாக இலங்கை அரசுக்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் முறைப்படி அறிவித்தல் வழங்கி, ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுப்பதுடன், அதுகுறித்து பகிரங்க அறிவிப்பும் வெளியிடப்படும் என்றும் தெரியவருகின்றது.

இதற்கென விசேட நிபுணர் கொண்ட குழு ஒன்றை அமைப்பதற்கு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் குழு துரித கதியில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 27 ஆவது அமர்வின்போது வாய்மொழி மூலமான அறிக்கையை முன்வைப்பதுடன், விரிவான அறிக்கையை அடுத்தாண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப் போவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (ற)

### வலி. வடக்கு

கருத்துத் தெரிவித்த அப்பாத்துரை விநாயமூர்த்தி, வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் மீள்குடியமர்வுக்கு அனுமதிப்பதென்பது சாத்தியமற்றதென யாழ். மாவட்ட இராணுவத்தளபதி உதய பெரேரா தம்மிடம் வெட்டொன்று துண்டிரண்டாக தெரிவித்து விட்டார் என்று கூறினார்.

தையிட்டி மற்றும் மயிலிட்டிப் பகுதிகளையாவது மீள்குடியமர்விற்கு விடுவிக்க வேண்டும் என்று தான் விடுத்த கோரிக்கையையும் அவர் நிராகரித்ததாகத் தெரிவித்த விநாயகமூர்த்தி, தையிட்டி, மயிலிட்டி போன்ற பகுதிகளில் மீள்குடியேற்றம் என்பது இனிவரும் காலங்களிலும் சாத்தியப்படாது என்று கட்டளைத் தளபதி உறுதிபடக் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பலாலி விமானநிலையம் விஸ்தரிப்பு இடம்பெறவுள்ளதுடன் பலாலி விமானநிலையம் சர்வதேச விமான நிலையமாகவும் மாற்றப்படவுள்ளது. எனவே பாதுகாப்பு அதிகரிக்க வேண்டும் அத்துடன் விமானங் களை நிறுத்துவதற்கான இடமும் வேண்டும் எனவே மக்களை மீள்குடியேற்றம் செய்வது என்பது இனிமேல் ஒருபோதும் சாத்தியப்படாது. மக்களை குடியேற்றுவதற்கு மாற்றீடாக குடியேற்ற கிராமங்களை படையினர் அமைக்கவுள்ளதாக உதயபெரேரா தெரிவித்தார்.

வலி.வடக்கில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பில் தொடரும் இடித்தழிப்புக்கள் தான் பதவியேற்பதற்கு முன்னதாக நடந்ததாகத் தெரிவித்த உதய பெரேரா தனது நிர்வாகத்தின் கீழ் அவ்வாறு எந்தவொரு ஆலயமோ மக்கள் குடியிருப்போ இடிக்கப்படமாட்டாது என் றும் உறுதியளித்தார்"- என்று தெரிவித்தார். (ற-101)

### வடமாகாண

கின் பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தனர்.

குறித்த வழக்கு மீதான விசாரணை கடந்த மாதம் 19 ஆம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது பிரதிவாதிகள் யாரும் மன்றில் முன்னிலையாகவில்லை. அதனையடுத்து வழக்கு ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்றைய தினம் பிரதிவாதிகள் அனைவரையும் மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த 4 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே சட்டமா அதிபர் திணைக்களத்தினர், முதலமைச்சர் சார்பிலான பிரதிவாதிகளுக்காக தாம் மன்றில் முன்னிலையாக மாட்டோம் என்று தெரிவித்திருந்தனர்.

இதனால் அன்றைய தினமும் பிரதிவாதிகள் முன்னிலையாகவில்லை. அத்துடன் வழக்கு அடுத்த மாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

### இ.போ.ச. பஸ்

இ.போ.சபைக்குச் சொந்தமான குறித்த பஸ் காரைநகர் நோக்கி யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டுள்ளது. பஸ்ஸும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரது உடலம் தற்போது உடல் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த பஸ்ஸின் சாரதியை கைது செய்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ற-101)

### கிண்ணம்

ஒளிபரப்பப்பட்ட போட்டியை, இரசிகர்கள் குழுமி இருந்து ஆர்வத்துடன் பார்த்ததை அவதானிக்க முடிந்தது.

இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து பலபகுதிகளிலும் வெடி கொளுத்தி ரசிகர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதையும் கேட்க முடிந்தது. (ற)

### டக்ளஸ்

தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்றும் பாதிக்கப்பட்ட நபரே அமைச்சரை நேரில் சென்று சந்தித்து பேச முடியும் என்றும் இல்லையேல் நீதிமன்றத்தையே நாட வேண்டும் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

### நவிப்பிள்ளையின்

வில்லை. அதற்கு இடமளிக்கவும் மாட்டோம்.

எமது வீட்டில் பிரச்சினை இருந்தால் நாம்தான் அதற்குத் தீர்வு காண வேண்டும். எமது நாட்டில் பிரச்சினை இருந்தால் நாம் தான் அதற்கும் தீர்வு காண வேண்டும். அதன் காரணமாகவே ஜனாதிபதியும் எமது அரசும் சர்வதேச சதிகளுக்கு எதிராக - அந்தப் பிரேரணைக்கு எதிராக ஜெனிவாவில் போராடினோம்.

பிள்ளை அம்மையார் அல்ல, அவரது நாய் கூட இலங்கைக்கு வந்து விசாரணை செய்வதற்கு நாம் இடமளிக்கோம் என்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம். ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் சுயாதீனத் தன்மை, இறைமை மற்றும் மகத்துவத்தைப் பாதுகாப்பதற்கும், நாட்டின் அபிமானத்தைப் பாதுகாப்பதற்கும் நியமிக்கப்பட்ட ஒருவராவார். - என்று தெரிவித்துள்ளார். (ற)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று திங்கட்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உதயன் பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
அதில் இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
பி.ப 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

★ ★ ★

தென்மராட்சி,ஏப்.7
சாவகச்சேரி நகரசபை வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று மாலை 6.30 மணிக்கு சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.
மின்னொளியில் நடத்தப் படவுள்ள கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 கரப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன. (ந-9)



95 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நேற்று அரியாலை மத்திய விளையாட்டுக்கழக திறந்த வெளி அரங்கில் இடம்பெற்ற மாட்டு வண்டி சவாரிப் போட்டியில் எல்லைக்கோட்டை நோக்கி சீறிப். பாயும் காளைகள்.

## ஹொக்கிச் சுற்று போட்டியில் அணிகளுக்கிடையே மோதல்

வலி.வடக்கு, ஏப் 7
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியில் இரு பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பில் மூன்று மாணவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

**சஹிராக் கல்லூரி மற்றும் றோயல் கல்லூரி என்பனவே மோதிக் கொண்டன.**

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான போட்டியிலேயே இவ்வாறு கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
சாஹிராக் கல்லூரி மற்றும் றோயல் கல்லூரி என்பனவே மோதிக்கொண்டன.
அதில் மாத்தளை சகிராக் கல்லூரியின் இரண்டு மாணவர்கள் தலையில் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மைதானத்தில் நின்ற இராணுவத்தினரின் நடமாடும் மருத்துவ சேவை நிலையத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது.
மைதானத்தில் அதிக எண்ணிக்கையான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் இருந்தததால் உடனடியாக சண்டை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டதுஎன்று கூறப்படுகின்றது. (ந-86)



கைகலப்பில் ஈடுபடும் அணிகள்

## கரப்பந்தாட்டத் தொடரில் யாழ். பல்கலை சம்பியன்



வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் பல்கலை அணித் தலைவர்

யாழ்ப்பாணம் ஏப்.7
95ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான 'செற் அப்' கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலை அருணோதயா சனசமூக நிலைய முன்றிலில் மின்னொளியில் இடம் பெற்றது.

**யாழ். பல்கலைக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.**

இதில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் யாழ்.பல்கலைக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ந-23)

## கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஏப்.7
சாவகச்சேரி ந்கரசபை வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நேற்று ந்கர சபை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.
சித்திரைப் புத்தாண்டையொட்டி சாவகச்சேரி நகர சபையும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஆறு பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டி ஒன்றை நடத்துகின்றன.
பிரதேசத்தைச் சேர்ந்த 32 அணிகள் பங்கு பற்றும் போட்டிகளை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை நேற்றுக் காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.
சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி புதுவருட தினத்தன்று நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ந-9)

## உதைபந்துச் சுற்றுத் தொடரில் அரியாலை திருமகள் சம்பியன்

யாழ்ப்பாணம் ஏப் 7
95ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு 7 பேர் பங்கு பற் றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற் றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன் தினம் சனிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.
அதில் அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ந-23)

## வளைகோல் பட்டதில் மாணவி படுகாயம்

வலி.வடக்கு, ஏப்.7
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரும் தேசிய 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான ஹொக்கி போட்டியில் வளைகோல் பட்டதில் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனையான எஸ்.தபோதினி (18வயது) மூன்று பற்கள் உடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தால் போட்டியில் சிறிது நேரம் பதற்ற நிலை நிலவியது.
மேற்படி ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் தேசிய ரீதியில் 19 வயது ஆண், பெண்கள் அணிகளென மொத்தமாக 38 அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-86)

## புத்தூர் கலைமதியை வீழ்த்தி ஆவரங்கால் இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம் ஏப் 7
95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான செற் அப் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை அருணோதயா சனசமூக நிலைய முன்றிலில் மின்னொளியில் இடம் பெற்றது .
இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
சிறந்த வீரனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெனகன் தெரிவு செய்யப்பட்டார்.



வெற்றிக் கிண்ணத்துடன் ஆவரங்கால் இ.இ.வி.க.

# சிங்கங்களிடம் சிக்கி சின்னாபின்னமாகியது இந்தியா



## கிண்ணத்தை வென்றது இலங்கை

மிர்பூர்.ஏப்.7
ஐந்தாவது ரி-20 உலகக் கிண்ண இறுதியாட்டத்தில், சங்காவின் துடுப்பாட்டம் கை கொடுக்க இந்திய அணியை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி கிண்ணத்தை முதல் தடவையாக இலங்கை அணி சுவீகரித்தது. இறுதிக்கு வந்த இந்திய அணி வெறுங்கையுடன் திரும்பியது.

ஐந்தாவது ரி-20 உலகக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வந்தது. இதன் இறுதியாட்டத்துக்கு இலங்கை அணியும், இந்திய அணியும் தெரிவாகியிருந்தன. இறுதியாட்டம் டாக்காவிலுள்ள தேசிய விளையாட்டரங்கில் நேற்று இரவு இடம்பெற்றது.

**அச்சமூட்டிய மழை**

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடுமையான மழை பெய்தது. இதனால் ஆட்டம் இடம்பெறுமா என்ற சந்தேகம் தோன்றியிருந்தது மழை ஓய்ந்த பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியதால் 40 நிமிடங்கள் தாமதமாகவே ஆரம்பமாகியது.

முதல் தடவையாக இலங்கை அணியின் இறுதியாட்டத்துக்கு தலைமை தாங்கிய மலிங்க, அதிர்ஷ்டக்கார அணித் தலைவர் என்று வர்ணிக்கப்படும் டோனியை நாணயச் சுழற்சியிலேயே தோற்கடித்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடுவது என்ற மிகச் சரியான முடிவை எடுத்தது. இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது இந்திய [illegible] குலசேகரவின் பந்து வீச்சை, ரஹானே - ரோகத் ஜோடி சுமாராக எதிர்கொண்டது. இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே மத்தியூஸின் மிக வேகத்தில் ரஹானேவின் விக்கெட் தகர்த்தெறியப்பட்டது.

**தவறிய சந்தர்ப்பம்**

தொடர்ந்து நுழைந்தார் ஹோக்லி. குலசேகராவின் பந்துப் பரிமாற்றத்தில் பவுண்டரியுடன் தனது கணக்கைத் தொடக்கினார். முதல் ஆறு பந்துப் பரிமாற்றங்களிலும் இந்திய அணியால் அதிகளவு ஓட்டங்கள் குவிக்க முடியவில்லை.

ஹேரத் வீசிய ஏழாவது பந்துப் பரிமாற்றத்தின் முதலாவது பந்திலேயே ஹோக்லி 11 ஓட்டங்களுடன் கொடுத்த பிடியை மலிங்க தவறவிட்டார். அதைத் தக்க வகையில்பயன்படுத்தியஹோக்லி தனக்கே உரிய பாணியில் வெளுத்து வாங்கினார்.

திட்டு வாங்கிய யுவராஜ் சிறப்பாக நகர்ந்த ரோகித் - ஹோக்லி இணை 50 ஓட்டங்களைத் தாண்டியது. இலங்கை அணியின் பந்து வீச்சு, களத்தடுப்பு வியூகத்தால் இந்திய அணியால் அதிரடிகாட்டமுடியவில்லை. இந்திய அணி 64 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இலக்கு, ஹேரத்தின் சுழலில் வீழ்ந்தது. திறம்படத் துடுப்பெடுத்தாடிய ரோஹித் 26 பந்துகளில் 29 ஓட்டங்களுடன் வெளியேறினார்.



ஆட்டநாயகன் சங்ககார

தொடர்ந்து அதிரடி வீரர் யுவராஜ் களமிறங் கினார். ஆட்டத்தின் போக்கு அதிரடியில் மாறும் என்று இந்திய ரசிகர்கள் கனவு கண்டனர். மறுமுனையில் தனது சிறப்பான அதிரடியில் வெளுத்து வாங்கிய ஹோக்லி அரைச் சதம் கடந்தும் தொடர்ந்தார். குலசேகரா வீசிய பதினாறாவது பந்துப் பரிமாற்றத்தில் ஹோக்லி பவுண்டரி, சிக்ஸர் என்று விளாச ஆட்டத்தின் போக்கு மாறியது. இருப்பினும் அடுத்த கணமே இலங்கை அணி வியூகத்தை மாற்றியமைத்தது.

சசித்திர சேனநாயக்காவின் சுழலும், மலிங்க, குலசேகராவின் 'டெத்' பந்துகளும் இந்திய அணிக்கு எமனாகியது. அதிரடியில் அசத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்ட யுவராஜோ பந்துகளை வீணடித்து இந்திய ரசிகர்களை உச்சக் கடுப்புக்கு கொண்டு சென்றார். ஹோக்லிக்கும் சந்தர்ப்பம் வழங்காமல் தானே பந்துகளை வீணடித்ததால், ரசிகர்களின் நச்சரிப்புக்குள்ளாகினார் அவர்.

**ஏமாற்றிய டோனி**

இறுதிக் கட்டத்தில் அடித்தாக வேண்டிய கட்டத்தில் யுவராஜ் ஓங்கி அடித்த பந்து பெரேராவின் கைக்குள் தஞ்சம் புக 21 பந்துகளில் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த அணித் தலைவர் டோனியும் யுவராஜுக்கு சற்றும் சளைக்காமல் கடைசி நேரப் பந்துகளையும் வீணடித்தார்.

இலங்கையின் இறுதிக் கட்ட மிகச் சிறந்த வியூகம்இந்தியஅணியை130ஓட்டங்களுக்குள்முடக்கியது. ஹோக்லி ஆட்டத்தின் இறுதிப் பந்தில் ரன் அவுட்டாகினார். 58 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 77 ஓட்டங்களை ஹோக்லி விளாசினார். டோனி 7 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சைப் பொறுத்தவ்ரையில் குலசேகரா, மத்தியூஸ், ஹேரத், சேனநாயக்கா, மலிங்க சிறப்பான பந்து வீச்சுப் பெறுதியை பதிவு செய்தனர்.

பதிலுக்கு சுமாரான இலக்கை விரட்ட களமிறங்கியது இலங்கை அணி. குசல பெரேரா, டில்ஷான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். குசல பெரேரா முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அதிரடியாக பவுண்டரி விளாசி இந்திய அணியை கலக்கியடித்தார். இருப்பினும் இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய மோகித் சர்மாவின் பந்து வீச்சில் ஓங்கி அடிக்க முற்பட்டு ஜடேஜாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

**உணர்வுகளின் தருணம்**

தொடர்ந்து நேற்றைய ஆட்டத்துடன் விடை பெறும் மஹேல களமிறங்கினார். மஹேல - டில்ஷான் இணை பொறுப்பாக துடுப்பெடுத்தாடியது. முதல் ஆறு பந்துப் பரிமாற்றங்களையும் தக்க வகையில் பயன்படுத்தி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டேயிருந்தனர். வெற்றியிலக்கை எட்டுவதற்கு ஏற்ற வகையில் பொறுப்பாக துடுப்பெடுத்தாடினர்.

இந்த இணையின் வலுவான இணைப்பாட்டத்துக்கு அஸ்வின் வேட்டு வைத்தார். டில்ஷான் ஓங்கி விளாசிய பந்தை எல்லைக் கோட்டின் அருகே வைத்து ஹோக்லி பிடியெடுத்து விட்டு ஆட்டம் போட்டார். தொடர்ந்து களம் புகுந்தார், ஓய்வு பெறும் மற்றொரு வீரரான சங்ககார.

**பிரியாத இணை**

ஓய்வு பெறும் சங்கா - மஹேல இணை தமது அனுபவத்துக்கு ஏற்ப பொறுப்பாக துடுப்பெடுத்தாடினர். டோனியின் வியூகங்கள் எல்லாம் தவிடுபொடியாகியன. இலங்கையின் வெற்றியை இந்த இணை ஓரளவு உறுதி செய்தது. தேவையான பந்துகளை மாத்திரம் தட்டி ஓட்டங்களை எடுத்து, பலவீனமான பந்து களை பவுண்டரிக்கு அனுப்பி ஓட்டவிகிதத்தைச் சரியாகப் பேணியது.

இருப்பினும் ரெய்னாவின் சுழல் மஹேலவின் இலக்கைப் பறித்தது. 24 பந்துகளில் 24 ஓட்டங்களுடன் மஹேல இறுதியாட்டத்திலிருந்து வெளியேறினார். தொடர்ந்து களம் புகுந்த திரிமன்னே பொறுப்பற்றதனமாக துடுப்பெடுத் தாடி 7 ஓட்டங்களுடன் மிஷ்ராவின் பந்து வீச்சில் வெளியேறினார்.

**மாறிய ஆட்டம்**

78 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்த இலங்கை அணி தடுமாறத் தொடங்கியது. வழமைக்கு மாறாக ஆறாம் இலக்க துடுப்பாட்ட வீரராக பெரேரா நுழைந்தார். ஆரம்பத்தில் சங்கா - பெரேரா இணை பொறுமையாக துடுப்பெடுத்தாடி இழப்பைச் சரிக்கட்ட முயன்றது.

இந்திய அணியோ தனது வியூகங்களை மாற்றியமைக்கவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய இந்த இணை போட்டுத் தாக்கத் தொடங்கியது. பதினைந்தாவது பந்துப் பரிமாற்றத்தை மிஷ்ரா வீசினார். இந்தப் பந்துப் பரிமாற்றத்தில் பெரேரா சிக்ஸரும், சங்கா பவுண்டரியும் விளாச ஆட்டம் முற்றாக மாறியது. இலங்கையின் வெற்றி உறுதியானது.

**வெற்றி**

இதன் பின்னர் எந்தப் பந்தையும் போட்டுத் தாக்கிய இந்த இணை இலங்கையின் வெற்றியை உறுதி செய்தது. 17.2 ஆவது பந்தை அஸ்வின் வீச அடித்தாடி பவுண்டரியைப் பெற்ற சங்கா, தனது இறுதி ஆட்டத்தில் அரைச் சதம் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். அதே பந் துப்பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தை பெரேரா ஓங்கி யடித்து சிக்ஸராக்க இலங்கை அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று முதலாவது தடவையாக ரி-20 கிண்ணத்தை கைப்பற்றியது.

சங்ககார 35 பந்துகளில் 6 பவுண்டரி ஓர் சிக்ஸர் அடங்கலாக 52 ஓட்டங்களையும், பெரேரா 14 பந்துகளில் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் யாரும் சோபிக்கவில்லை.

ஆட்டநாயகனாக சங்ககாரவும், தொடர் ஆட்டநாயகனாக ஹோக்லியும் தெரிவானார்கள். (5)



# நேற்றைய உலகக் கிண்ண இறுதியாட்டத்திலிருந்து

**ஆட்டத்தின் துளிகள்**

* மலிங்க அணித் தலைவராகப் பொறுப்பேற்ற முதலாவது தொடரிலேயே உலகக் கிண்ணத்தை இலங்கை அணிக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.
* இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதன் பின்னர், 18 வருடங்களில் மீண்டுமொருமுறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றியிருக்கின்றது.
* தொடர் ஆட்ட நாயகன் விருது வென்ற, தோல்வியடைந்த இந்திய அணியின் வீரர் விராட் ஹோக்லி கருத்துத் தெரிவிக்கையில்: " சமி (மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர்) சொன்னது நடந்து விட்டது. கடவுள் இலங்கை கிண்ணம் வெல்ல வேண்டும் என்றுதான் நினைத்து இருக்கிறார்."
* 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ரி-20 தொடர் இடம்பெற்ற போது பாகிஸ்தான் சம்பியன். 2010 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் உலகக் கிண்ணம் இடம்பெற்ற போது இங்கிலாந்து சம்பியன். 2012 ஆம் ஆண்டு இலங்கையில் உலகக் கிண்ணம் இடம்பெற்ற போது மேற்கிந்தியத்தீவுகள் சம்பியன். 2014 ஆம் ஆண்டு பங்களாதேஷில் உலகக் கிண்ணம் இடம்பெற்ற போது இலங்கை அணி சம்பியன்.
* இலங்கை அணி இதுவரையில் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்ற 4 ஆட்டங்களையும் காண்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகச் சென்றிருந்தார். இந்த இறுதி ஆட்டத்தைப் பார்ப்பதற்கு அவர் செல்லவில்லை. இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.
* இந்திய அணி இறுதியாட்டத்துக்கு தெரிவாகி இரண்டாவது தடவையாக கிண்ணத்தை இழந்திருக்கின்றது. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்று தோல்வியடைந்திருந்தது.




குட்டைப சங்கா



தடுமாறும் யுவராஜ்



திரிமன்னேயின் ஆட்டமிழப்புக்கு கூக்குரலிடும் டோனி



அடித்தாடும் ஹோக்லி

## இங்கிலாந்திடம் இருந்து ஹோக்லிக்கு காதல் தூது


ஹோக்லி

இந்தியக் கிரிக்கெட் அணியின் இளம் வீரர் ஹோக்லிக்கு, இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியில் இருந்து காதல் தூது வந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த 2ஆவது அரையிறுதியில் ஹோக்லியின் அதிரடியால் இந்தியா இறுதிப் போட்டிக்கு நுழைந்தது. இந்த ஆட்டம் அவரின் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

பல்வேறு போட்டியின்போதும் மைதானங்களில் ரசிகைகளிடமிருந்து விராட்டுக்குக் காதல் தூது வந்த வண்ணம் உள்ளது.

அதேபோல் அவரின் ஆட்டம் இங்கிலாந்து மகளிர் அணியின் 22 வயதான டேனியல் யாட், விராட் ஹோக்லியின் ருவிட்டர் பக்கத்தில் ஹோக்லி என்னைத் திருமணம் செய் என தனது பங்குக்கு ருவிட்டைத் தட்டி விட்டுள்ளார்.

மேலும் அதிகமாக விராட்டுக்கு ரசிகர்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (கு)

95ஆவது
அரியாலை சுதேசிய
திருநாட் கொண்டாட்ட விழா 2014

50Km சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்)
- வடமாகாண ரீதியிலானது
10Km சைக்கிள் ஓட்டம் (பெண்கள்)
- உள்ளூர்
05Km வீதி ஓட்டம் (பெண்கள்)
- உள்ளூர்
10Km வீதி ஓட்டம் (ஆண்கள்)
- உள்ளூர்
90000/= ரூபா பெறுமதிமிக்க
பரிசில்களைக் கொண்டது.
13.04.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 6.00 மணிக்கு அரியாலை மத்திய
விளையாட்டுக் கழக மைதான முன்றிலில்
ஆரம்பமாகும்.
(A9 வீதி, அரியாலை, நெடுங்குளம் சந்தி)
தொடர்புகளுக்கு : 077 778 2192, 077 309 5745
(46598)(7.6.3)

தேவை. நல்ல நிலையில் உள்ள
பாவித்த லப்டொப்கள் தேவை.
GUNAA BEST PC 077 9086737
52, HOSPITAL ROAD, JAFFNA.

கணினி திருத்தம் உங்களது விடுகளுக்கே வந்து
கணினிகள் திருத்தம் செய்து தருகிறோம்
அழையுங்கள். 077 9086737
Computer Repair
GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.

A/L 2016
ஆரம்பம் APRIL 09 புதன்
கலைப்பிரிவு 7.30am
வர்த்தகப்பிரிவு 2.00pm
யூனிவேர்சல் கந்தர்மடம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில்
இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 12.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாத விடின்
முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

'புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின்
மதிநுட்பமான தெரிவு'
'ஞானோதய அக்கடமி'
A/L 2016
கலை, வர்த்தக, தொழில்நுட்பப் பிரிவுகள்
* ஆரம்பம்: 10.04.2014 (வியாழக்கிழமை) காலை 08.00 மணி
* திறமையும், அனுபவமும் வாய்ந்த பிரபல ஆசிரியர் குழாம்
* தொழில்நுட்ப பாடங்கள் தொடர்பில் கணினி மற்றும் பல்லூடகம் (Multimedia) பயன்படுத்தும் வசதி.
* செயன்முறையூடான கற்பித்தல்.
அனுமதிகளை தினமும் 08.00 - 06.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நிர்வாகம்
(46594)(12.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.